கல்கி

மியூஸிக் மட்டும் போதும்!



KALKI
30.6.96
ரூ. 3.00

முதியோர் இல்லங்கள்:

சூப்பர் பிஸினஸ்?

■ மீனவர் வாழ்வில் தொடரும் புயல்!

முதியோர் இல்லங்கள் :

சூப்பர் பிஸினஸ்!

"இருபதாயிரம் ரூபாய் முன் பணம். பத்தாயிரம் நன்கொடை. தவிர, மாதம் நாலாயிரம் ஃபீஸ். சிங்கிள் ரூம் டீலக்ஸ் வசதிகளோடு. டீலக்ஸ் வேண்டாமென்றால் கொஞ்சம் குறையும். யாரைச் சேர்க்கப் போகிறீர்கள்?"

- நம்மிடம் அவர் அடுக்கத் தொடங்கியதும் அசந்து போனோம். நாம் விசாரித்தது ஒரு பேச்சுலர் விடுதியிலோ, நட்சத்திர ஓட்டலிலோ அல்ல! அரும்பாக்கத்திலுள்ள எஸ்.வி. முதியோர் இல்லத்தில்!

'A class bath attached rooms available' என்கிற இவர்களது நாளிதழ் விளம்பரம் பார்த்து விட்டு, வியந்து, 'விளம்பரம் செய்கிற அளவுக்கு முதியோர் இல்லங்களில் அப்படியென்ன விசேஷம்' என அறிந்து வரப் போனபோது தான் மேற்படி பதில் கிடைத்தது. சேவை மனப்பான்மையுடன் முதியோர் இல்லங்கள் நடத்தும் நிலைமாறி இது ஒரு பிஸினஸ் ஆகிவிட்டதாகத் தோன்றியது, அங்கே சென்றபோது.

கருணா என்கிற பெண்மணியும் அவரது கணவரும் நடத்துகிற இந்த இல்லம், எட்டு பெரிய கட்டடங்களுடன் சகல வசதிகளுடனும் அமோகமாக இயங்கி வருகிறது. நான்கு வருடங்கள் முன்புதான் ஆரம்பித்ததாகச் சொன்னாலும் மிக 'லாபகரமாக'வே இயங்கி வருவது பார்த்ததும் பளிச்சென்று தெரிந்தது.

கையில் நிறைய பணம் இருந்தும் பரா







• பாமா நடராஜன்



• சாந்தி

மரிக்க நபர்கள் இல்லாத வயோதிகர்கள், இங்கே வந்து, ஒரு சுற்றுலா விடுதியில் தங்கி இருப்பது போல உல்லாசமாக இருக்கிறார்கள். ஷேர் மார்க்கெட், நிதி நிறுவன முதலீடு, எது லாபம் என்பது போன்ற பேச்சுக்களும், அவ ரவர் விருப்பம் போன்ற உல்லாசங்களுமாகக் களை கட்டி இருக்கிறது இந்த முதியோர் இல்லம். பணத்தைக் கொடுத்துவிட்டு, இது மாதிரி இடங்களில் வந்து விருப்பப்படி உல்லாசமாக இருக்கலாம் போல!

நாட்டில் மிச்சமிருக்கிற ஒருசில புனிதமான விஷயங்களில் ஒன்றான முதியோர் இல்லங்கள் இப்படி பணம் கொழிக்கும் பிஸினஸ் ஆகி விட்டது அறிந்து கொஞ்சம் வேதனையாக இருந்தது.

வேதனையை அதிகப்படுத்தினார் 'உதவும் கரங்கள்' வித்யாகர். இவர் 'முதியோர் காப் பகம்' என்று நடத்தாவிட்டாலும் உடல் நிலை மோசமடைந்த அனாதையான வயோதிகர் களுக்காக 'கருணாலயம்' என்ற பெயரில் மதுர வாயிலில் பெண்களுக்காகவும் வேலப்பன் சாவடியில் ஆண்களுக்காகவும் இலவச இல்லங் கள் நடத்தி வருகிறார்.

"முதியோர் இல்லம் நடத்துவது நல்லதொரு பிஸினஸ் ஆகிவிட்டது. எக்கச்சக்கமாகப் பணம் வாங்கிக் கொள்கிறார்கள் என்பதெல்லாம் கூட ஒருபுறம் இருக்கட்டும். அப்பாவியான முதி யோர்களை இவர்கள் எப்படியெல்லாம் ஏமாற்றுகிறார்கள் தெரியுமா?" என்று ஓர் அதிர்ச்சித் தகவல் சொன்னார் வித்யாகர்.

செங்கல்பட்டைச் சேர்ந்த, குடிப்பழக்கம் உள்ள ஒரு முதியவர், வீட்டில் கோபித்துக் கொண்டு வித்யாகரிடம் வந்து தன்னைச் சேர்த் துக் கொள்ளக் கேட்டிருக்கிறார். உறவினர்கள் இருந்தால் வித்யாகர் சேர்த்துக் கொள்வதில்லை என்பதால் நிறையப் பணம் வாங்கிக் கொள்ளும் ஒரு முதியோர் இல்லத்தில் போய்ச் சேர்ந்திருக் கிறார்.

அங்கே, அவர் உல்லாசமாகக் குடித்துக் கிடந்த ஒரு சந்தர்ப்பத்தில், அவரிடமிருந்து 'பவர் ஆஃப் அட்டர்னி'யில் கையெழுத்து வாங்கிக் கொண்டு, அவரது வீட்டையே அபகரித்துக் கொண்டு விட்டார்களாம் அந்த முதியோர் இல்லத்து நிர்வாகிகள்!

"சில இன்சூரன்ஸ் நிறுவனங்கள் 'எங்களிடம் சேமி யுங்கள், ஓய்வுக் காலத்தில் இதைக் கொண்டு நிம்மதி யாக முதியோர் இல்லத் தில் ஜாம் ஜாம் என்று இருக்கலாம்' என்று விளம் பரங்கள் செய்கின்றன. இவர்களுக்கும் இது போன்ற ஆடம்பர முதியோர் இல்லங்களுக்கும் ஏதாவது 'டை-அப்' இருக்கிறதோ என்று சந்தேகமாக இருக்கிறது!" என்றார் வித்யாகர்.

நல்லபடியாக நடத்தப்படும் இல்லங்களும் இருக்கின்றன. அவற்றுக்கும் டிமாண்ட் இருக் கத்தான் செய்கிறது. இதற்கு என்ன காரணம்...?

'விஸ்ராந்தி' இல்லம் நடத்தும் சாவித்ரி வைத்தி, "தவறு, இளைய தலைமுறையினர் மீது மட்டும் அல்ல, வீட்டில் அட்ஜஸ்ட் பண்ணிக் கொள்ள முடியாத முதியோர்கள் தாங்களாகவே இல்லங்களைத் தேடி வந்து விடுகிறார்கள்" என் றார்.

"விஸ்ராந்தியில் சேர வருபவர்களிடம் நான் முதலில் இங்குள்ள குறைகளைத்தான் சொல் கிறேன். தண்ணீர் கஷ்டம், அத்தனை பேருக் கும் சேர்த்து ஓரிரு நாளிதழ்கள் மட்டுமே வாங்கப்படும் சிக்கனம், சரியாகப் பத்தரை மணிக்குச் சாப்பிட வந்து விட வேண்டும் என் கிற கண்டிஷன், மருத்துவ செலவுகளுக்கு மட் டும் அவரவரே பணம் தந்து விட வேண்டும் என்கிற விதி, - இவற்றைச் சொல்லி விடுவேன். இதையெல்லாம் கேட்ட பிறகு, 'வீடே தேவலை' என்று சிலர் போய்விடுவார்கள்!" என்றார் சாவித்ரி வைத்தி.

பெரும்பாலான முதியோர் இல்லங்கள் ஏன் பெண்களுக்காகவே அமைந்துள்ளன?

"பொதுவாகவே ஆண்கள் தம் வயோதிக காலத்தில் வீட்டில் அனுசரித்துப் போகிற அள வுக்குப் பெண்களால் முடிவதில்லை. அதனால் தான் பெண்கள் நிறையப் பேர் முதியோர் இல் லங் களை நாடி வருகிறார்கள்" என்றார் 'நிம்மதி' முதியோர் இல்லம் நடத்தி வரும் பாமா நட ராஜன்.

மாநில அரசு மற்றும் ஹெல்ப்ஏஜ் இந்தியா ஆகியவற்றின் உதவியுடன் இயங்கி வரும் 'நிம்மதி', போரில் இறந்த வீரர்களின் மனைவி களுக்கான காப்பகம்தான் என்றாலும், மூன்றில் ஒரு பங்கு எண்ணிக்கையில், மற்ற முதியவர் களையும் சேர்த்துக் கொள்கிறார்கள்.

நகரில் மூலைக்கு மூலை முதியோர் இல்லங் கள் முளைத்து விட்ட சூழ்நிலையில், என்ன காரணங்களால் முதியோர்கள் இங்கே வர விரும்புகிறார்கள் எனக்கண்டறிய, ஆங்காங்கே சில முதியோர்களிடமும் பேச்சுக் கொடுத்தோம்.

• சாவித்ரி வைத்தி





• வித்யாகர்



• சந்திரசேகரன்



• வேதாசலம்



• வாசுதேவன்

"ரிடையரான அடுத்த வருடமே கண் பார்வை மங்கத் தொடங்கி விட்டது. நிறைய செலவு. ஒரு அளவுக்கு மேலே 'இனி இதற்கு மேல் செலவு செய்தும் பயனில்லை' என்று டாக்டர்கள் சொல்லி விட்டார்கள். இப்போது முழு பார்வையும் போய் விட்டது. ஒரு பிள்ளை, இரண்டு பெண்கள் இருக்கிறார்கள்தான். எதற்கு சிரமம் தர வேண்டும் என்றுதான் இங்கே வந்து விட்டேன்" என்றார் அடையாறு 'சாய்சரணி'ல் வசிக்கிற வேதாசலம்.

பள்ளியில் படிக்கிற போதே கண் பார்வை இழந்த சந்திரசேகர், திருமணமே செய்து கொள்ளவில்லை!

தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றி ஓய்வு பெற்ற இவர், பத்து வருடங்கள் தம் தம்பியுடன் இருந்துவிட்டு, பின் சாய் சரணுக்கு வந்து விட்டார்.

"என் ஒரே பெண் கல்யாணமாகி விசாகப்பட்டிணத்தில் இருக்கா. அவ மாமியாரும் பாவம் விதவை. கூட இருக்காங்க. என் மனைவி போய்விட்ட பின் வேறு வழி இல்லாமல் என் பென்ஷன்லேருந்து ஒரு தொகை இங்கே குடுத்துட்டு நிம்மதியா இருக்கேன்" - இது வாசுதேவன்.

"சிதம்பரத்தில் என் கணவர் ஒரு ஹோமியோபதி டாக்டர். என்னை கைகழுவி விட்டு, அவர் வேறொரு பெண்ணுடன் வாழத் தொடங்கி விட்டார். நான் என் மாமியாருடன் தொடர்ந்து வசித்து வந்தேன். அவரும் இறந்து விடவே இங்கே வந்து விட்டேன்!" என்றார் செல்லம்மாள்.

'நிம்மதி'யில் வசிக்கிற இவர் தவிர சேது அம்மாள், ஞானாம்பாள், ராமதாஸ் அம்மாள் என நாம் சந்தித்த வேறு சில பெண்கள், முதியோர் இல்லத்தில் சேரக் காரணம் - பராமரிக்கப் பிள்ளைகள் இல்லாததே!

பலரைச் சந்தித்ததில் வித்தியாசமான ஆனால் பொதுவான ஒரு விஷயத்தை உணர முடிந்தது. நாம் சந்தித்த யாருமே - தம் கஷ்டத்தை விவரித்த போதிலும் கண்ணீர் சிந்தவில்லை! இலேசான வருத்தம் கூட இல்லை.

கையில் சல்லிக்காசு கூட இல்லாமல் இலவச முதியோர் இல்லத்தில், தங்கிய மூதாட்டியும் சரி.... நாம் முதலில் பார்த்த அரும்பாக்கம் இல்லத்தில், பங்கு மார்க்கெட்டில் எப்படிப் பணம் பண்ணலாம் என்று திட்டமிட்டுக் கொண்டிருந்த முதியவரும் சரி... வாழ்க்கையை அதன் போக்கில் ஏற்கப் பழகி விட்டிருக்கிறார்கள்! உறவுகள் இல்லாமல் போனது குறித்து யாருக்கும் வருத்தம் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் எல்லோருக்கும் மரணம், நோய் பற்றிய பயம் மட்டும் இருப்பதை உணர முடிந்தது.

"வீட்டில் மற்றவர்களுடன் ஒத்துக் கொள்ளாவிட்டால் டக்கென்று முதியோர் இல்லத்துக்குக் கிளம்பி விடுகிறார்கள். குறிப்பாக நடுத்தரக் குடும்பங்களில் இது அதிகமாகி வருகிறது..." என்கிறார் சாவித்ரி வைத்தி. சண்டை போட்டுக் கொண்டு முதியோர் இல்லத்துக்குப் போய்ச் சேரும் யோசனை பல சமயங்களில், கதை, சினிமா, டி.வி. நிகழ்ச்சிகளிலிருந்தே கிடைக்கிறது. எனவே மீடியா இன்னும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்..." என்கிறார் இவர்.

"கணவன் - மனைவி இருவருமே வேலைக்குச் செல்பவர்களாக இருக்கும் பட்சத்தில் வீட்டிலுள்ள முதியோர்களை இங்கே கொண்டு வந்து சேர்க்க, அதுவே அவர்களுக்கு ஒரு காரணமாகி விடுகிறது. தவிர, அடிக்கடி மாற்றலாகும் உத்தியோகம், கிளைமேட் மோசம் போன்ற பல நொண்டிச் சாக்குகளையும் சொல்லி எப்படியாவது தம் பெற்றோரை இங்கே கொண்டு வந்து விட்டுப் போய் விடுவோரும் உண்டு" என்கிறார் சாயி சரணை கவனித்துக் கொள்ளும் சாந்தி.

ஆதரிக்க ஆட்கள் இல்லாத சூழ்நிலையில் முதியோர்கள், தங்களுக்கான இல்லங்களைத் தேடிப் போவது தவிர்க்க இயலாததுதான். ஆனால் அத்தியாவசியத் தேவை என்ற எல்லையைக் கடந்து அதுவே வர்த்தகமாகி சில இடங்களில் ஊழல், கொள்ளை என மிக விஸ்தாரமாக விரிந்து பரந்து விட்ட முதியோர் இல்லங்களின் இந்த 'வளர்ச்சி'யைப் பார்க்கும்போது, அதிர்ச்சி ஏற்படுகிறது. சமூக நலத்துறையின் கவனத்துக்குரிய பிரச்னை இது!

• சேது அம்மாள்



• ராமதாஸ் அம்மாள்



• செல்லம்மாள்



— ஜி.எஸ்.எஸ்.

படங்கள் : பேஜர் கே. மூர்த்தி

மியூசிக் மட்டும்

வயது பதினாலு. ஹோலி ஏஞ்சல்ஸில் படிப்பு. பத்தாங்கிளாஸ். இசையில் கொஞ்சம் போல் ஆர்வம். கர்னாடிக் மியூஸிக் படித்திருக்கிறார். மேற்கத்திய சங்கீதத்தில் விருப்பம். ஹிந்துஸ்தானியும் பரிச்சயமுண்டு. பியானோ கிளாஸுக்குப் போகிறார்...

ஷாலினியைப் பற்றிய இந்த விவரங்களுக்கு அதிக முக்கியத்துவம் இல்லை. சென்னை எல்டாம்ஸ் ரோடின் சாதாரண சந்து ஒன்றில் வசிக்கிற ஷாலினி, அடுத்த வாரத்தில் ஏதேனும் ஒரு தினம் புகழ்பெற்ற சானல் 'வி'யில் மைக்கைப் பிடித்துக் கொண்டு, மடோனா, அலிஷா, மைக்கேல் ஜாக்ஸன் போல பாப் பாடப் போகிறார் என்றால் நிச்சயம் வியப்பீர்கள். ஷாலினி, சானல் 'வி'யில் பாடப் போகிற முதல் தமிழன்! நாட்டில், நூற்றுக்கணக்கான பாப் சங்கீதர்களின் இறுதி லட்சியமாக இது இருக்க, யூனிஃபாரம் மாட்டிக் கொண்டு சமர்த்தாகப் பள்ளிக்குப் போய் வந்து கொண்டிருக்கும் ஷாலினிக்கு எப்படிக் கிடைத்தது இந்த வாய்ப்பு?

ரிஷிமூலம் பார்த்தால், ஷாலினி ஆர்.டி. பர்மனுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும். அது, '1942- லவ் ஸ்டோரி' படம் ரிலீஸான சமயம். ஆர்.டி. பர்மன், அந்தப் படத்துக்கு இசையமைத்த கையோடு இறந்து விட, அவரது நினைவாக அந்தப் பட நிறுவனம் ஒரு இசைப் போட்டி நடத்தியது.

அதில் கலந்து கொள்ள விரும்பி, ஒரு கேஸட் நிறையப் பாடி அனுப்பினார் ஷாலினி. அவரது நேரம் - கேஸட் வந்து சேரக் கடைசி தேதி முடிந்து விட, போட்டியில் கலந்து கொள்ள முடியாமல் போய் விட்டது!



* மாதவதாஸ்

ஆனாலும் எதேச்சையாக அந்தக் கேஸட்டைக் கேட்க நேர்ந்த மேக்னா சவுண்ட் நிறுவனத்தின் பம்பாய் பிரிவு சவுண்ட் இஞ்சினீயர் ஒருவர், ஷாலினியின் குரலில் சொக்கி, தம் நிர்வாக இயக்குனர் மாதவதாஸிடம் அந்தக் கேஸட்டைத் தந்து கேட்கச் சொல்லி இருக்கிறார்.

மாதவதாஸுக்கு ஷாலினியின் குரலும் இசை ஞானமும் பிரமிப்பு ஊட்ட, சென்னையில் அவர் அட்ரஸ் தேடிப் போய் பேசியிருக்கிறார். "நான் கேட்டது ஒரே ஒரு கேள்விதான். 'நீ எங்கள் நிறுவனத்துக்குப் பாடுகிறாயா?'

'அப்பா, அம்மாவைக் கேளுங்கள்; பள்ளியில் பர்மிஷன் வாங்க வேண்டும்' என்பது போன்ற நான் எதிர்பார்த்த எந்த ஒரு வழக்கமான பதிலும் அவளிடம் இல்லை. ஒருகணம் கூட யோசிக்காமல் 'அதற்கென்ன, பாடுகிறேன்' என்றாள்."

"எதற்கும் உன் பெற்றோரிடம் கேட்டுச் சொல்" என்று இழுத்திருக்கிறார் மாதவதாஸ். 'பாடப் போவது நான்; ஒருபோதும் அவர்கள் மறுக்கவோ தயங்கவோ மாட்டார்கள். எப்போது, எங்கே வரவேண்டும் என்று



சொல்கிறீர்களா...'' என்று போல்டு லெட்டரில் கேட்டாராம் ஷாலினி!

லதா மங்கேஷ்கர் மேல் வெறித்தனமான ஈடுபாடு. 'இங்கே பாடுபவர்களில் சித்ராவைப் பிடிக்கும்' என்கிற ரகசியக் குரல் பதில்– இருந்தாலும் ஷாலினியின் பாட்டில் யார் சாயலும் இல்லை. படியேறிப் போய் மொட்டை மாடியில் வற்றல் உலர்த்துவது போல சுலபமாக, விரும்பும் அளவு வரை மிக உச்சஸ்தாயியில் சஞ்சரிக்கிறார். வழுக்கிக் கொண்டு கீழே இறங்கி நதிச்சுழல் மாதிரி ஜாலம் காட்டுகிற அந்த லேசான கருதி தட்டுகிற குரலை யாரும் இலக்கணத்துக்காக வரிந்து கட்டிக் கொண்டு குற்றம்சாட்டப் போவதில்லை. ஷாலினியின் பிளஸ் பாயிண்டே அதுதான்.

"சம்பிரதாயங்களில் என்ன இருக்கிறது? அவள் குரலில் ஒரு மின்சாரம் தெரிகிறதல்லவா? இங்கே இன்னும் கொஞ்ச நாளில் சினிமா நட்சத்திரங்களை விட ஷாலினி பாப்புலர் ஆகப் போகிறாள்'' என்றார் மாதவதாஸ்.

போதும்!

அறை விளக்குகளை அணைத்து, 'வி'க்குத் தாம்





"நீ லவ் லெட்டர் எழுதினத்துக்கு உன் அப்பா அடி வாங்கினாரா. ஏன்?"

"ப்ராக்ரஸ் ரிப்போர்ட்டிலே என் அப்பா கையெழுத்தை நானே போடற ஞாபகத்திலே, லெட்டர் எழுதி அவர் கையெழுத்தைப் போட்டு அனுப்பிட்டேன்!"

– வெ. ராஜாராமன்

அனுப்பவிருக்கிற கேஸட்டைப் போட்டார் மாதவதாஸ். ஒரு சின்ன கதையைப் பின்னணியாகக் கொண்ட அதிவேக ரிதம் கொண்ட பாடல். வி சானலின் பிரசித்தி பெற்ற 'மூன்று வினாடிக்கொரு வெட்டு' சித்தாந்தப்படி துண்டு துண்டாக எக்கச்சக்க ஷாட்டுகள். இசகுபிசகான கேமராக் கோணங்கள். ஓரிரு புடைவை, மல்லிகைப் பூ தெரிவது மட்டுமே நம் பாட்டு என்பதை ஞாபகப்படுத்துகின்றன.

சுழன்று சுழன்று மைக் பிடித்துப் பாடிச் சிரிக்கும், சிரித்துப் பாடும் ஷாலினியை நம் ஊர் சினிமா இயக்குநர்கள் விட்டு வைக்கப் போவதில்லை என்று நினைத்துக் கொண்டிருக்கும்போதே "நடிப்பதற்கெல்லாம் விருப்பமில்லை. ம்யூஸிக் மட்டும் போதும்" என்று பதில் வருகிறது.

சினிமாவில் பின்னணி பாடலாமே என்றால் மேக்னா சவுண்டில் மூன்று வருஷ கான்ட்ராக்டாம்.

வருடத்திற்கு மூன்று என்று ஒன்பது ஆல்பங்கள் வரப் போகின்றன!

அது சரி, இங்கிருக்கிற சன் மியூசிக், ராஜ் மியூசிக் சானல்களையெல்லாம் விட்டு விட்டு 'வி'க்குப் போகத் தூண்டிய விஷயம் என்ன என்று மாதவதாஸிடம் கேட்டபோது பதிலாக ஓர் ஏளனப் புன்னகை வந்தது.

"இங்கே இசை என்பது சினிமாவின் ஒரு பகுதி என்பதாக ஆகி விட்டது. சினிமாப் பாடல்களை மட்டுமே நம்பி டீவி நடத்தும் நிலை நம் ஊரைத் தவிர வேறெங்கும் இல்லை. உலகளாவிய புகழ்பெற்ற மைக்கேல் ஜாக்ஸனும், மடோனாவும் சமந்தாஃபாக்ஸும், பாபா சேகலும் அலிஷாவும் எந்தவொரு சினிமாக் கலைஞரை விடவும் மக்களிடம் அதிக செல்வாக்கும் வரவேற்பும் பெறுகிறார்கள் என்னும் போது அப்படியொரு கலாசாரம் ஏன் தமிழ்நாட்டிலும் உருவாகக் கூடாது? இங்கே வறுமையில் அல்ல; திறமையில் வாடும் பல இளைஞர்கள் இருக்கிறார்கள். அவர்களைத் தேடிப் பிடித்து, உலக அரங்கில் நிறுத்தப் போகிறோம். இது ஆரம்பம்தான்" என்றார்.

ஷாலினியின் சந்தோஷம், தாம் உலகம் முழுக்கத் தெரியப் போகிறோம் என்பதில் கூட அதிகம் இல்லை.

நண்பர்களின் வியப்பு. பத்திரிகைச் செய்திகளில் பார்த்துவிட்டு 'ஷாலினி நீ பேப்பர்ல வந்திருக்கே!' என்று கிரீச் குரலில் உரக்கக் கத்தி சந்தோஷப்படும் போது பெருமையாக இருக்கிறது என்கிறார். முகத்தில் கவிகிற வெட்கம்!

பெரிய இசைக் குடும்பப் பின்னணியெல்லாம் இல்லை. ஷாலினியின் அம்மாவுக்குக் கொஞ்சம் பாட வரும். அவ்வளவுதான்.

"அம்மாவுக்குப் பெரிய பாடகியா வரணும்னு ஆசை. முடியாமல் போனதால் இப்போ எனக்குக் கிடைத்திருக்கிற வாய்ப்பை ஒழுங்காகப் பயன்படுத்திக் கொள்ள மிகவும் ஒத்துழைக்கிறார்கள்" என்கிறார் ஷாலினி.

மெட்ராஸில் வளரும் பெண் என்றாலும் உத்திரபிரதேச அப்பா என்பதால் வீட்டில் ஆங்கிலமும் இந்தியுமாகப் பேசிப் பேசி, "தமிழ் கொஞ்சம் தெரியும்" என்று நாணப்பட்டுச் சொல்லும் ஷாலினி.... பள்ளிப் படிப்பே முழுதாக முடியாத சூழலில் இனி படிப்புக்கெல்லாம் படிப்படியாக குட்பைதானா என்றால் "யார் சொன்னது?" என்று சீறி எழுந்து "இந்த எக்ஸாம் வரைக்கும் ஃபர்ஸ்ட் கிளாஸ்" என அவசரமாக பதில் சொல்லும் ஷாலினி...

இந்தத் துறையில் உலக அரங்குக்குப் போகும், மிகக் குறைந்த வயதுள்ள இந்திய - தமிழ்ப் பெண் என்பது போன்ற பெருமை உணர்வுகளால் பாதிக்கப்படாமல் "நல்லா பாடியிருக்கேனா?" என்று நாம் கேஸட் கேட்டதும் ஆர்வக் கேள்வி போடும் ஷாலினி...

'ஷாலினி.... ஷாலினி... ஷாலினி...'

இன்னும் கொஞ்ச நாளில் பாப் இசைப் பிரியர்கள் இப்படித்தான் நாமஜெபம் செய்யப் போகிறார்கள்!

- ஔரங்கசீப்

கல்கி கிருஷ்ணமூர்த்தி அறக்கட்டளை

ஏழை மாணவர்களுக்கு உதவி : ரூ. 70,000



சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டதைக் காட்டிலும் இந்தக் கல்வி ஆண்டுக்கு (96-97) ரூ. 15,000 அதிகரித்து மொத்தம் ரூ. 70,000 உதவித் தொகை வழங்கப்படவிருக்கிறது. இத் தொகை பின்வருமாறு விநியோகமாகும் :

●● பட்ட மேற்படிப்பு அல்லது ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ள மாணவர்கள் ஆறு பேருக்குத் தலா ரூ. 1500 வீதம் ரூ. 9000.

●● இசை அல்லது நாட்டியம் பயிலும் இருவருக்குத் தலா ரூ. 1000 வீதம் ரூ. 2000.

●● இருபது கல்லூரி மாணவர்களுக்குத் தலா ரூ. 1000 வீதம் ரூ. 20,000.

●● முப்பத்தியாறு மேல்நிலைப்பள்ளி அல்லது பாலிடெக்னிக் மாணவர்களுக்குத் தலா ரூ. 750 வீதம் ரூ. 27,000.

●● இருபது உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்குத் தலா ரூ. 600 வீதம் ரூ. 12,000.

இவற்றுள் அமரர் கல்கி படித்த மூன்று பள்ளிக்கூடங்களில் மூன்று மாணவர்களுக்கு மூன்று உதவித் தொகைகள் ஒதுக்கப்படுகின்றன. மீதமுள்ள உதவித் தொகைகளைப் பெற, தமிழகமெங்கிலும் உள்ள கல்வி நிலையங்களில் படிக்கும் மாணவர்களிடமிருந்து தபால் மூலம் மட்டுமே விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மாணவர்கள் தங்கள் கைப்பட எழுதிய விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலிக்கப்படும்.

உதவித் தொகைகளைப் பெற, மாணவ, மாணவியர் படிப்பில் சிறந்தவர்களாகவும், அதே சமயம் பெற்றோர் உதவியுடன் மட்டுமே கல்வியைத் தொடர முடியாத நிலையில் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களாகவும் இருக்க வேண்டும். அரசு அங்கீகாரம் பெற்ற ஒரு கல்வி நிலையத்தில் சேர்ந்து படிக்க அனுமதி பெற்றிருக்க வேண்டும். இவற்றை உறுதிப்படுத்த, கல்லூரி அல்லது பள்ளி முதல்வரின் சான்றிதழுடன் விண்ணப்பிக்க வேண்டும். சென்ற கல்வி ஆண்டின் இறுதித் தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் நகலைப் பள்ளி முதல்வரின் கையொப்பத்துடன் இணைப்பது அவசியம்.

விண்ணப்பங்களை ஆராய்ந்து உதவித் தொகை பெறத் தகுதியுள்ள மாணவ மாணவியரை அறங்காவலர்கள் தேர்ந்தெடுப்பார்கள். அறங்காவலர்களின் முடிவே இறுதியானது.

தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு விவரம் தெரிவிக்கப்படும். மற்றபடி கடிதப் போக்குவரத்து கிடையாது. சான்றிதழ்களைத் திருப்பி அனுப்புவதற்கில்லை.

விண்ணப்பங்கள் வந்து சேரக் கடைசி தேதி : ஜூலை 31, 1996.



விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி :
நிர்வாக அறங்காவலர்,
கல்கி கிருஷ்ணமூர்த்தி அறக்கட்டளை,
நெ. 1, ஐந்தாவது தெரு, ஏரி வட்டம்,
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.

12

ஆகாயச் சிறகுகள்



ரெண்டு மூன்று மாசமாகி விட்டது. நாளும் பொழுதுமாய் நகர்கிற வாழ்க்கை. மனசுகளின் காயங்களையும் ரணங்களையும் ஆற்றிவிட்டு, புதுப் புதுச் சம் பவங்களால் – உணர்ச்சிகளால் – அனுபவங்களால் நிரப்பி நிரப்பி, மனிதர்களை வார்த்துக் கொண்டே இயங்கு கிற வாழ்க்கை.

பால்ச்சாமி இருந்தால், பிரேமாவுக்கு வீடே நிறைந்திருக்கிற மாதிரியிருக்கும். திருப்தியும் மகிழ்ச்சியுமாயிருக்கும். கலகலத்த பேச்சுகள். கேலியும் கிண்டலுமான விளையாட்டுக்கள். வேடிக்கையும் விநோதமுமான காரியங்கள். அவளது கூச்ச சுபாவத்தை நையாண்டி பண் ணுகிற பால்ச்சாமி. அவனது ஆத்திர அவசரப் புத்தியை குத்திக் காட்டுகிற பிரேமா.

ஆனால், பால்ச்சாமி வீட்டிலிருக்கிற நேரம், ரொம்பச் சொற்பம். கமிட்டிக் கூட்டம், ஆர்ப்பாட்டம், தாசில்தாரைச் சந்திக்க— தர்ணா போராட்டம் என்று வெளிக் கிளம்பி விடு வான்.

அவன் போய் விட்டால்— அவனது பேச் சின் இரைச்சல், கொஞ்ச நேரம் வீட்டிற் குள்ளேயே ரீங்கரிக்கும். சிரிப்பின் நிழல்கள். விளையாடிய உணர்வுகளின் மங்கலான முகங்கள்.

அப்புறம், வீட்டு வேலைகளில் கொஞ்ச நேரம் கரையும். அதுவும் முடிந்தால்... அவளைச் சூழ்கிற வெறுமை. சுரீரென்று சுட்டுத் தகிக்கிற சூன்யம். வெறும் வீடாக விரிந்து கிடக்கிற மௌனம். மனசின் மூலை களில் அதிர்வேற்படுத்துகிற இறுக்கமான மௌனம். பரந்து விரிந்து கிடக்கிற வீட்டில் ஒற்றைச் சிவனாய் தனித்திருக்கிறோம் என்ற உணர்வே, மனசைப் பெரும் பாரமாக அழுத் தும். மூச்சு முட்டும்.

பேச்சுத் துணைக்கு ஆளில்லாமல் அலை கிற உள் மன நினைவுகள்.

இந்த மாதிரியான நிலைமையில்தான் பக்கத்து வீட்டுப் பெண்களின் பரிச்சயத்தை 'இச்'சௌப் பற்றிக் கொண்டாள், பிரேமா.

பக்கத்து வீட்டுப் பெண்களுக்கும் இவளது நட்பு தேவைப்பட்டது. ஓசியில் டீவி. பார்த் துக் கொள்ளலாம். கருப்பு வெள்ளை

டீ.வி.தான். சின்னதுதான். ஆனாலும் 'சந்திரகாந்தா' பார்க்க முடிகிறது. 'சாந்தி'யை யும் 'சுயமரியாதை'யையும் பின்தொடர முடி கிறது.

பால்ச்சாமி இல்லாத நேரங்களில் பிரே மாவுக்கு பேச்சுத் துணைக்குப் பஞ்சமே யில்லை. யாராவது ஒரு பெண் வந்து நிற்பாள். நிறையப் பேச்சுக்கள். ஒவ்வொரு குடும்பத்தி லும் ஒரு வாழ்க்கை. ஒவ்வொரு விதமான பிரச் னைகள். வருத்தங்கள், சுமைகள், வறுமைப் பட்ட குடும்பங்கள், நெருடலான முடிச்சுகள், ஏக்கப் பெருமூச்சுகள்.... இத்தனைக்கும் மத்தி யிலும் எங்கோ சில மின்னல்களாய் காதலும் மகிழ்ச்சியும் வசந்தத் துளிகளும்.

பேச்சுத் துணைக்கு வருகிற பெண்கள் சில சமயம் அஞ்சு, பத்து கைமாற்றும் கேட்பார்கள். இவளும் கொடுப்பாள். சரியாகத் திரும்பி விடும்.

அன்றைக்கும் அப்படித்தான்.

பால்ச்சாமி சைக்கிளை வேப்பமரத்தில் நிறுத்தி விட்டு உள்ளே வந்தான். மதியம் ரெண்டு மணியிருக்கும். அந்நேரம் வரைக்கும் பிரேமாவுடன் வருத்தத்துடன் ஏதோ துன் பத்தைக் கொட்டிப் பேசிக் கொண்டிருந்த மூன்றாவது வீட்டு பாக்கியத்தம்மாள், இவ னைக் கண்டதும் புறப்பட்டாள். "அப்ப... நா வரட்டா... ம்மா?"

சட்டையைக் கழற்றிக் கொண்டே பால்ச் சாமி கேட்டான்.

"என்ன பிரேமா.... பாக்கியத்தம்மா ரொம்பக் கவலையோட பேசிக்கிட்டி ருந்த மாதிரியிருந்துச்சே... என்ன வெஷ யம்?"

"ஒண்ணுமில்லே. ஏதோ காரியமா எரநூறு ரூபா தேவைப்படுதாம். அவ சரமாம். ஒங்ககிட்டே கேக்கச் சொல் றாக..."

"என்ன... இப்ப எதுக்கு ரூவா? என்ன அவசரமாம்?"

"ஏதோ... சர்டிபிகேட் வாங் கணுமாம். பையனை ப்ளஸ்

மேலாண்மை பொன்னுச்சாமி

ஒன்லே சேக்கணுமாம். ஏதோ ஆளுங்கட்சிக் காரரு எரநூறு ரூவா குடுத்தா... சர்டிபிகேட் வாங் கித் தாரேன்னாராம்!"

"என்ன சர்டிபிகேட்?"

"சாதிச் சான்றிதழ்னோ... என்னமோ சொன்னாக!"

"அதுக்கெதுக்கு ரூவா?"

"கையெழுத்துப் போடுற ஆபீஸர்மாருக்குக் குடுக்கணுமாம்லே?"

"எதுக்குப் பணம் குடுக்கணும்? யாருக்கு?"

"கிராம முனிசிப்பு, ஆர்.ஐ., தாசில்தார் எல் லாம் காசு குடுத்தாத்தானே கையெழுத்துப் போடுவாக?"

"அந்தம்மாவையும் அந்தப் பையனையும் கூட்டிட்டு வா"

"எதுக்குங்க...?"





''என் மனைவியோடு தினமும் நான் சண்டை போட்டால் உனக்கென்னம்மா?''

''எனக்கென்னவா? உங்கிட்டே சண்டை போட்ட அலுப்பில் எங்கிட்டே சண்டைக்கு வரமாட்டேங்கறாளேடா!''

— ஞா. ஞானமுத்து



''காதும் காதும் வைச்சா மாதிரி ஆபரேஷன் பண்ணிடுங்கன்னு டாக்டர்கிட்டே சொன்னது தப்பாப் போச்சு.''

''ஏன்?''

''இரண்டு காதையும் ஒண்ணா வைச்சுத் தைச்சுட்டார்!''

—வெ. ராஜாராமன்

"அட, கூட்டிட்டு வான்னா... வாயேன்!"

பால்சாமியை திகைப்புடன் பார்த்து விட்டுப் போனாள். அடுத்த நிமிடத்தில் பாக்கியத்தம்மாவும் அந்த டவுசர் பையனும்.

என்ன ஏது என்று விசாரித்தான். பாக்கியத்தம்மாள் அறியாமையில் குழப்பிக் குழப்பிச் சொன்னாள். அந்தப் பையன் குறுக்கிட்டு விவரம் சொன்னான்.

"எரநூறு ரூவா கேட்டது யாரு?"

கேட்ட ஆளுங்கட்சிக்காரரைப் பாராட்டிச் சொன்னாள்.

"ஒண்ணும் தெரியாத குருட்டுக் கழுதை நா. ஏதோ அந்தத் தம்பியாச்சும் எரக்கப்பட்டு, 'ஒதவுறேன்'னு வந்தானே..."

பால்சாமி தனக்குள் சிரித்துக் கொண்டான். எளிய மக்களின் அறியாமையைப் பயன் படுத்திக் கொண்டு, லஞ்சமும் ஊழலும் விஷப் பரவலாகப் படர்கிறதே என்கிற வேதனையின் சிரிப்பு.

ஹேண்ட் பேக்கிற்குள் மடித்துக் கிடந்த சாதிச் சான்றிதழுக்கான விண்ணப்பப் படிவத்தை எடுத்தான். அந்தப் பையனின் கையெழுத்தை வாங்கிக் கொண்டான்.

மூன்றாவது நாள்.

"இந்தா.... பிரேமா."

"என்னது?"

"பாக்கியத்தம்மா பையனுக்கான ஜாதிச் சான்றிதழ்."

"நீங்களே செலவழிச்சிட்டீங்களா?"

"அஞ்சு பைசா கூட செலவாகலே. ஞாயத்தை நேர்மையோட கேக்குறதுக்கு என்ன செலவு?"

பாக்கியத்தம்மா இந்த விஷயத்தை ஒரு பிரமிப்பாக உணர்ந்தாள்.

"நெசந்தானா...? ஒண்ணும் செலவாகலியா? நெசந்தானா?" என்று மருகி மருகிக் கேட்டாள். கூலிக்கு உழைத்து கஞ்சி குடித்து காலத்தைக் கழிக்கிற அந்த அம்மாவுக்கு இருநூறு ரூபாய் மிச்சம் என்பதே... பெரிய விஷயம். ஒரு பொக்கிஷம் கிடைத்து விட்ட பரவசம்.

கையெடுத்துக் கும்பிடுகிறபோது, பாக்கியத்தம்மா நிஜமாகவே கண்கலங்கி விட்டாள்.

"பிரேமா, ஓம் புருஷன் சாமான்யமான காரியம் செய்யலேம்மா. வம்சவெளக்கோட சுடரை ஏத்தி வைச்சிருக்கான். எம் புள்ளே படிக்கிறதுக்கு தெம்பு குடுத்துருக்கான்!"

பிரேமாவுக்குள் ஏதோ ஒரு பிசைவு. பாக்கியத்தம்மா நன்றி சொல்லத் தெரியாமல், கண்ணீர் உகுத்த அந்த விஷயம். அது கண்ணீராகத் தெரியவில்லை, பிரேமாவுக்கு. தர்மத்தை தரிசித்த ஓர் ஆத்மாவின் பரவசமாகத் தோன்றியது.

பால்சாமி குறித்த அவளது மரியாதையே இன்னொரு பரிமாணம் பெற்றது.

பாக்கியத்தம்மா தெரு பூராவும் பரவசப்பட்டு, புகழ்ந்து புகழ்ந்து சொல்ல.... பிரேமாவுக்கே தனி மரியாதை.

குழாயில் தண்ணீர் பிடிக்கப் போய் நின்றாள். தன் வரிசைக்காகக் காத்திருக்கத் தயாராகி நின்றாள். குழாயைச் சுற்றி நின்ற பெண்கள் பிரேமாவுக்குத் தனிச்சலுகை காட்டினர்.

"பிரேமா... நீ புடிச்சுட்டுப் போம்மா."

"என்னோட வரிசை இன்னும் வரலியே?"

"பரவால்லேம்மா. நீ புடிச்சிக்கிட்டுப் போ!"

குடத்தில் தண்ணீரைப் பிடித்து இடுப்பில் வைத்துக் கொண்டு நடந்து வருகிற போது, குடத்து நீராகத் ததும்பித் தத்தளித்தது, மனசு.

தெருவில் கிடைத்த கிரீடம். தெருவே சூட்டிய கிரீடம். பால்ச்சாமியால் இவளுக்குக் கிட்டிய மரியாதைகள். பூ விரிப்புகள். பிரேமா வுக்குள் ஜில்லென்று பூத்த பூக்கள். பூக்களாய் மலர்ந்து பரவுகிற வாசம். அவளுக்குள் கிறு கிறுப்பு.

பாக்கியத்தம்மாவின் கறுத்த முகத்தில் வழிந்த அந்தக் கண்ணீர். கண்ணீரில் மின்னி வெதுவெதுத்த நன்றி உணர்ச்சி. வார்த்தைப் படுத்தாத உணர்வுகளின் மொழிகள்.

ஓர் ஏழையின் துன்பத்தைத் துடைத்த இந்தக் காரியத்தில் அவளுக்குள் பரவுகிற சுகம்.

அன்றைக்கு ஏனோ அவளுக்குள் பௌர்ணமி ராத்திரியாய் ஒரு கொந்தளிப்பு. திரேகம் முழுவதும் பரபரப்பு. பரவசத் தத் தளிப்பு. ஓடி ஓடி வேலைகளை முடித்தாள். குளித்தாள். இருப்பதில் நல்ல சேலையை எடுத்து உடுத்தினாள்.

பால்ச்சாமி வருவதற்கு ரொம்பத் தாமத மாகி விட்டது. இருட்டி விட்டது. மணி எட் டுக்கு மேலாகி விட்டது.

"ஏன் இம்புட்டு நேரம்?" என்கிற வழக்க மான கேள்வியைக் கேட்க மனசு வரவில்லை. குளிர்ந்த சிரிப்பாகச் சிரித்தாள்.

"இப்பத்தான் வாரீகளா?" என்று குளிர்ச்சி யாகக் கேட்டாள்.

"குளிக்கீகளா?"

"வெந்நீ இருக்கா?"

"போட்டுருக்கேன்."

இவளது உலகத்திற்குள் இவன். இவளது உலகத்தின் புதுமலர்ச்சியை இவன் உணரவே யில்லை. உணர்வேயில்லாமல் 'ம்' போட்டான்.

குளித்தான். சாப்பிட உட்கார்ந்தான்.

வாளைக் கருவாடு. துண்டு துண்டாக நறுக்கி, வெங்காயம், மிளகாய் அறுத்துப் போட்டு எண்ணெயில் வதக்கியிருந்தாள். இவனுக்குப் பிடித்தமான அய்ட்டம். வாளைக் கருவாட்டைக் கண்டவுடன், இவளது உலகத்துக்குள் வந்துவிட்ட பால்ச்சாமி, சிறு பையன் போல மகிழ்ச்சியில் கும்மாளமிட் டான். ஆனந்த ஆச்சர்யம்.

"ஐய்ய்! வாளைக் கருவாடா?"

"ம்!"

"ரொம்ப ருசியாயிருக்கே..."

"சாப்புடுங்க."

அன்றைக்கு இரவில் பிரேமாவே ரொம்ப ருசியாக இருந்தாள்.

இப்போதெல்லாம் –

தெருவில் பிரேமா ரொம்பப் பிரபல்யம். கால் ஊனமான ஒரு இளம் பெண்ணுக்கு மான்யத்துடன் கூடிய தையல் மெஷின் கடன், ஓர் ஏழைப் பையனுக்கு 'டான்போஸ்கோ' கல்வி நிறுவனத்தின் இலவசக் கல்வி உதவி என்று பல காரியங்கள் பிரேமா மூலம் நிறை வேறிற்று.

உதவி பெற்றவர்களின் நன்றி உணர்வும் வெள்ளை மனசான பாராட்டுக்களும் இவளுக்குள் ஓர் பரவசத்தை உண்டுபண் ணிற்று. சில ஏழைகளுக்கு உதவ முடிந்த மகிழ்ச்சி இவளுக்கு. இந்த மகிழ்ச்சியே மிகப் பெரிய சிரமத்தில் சிக்கவைக்கப் போகிறது என்பதைக் கண்டாளா, என்ன!

(தொடரும்)

"உங்க பையன் கல்யாணத்தை எலக்ட்ரிக் ட்ரெயின்லேயே பண்ணினீங்களா? ஏன்?"

"வேலைக்குப் போற பெண்ணைத்தான் கல்யாணம் பண்ணிப்பேன்னு என் பையன் கட்டாயமா சொல்லிட்டான்!"




"சோம்பித் திரியேல்னு அந்த பையனுக்கு அறிவுரை சொன்னீங்களே. என்ன ஆச்சு?"


"இப்ப சுறுசுறுப்பா திரியறான்!"

— வெ. ராஜாராமன்






பிரம்மாண்டமான அதிநவீன தங்க நகை



ஏற்றுமதி உற்பத்தி தொழிற்சாலை

திட்டத்திற்கான டெபாசிட்டுகள்



சேகரிப்பு விழா


30% வட்டி **+** **7%** ஊக்கத்தொகை **+** **2 கிராம்** தங்க நாணயம் இலவசம்

மற்றும் கீழ்கண்ட
சிறப்புப் பரிசுகள்

டெபாசிட்	ரொக்க பரிசுகள்
ரூ. 10 ஆயிரம்	ரூ. 150
ரூ. 25 ஆயிரம்	ரூ. 400
ரூ. 50 ஆயிரம்	ரூ. 1000
ரூ. 1 லட்சம்	ரூ. 2250
ரூ. 2 லட்சம்	ரூ. 4800
ரூ. 3 லட்சம்	ரூ. 7500
ரூ. 5 லட்சம்	ரூ. 13000

+

ரூ.10,000 முதலீடு செய்யும்
முதல் 1000 நபர்களுக்கு
ஒரு வெள்ளி விளக்கு
இலவசம்.



பாலம்

** சாகித்திய அகடெமியின் "இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசை"க்காக அமரர் 'கல்கி' அவர்கள் பற்றி நூல் எழுதும் பணியில் ஈடுபட்டுள்ளேன். கல்கி யின் நூல்கள் (முதற் பதிப்புகள்), கட்டுரைகள், விமர்சனங்கள், கடிதங்கள், அரிய தகவல்கள் வைத்திருப்போர் கொடுத்து உத வினால் பயன்படுத்திக் கொண்டு பத்திரமாகத் திருப்பி அனுப்பு வேன்.

-டாக்டர் இரா.மோகன்,
பேராசிரியர், ஒப்பிலக்கியத்துறை,
தமிழியற் பள்ளி, மதுரை காமராசர்
பல்கலைக் கழகம், மதுரை - 625 021.

** Management of Systems - AMIE புத்தகம் மற்றும் Water Resources Engineering புத்தகங்கள் தேவைப்படுகின்றன. விவரம் தெரிவித்தால் விலை கொடுத்து பெற்றுக் கொள்கிறேன்.

-டி.செந்தில்குமார்,
5, ராமமடம் தெரு, வேலப்பாளையம்,
நாகப்பட்டினம் 611 001.

** எனது மூன்று வயது குழந்தை கடந்த மூன்று வருஷங்களாக Wet Psoriasis என்ற சரும நோயால் அவதிப்படுகிறது. அலோபதி மருத்துவம் நிரந்தரப் பயன் தராததால் இப்போது சித்த மருத்துவம் செய்கிறோம். இந்த நோய் வந்து குணமடைந்தவர்கள் என்ன வைத்தியம் பார்த்தார்கள் என்று தெரிவித்தால் நன்றி.

-ஜெயஸ்ரீ ரங்கராஜன்,
T-3. வசந்த் அபார்ட்மெண்ட்ஸ்,
76, மூன்றாவது பிரதான சாலை,
கஸ்தூரிபா நகர், சென்னை- 20

** Management சம்பந்தமான புத்தகங் களும், IAS Study Circle Correspondence Course ஏடுகளும் உள்ளன. தகுதி உள்ளவர்களுக்கு குறைந்த விலைக்கோ, இனாமாகவோ தர விருப்பம்.

-வி.ஸ்ரீநிவாசன்,
9, ரங்கன் தெரு, தி.நகர், சென்னை-17.

** AMIE "Sec" B (Electrical) படிப்புக்குத் தேவையான பயிற்சி, காலை 10 மணி முதல் மதியம் ஒரு மணி வரை கிடைத்தால் நலம். வேலூர் அல்லது சென்னைக்குள் இருப்பின் நலம்.

-மு.ராமு,
10. ஜே.பி.காலனி,
கோபாலபுரம், வேலூர். 632 006.

** Warren Hastings முன்னுரையுடன் வெளி வந்த பகவத்கீதை ஆங்கில மொழி பெயர்ப்பு நூல் இருந்தால் தொடர்பு கொள்ளவும்.

-கே.எஸ்.விசுவநாதன்,
108, SRI SAI NILAYA,
DODDA BOMMA SANDRA,
BANGALORE - 560 097

** தொழிற்சாலைகள் அதி கம் உள்ள பகுதியில் வசிக்கும் பத்தாவது அல்லது பிளஸ் டூ படித்த குடும்பப் பெண்கள் பயிற்சியும் கடனுதவியும் பெற்று, சிறிய அள வில் வீட்டிலிருந்தபடியே ஜவுளி வியாபாரம் செய்து வருமானம் பெறலாம். விருப்ப முடையோர் எழுதவும்.

-B.V.பாபு,
டெக்ஸ்டைல்ஸ் மானேஜர்,
DF-484 , சம்பத் நகர், ஈரோடு - 638 011.

** எலக்டிரிக், எலக்ட்ரானிக் தொழில் நுட் பம் பற்றி வ.அருணாசலம் எழுதிய புத்தகங்கள் கிடைக்கும். தேவையுள்ளோர் எழுதவும்.

-வி.சுப்பிரமணியன்,
8/4. NHI (234),
மறைமலை நகர் 603 209.

** பாரம்பரிய நெல் வகைகளை சேகரிக் கவும் சாகுபடியை ஊக்குவிக்கவும் எமது மையம் முயன்று வருகிறது. கிச்சடி சம்பா, மோசனம், சீத்தாப்பாக்கம் போன்ற நூற்றுக் கணக்கான பழைய நெல்ரகங்கள் பற்றி செய்தியோ மாதிரிகளோ உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

-டாக்டர் கே. விஜயலட்சுமி,
இந்திய அறிவியல்
தொழில் நுட்ப மன்றம்,
எஸ்.2, 25-வது கிழக்குத் தெரு,
திருவான்மியூர். சென்னை-41.

** ஜீவ ப்ரஷ்னமக்ய-வேதாந்த ரகஸ்யம்- சச்சிதானந்த யோகீஸ்வரர் எழுதியது. நூல் விலைக்கோ அல்லது இலவசமாகவோ தேவை.

-ஆர்.ராமநாதன்,
6, கணேசன் தெரு, ஆனந்தநகர்,
திருச்சி - 620 021.

** சமூக சேவையில் நாட்டமுள்ள இளை ஞர் (ஆண், பெண்), ஓய்வு பெற்றவர்கள் பணிக் குத் தேவை. தகுதிக்கேற்ற ஊதியம் உண்டு.

-தே. மாலதி,
"க்ராப்" 370, மேட்டுத் தெரு,
பெரம்பலூர் 621 212.

(பாலம் பகுதி மூலம் தொடர்பு கொள்ளும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்குக் கல்கி காரியாலயம் பொறுப்பு ஏற்க இயலாது)

பசுமை விதைத்து, வளமை பெருக்கும் ஈஸ்வர்



ஈஸ்வர் குரோடெக் லிட்., மதுரைக்கு அருகில் மிகப் பெரிய பசுமையான சோலையை (சுமார் 5000 ஏக்கர் நிலப்பரப்பு) உருவாக்கி வரும் முன்னணி தொழில் நிறுவனம்.

இந்த சோலையில் உருவாகும் தேக்கு, காய்கறி மற்றும் பழத் தோட்டங்கள் பசுமை பெருக்கி வளமை பெருக்க வழி வகுப்பவை.

சிறந்த வேளாண் நிபுணர்கள் மற்றும் தொழில் நுட்ப வல்லுனர்கள் இந்த ஈஸ்வர் சோலையை மிகச் சிறந்த லாபத்திற்கு இயக்குவார்கள்.

மேலும், தரிசு நிலங்களை பொன் விளையும் பூமியாக்கும் உ-சல், உரங்கள், பூச்சி மருந்துகள் மற்றும் விதைகளை ஈஸ்வர் தயாரிக்கிறது.

ஈஸ்வர்-இன் பொன் விளையும் திட்டங்கள்:

உங்கள் முதலீடு	நீங்கள் பெறுவது	20 ஆண்டுகளில் மதிப்பு
ரூ.25,000/- அல்லது ரூ.250/- வீதம் 100 சுலப தவணைகள்	10,000 ச. அடி நிலம் 24 தேக்கு மரங்கள் 2 ஒட்டு மா 2 வீரிய தென்னை காய்கறி தோட்டம்	ரூ. 10 லட்சம் ரூ. 24 லட்சம் ரூ. 50,000 ரூ. 50,000

20 ஆண்டுகளில் ரூ. 35 லட்சம் மதிப்பு சொத்துக்கள்

• 10,000 ச. அடி நிலம் உடன் உங்கள் பெயரில் பதிவு செய்யப்படுகிறது • அற்புத தொழில்நுட்ப விந்தை • சிறந்த நீர்வளம், மண்வளம், பயிர் வளம் • சில ஆண்டுகளில் உங்கள் நிலம் மதுரை நகரின் மையமாகி விடும். • பண்ணை வீடுகளும் கட்டிக்கொள்ளலாம்.

ரூ. 100/- வீதம் 15 மாதங்கள் செலுத்தி லட்சம் பெறும் திட்டங்களும் உள்ளன.

ESWAR GROW-TEK LTD

287, West Masi Street, Madurai 625 001. Phone: 540305, 540843.
Fax : 0452-540305. Telex : 0445-478-AGRI-IN.

பசுமை வளம் நிறைந்த இந்தியாவை உருவாக்குவோம்.

FIN-HANS R K SWAMY/BBDO 15483 A EGTL

பிதர்களுக்கு சிராத்தம் ஏன்? அவசியம் செய்ய வேண்டும்



சிராத்தம் போன்ற சடங்குகள் உண்மையில் பிராண ஜீவனுக்காகவே செய்யப்படுகின்றன. ஜீவனுடைய பிராண அதிர்வுகள் அதைப் பிராண லோகங்களுடன் அல்லது பூலோகத்துடன் தளைப்படுத்துகின்றன. அந்த அதிர்வுகளை நீக்குவதற்கு இந்த சடங்குகள் ஜீவனுக்கு உதவுகின்றன. இதனால் ஜீவன் சைத்திய சாந்தத்தில் ஓய்வெடுக்க விரைவாகச் செல்வது இயலும்.

— ஆதாரம் வைகறை 1991-92




இத்துடன் கிராண்ட் ஸ்வீட்ஸ் வாங்கி நல்லோர்களுக்கு விநியோகம் செய்யவும்.

திருமண வைபவங்களுக்கு:

சீர் முறுக்கு, சீர் அதிரசம், திரட்டுப் பால், மூன்று தேன்குழல், பருப்புத் தேங்காய், அப்பம் வகைகள் முதலியவைச் செய்துத் தரப்படும்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

நெ. 24, 2வது மெயின் ரோடு
காந்தி நகர்
அடையாறு
சென்னை - 20
போன் : 4915662
4914213





1996 ஜூன் 30
தாது ஆனி 16
மலர் : 54
இதழ் : 48

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




சமாளிப்புத் திலகம் சிதம்பரம்!

நாட்டின் முன்னணித் தொழிலதிபர்களை அழைத்துப் பேசியிருக்கிறார் நிதியமைச்சர். அவர் விதிக்கத் திட்டமிட்டிருந்த ஒரு புதிய வரிக்கு, அந்தச் சந்திப்பின் போது கடுமையான எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றனர் தொழிலதிபர்கள்.

பெரும் லாபத்தில் இயங்கும் ரிலையன்ஸ், டிஸ்கோ போன்ற நிறுவனங்கள் கூட, வரி செலுத்தாமலிருக்க வழிமுறைகளைக் கையாள்கின்றன. காற்றாடி மின்நிலையம் போன்றவற்றைத் தொடங்குவதில் லாபத்தை முதலீடு செய்யும் போது, சட்டபூர்வமாகவே வரி செலுத்தாமல் தப்ப முடிகிறது. இவ்வாறு சென்ற ஆண்டு பல்வேறு நிறுவனங்கள் அடைந்த ரூ. 15,000 கோடி லாபத்துக்கு, குறைந்தபட்சமாக 25 சதம் வரி விதித்திருந்தால் கூட, அரசுக்கு ரூ. 3750 கோடி கிடைத்திருக்கும்! எனவே, லாபம் காண்கிற எல்லா நிறுவனங்களும் ஒரு குறைந்தபட்ச வரி விதிக்கப்பட வேண்டும் என்பது நிதி அமைச்சரின் கருத்து.

இதற்குத்தான் தொழிலதிபர்கள் கடுமையான ஆட்சேபணை எழுப்பியிருக்கிறார்கள். இது கைவிடப்பட வேண்டிய பிற்போக்கு யோசனை என்று விமர்சித்திருக்கிறார்கள். தொழிலதிபர்களின் இந்தக் கருத்து ஏற்புடையதாக இல்லை. தாராளமயமாக்கப்பட்ட பொருளாதாரச் சூழலில், தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க நிறைய சலுகைகள் தரப்பட்டுள்ளன. அவற்றின் பயன்களை அனுபவிக்கும் தொழிலதிபர்கள், அரசுக்கு வரி செலுத்துவது என்றால் மட்டும்



முகம் கோணக் கூடாது. எனவே, நிதியமைச்சர் இந்த வரி விஷயத்தில் உறுதியாக இருக்க வேண்டும்.

பொதுவாகவே தனிநபர்கள், சிறு வியாபாரிகளுக்கெல்லாம் கூட, வரியின் அளவைக் (விகிதத்தை) குறைத்து, வரி செலுத்துவோரின் எண்ணிக்கையை அதிகரிப்பதை அடிப்படைக் கொள்கையாக்கி, வரியமைப்பைத் திருத்தினால் அரசுக்கு வருவாய் பெருகும். சாமர்த்தியமான பிரசாரத்தின் மூலம், வரி செலுத்துவதைப் பெருமிதத்துக்குரிய விஷயமாக்கி, பெரும்பான்மை யினரை வரி செலுத்தச் செய்யலாம்.


ஆனால், இத்தகைய ஆக்கபூர்வ நடவடிக்கைகளை உடனே கவனித்து, துரிதமாகச் செயல்படுத்தும் நிலையில் சிதம்பரம் இன்று இல்லை.

காரணம் : கூட்டணி கட்சிகள் போடும் முட்டுக் கட்டைகள்!

செலவுகளைக் கடுமையாகக் குறைக்க வேண்டும் என்றும், அதற்காக அரசு வேலைகளில் ஆள்குறைப்புச் செய்யப்படும் என்றும் முதல் நாள் அறிவிப்பு வருகிறது. உடனே கம்யூனிஸ்ட் கட்சிகள் அதை எதிர்க்க, 'நாடு முழுவதும் போராட்டம் நடக்கும்' என்று முழங்க, மறுநாளே 'இல்லையில்லை; ஆள் குறைப்பு கிடையாது!' என்று அரசு ஜகா வாங்குகிறது.

மத்தியில் நிதியமைச்சர் சிக்கன நடவடிக்கை அறிவித்துக் கொண்டிருக்கும்போதே, தமிழ்நாட்டில் கூட்டணி கட்சியைச் சேர்ந்த முதல்வர், 'தஞ்சையில் இன்னொரு புதிய மாவட்டம் உருவாகும்' என்று அறிவிக்கிறார். இதற்கு ஆகக்கூடிய செலவு அபரிமிதமானது; தேவையற்றது. இந்தச் செலவு மாநில அரசினுடையது என்று வாதாட முடியாது. மாநில அரசுகளின் செலவில் கணிசமான அளவு மத்திய அரசிடமிருந்து பெறப்படுகிறது.

ஆள் குறைப்பு செய்வது என்பது அரசியல்ரீதியாகவும் சரி, மனிதாபிமான அடிப்படையிலும்



சரி, எளிதாக நிகழ்த்தக்கூடியதன்று. ஆனால் அரசு ஊழியர்கள் அதிகரித்துக் கொண்டே போவதற்கு ஒரு முற்றுப்புள்ளியாவது வைக்கலாம். தற்போது சராசரியில் அரசு ஊழியர் பட்டாளம் ஓராண்டுக்கு ஒரு லட்சம் என்ற அளவில் அதிகரிக்கிறது. கூடவே ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1600 கோடி சம்பளப் பட்டுவாடா அதிகரிக்கிறது. இதைக் கட்டுப்படுத்தலாமே என்று ப.சி. கூறினால், அதற்கும் கூட கூட்டணி ஆட்சியில் பிற கட்சிகளின் எதிர்ப்பு இருக்கிறது.

பொதுத் துறை நிறுவனங்கள் விஷயத்திலும் மத்திய அரசு சில கூட்டணி கட்சிகளால் நிர்ப்பந்திக்கப்படுகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. மன்மோகன்சிங் நிதியமைச்சராக இருந்தபோது, பொதுத் துறை நிறுவனங்களைத் தனியார்மயமாக்கும் கொள்கை அறிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

இப்போது பாதிக் கிணறு தாண்டிய நிலையில், அக் கொள்கையை அடியோடு மாற்றியிருக்கிறார் சிதம்பரம். பொதுத் துறை நிறுவனங்கள் குறைந்தபட்சமாக இருபது சதவிகிதம் டிவிடண்ட் அறிவிக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது!

இந்த உத்தரவு காரணமாக, இருபது சதவிகிதத்துக்கும் மேலான டிவிடண்ட் தரவல்ல ஒருசில பொதுத் துறை நிறுவனங்கள் கூட, குறைத்து டிவிடண்ட் அறிவிப்பதுதான் மிச்சமாகுமே தவிர, படு நஷ்டத்தில் இயங்குபவை மந்திர சக்தியால் நிமிர்ந்து நடைபோடப் போவதில்லை...

இப்போதைய சூழலில், நிதியமைச்சர் கூட்டணி கட்சிகளைச் சரிக்கட்டும் சமாளிப்புத் திலகமாகச் செயல்பட வேண்டியிருப்பதால், நிதி நிர்வாகமும் நாட்டின் எதிர்காலமும் கேள்விக் குறியாகவே இருக்கின்றன!

"நடந்ததை மறந்தாலும் நடப்பதைத் தடுக்க வேண்டாமா?"

புயல்-மழை அடிக்கிறபோது கடலுக்குள் மீன் பிடிக்கப் போகிற படகுகள் திசைமாறிச் செல்வதும் பிறகு அவை தாமாகவோ அல்லது மீட்கப்பட்டோ கரைக்கு வந்து சேருவதும் சகஜமான விஷயம்தான். என்றாலும் தகவல் தொடர்பு சாதனங்கள் என்பது சர்வசாதாரணமாகி விட்ட இந்த சாட்டிலைட் யுகத்தில் கடலுக்குள் இருக்கிற மீனவர்களுக்குப் புயல்-மழை பற்றிய எச்சரிக்கை செய்வதிலும் உடனடியாக அவர்களை மீட்பதிலும் ஏன் இத்தனை காலதாமதம்? இதற்கொரு நிரந்தரத் தீர்வு காணவே முடியாதா? சம்பந்தப்பட்ட பலரையும் சந்தித்துப் பேசினோம்....

"காணாமல் போன படகுகள் மீட்கப்படுகிறவரை – அத்தனை மீனவர்களும் கரைக்குத் திரும்பும் வரை வேறு எந்த விஷயத்துக்காகவும் என்னிடம் வராதீர்கள்... ப்ளீஸ்..." என்று தம்மைப் பல் வேறு காரணங்களுக்காகச் சந்திக்க வந்தவர்களிடம் சொல்லிக் கொண்டிருந்தார் ராயபுரம் தொகுதி எம்.எல்.ஏ. (தி.மு.க.) இரா. மதிவாணன்.

நம்மைப் பார்த்ததும், "இப்போதுதான் சார் பிரகதீஸ்வரன் என்ற படகும் அதிலிருந்த ஐந்து பேரையும் 160 கடல் மைல்களுக்கு அப்பால் கண்டுபிடித்துவிட்டதாகச் செய்தி வந்தது. அநேகமாக அவர்கள் இன்று இரவோ நாளை காலையோ கரைக்கு வந்து சேர்ந்து விடுவார்கள்!" என்றார் மதிவாணன்.

"இத்தனை சுறுசுறுப்பாக இயங்கினாலும், மீனவர்கள் அரசை எதிர்த்துச் சாலை மறியல் செய்ய வேண்டிய அவசியம் என்ன?"

"இந்தப் பிரச்னையில் குளிர்காய நினைக்கிறது அ.தி.மு.க. அவர்களின் தூண்டுதலால் நடந்ததுதான் சாலை மறியலும் சில வன்முறைச் சம்பவங்களுமே தவிர, மீனவப் பெண்கள் செய்ததே அல்ல. அதனால்தான் அவர்களுடைய கோரிக்கையே காணாமல் போனவர்களைத் தேடுவதற்கு டி.ஆர். பாலுவின் மீன் பிடிக் கப்பலை அனுப்ப வேண்டும் என்பதாக இருந்தது. அதையும் உடனே செய்து விட்டோம்!" என்றார் மதிவாணன்.


• ராயபுரம் மீன்பிடித் துறைமுகம்


• மதிவாணன் எம்.எல்.ஏ.

"அரசு நூறு கி.மீ. வேகத்தில் செயல்படுகிறது என்றால் மீனவப் பெண்கள் அது ஏன் ஆயிரம் கி.மீ. வேகத்தில் செயல்படக்கூடாது என்று எதிர்பார்க்கிறார்கள். காரணம், அவர்கள் பாதிக்கப்பட்டவர்கள். இந்தச் சூழ்நிலையில்தான் சில சமூக விரோத சக்திகள் உள்ளே புகுந்து சில வன்முறைகளைத் தூண்டி விட்டு விட்டன. அதற்காக நாங்கள் வருந்துகிறோம்!" என்றார் வடசென்னை ஐக்கிய மீனவர் பஞ்சாயத்துகளின் தலைவர் குப்பன்.

• வேணுகோபால்


"கடலுக்குள் இருந்த உங்களுக்குப் புயல் பற்றிய எச்சரிக்கை எப்போது தெரிந்தது?" புயலில் சிக்கித் தப்பி வந்த டிரைவர்களான அருணாளீஸ்வரன், பிச்சை ஆகியோரிடம் கேட்டோம்.

"நாங்கள் பத்தாம் தேதி காலை ஆறு மணிக்குப் புறப்பட்டுச் சென்றோம். 13-ம் தேதிதான் புயல் பற்றி செய்தியை ரேடியோ வில் கேட்டோம். உடனே கரைக்குத் திரும்ப ஆரம்பித்தோம். அதற்குள் இருபதடி உயரத் திற்கு மேலான கடல் அலைகள் எழும்பி எங்களைத் திக்குமுக்காடச் செய்து விட்டது. காற்றும் பலமாக வீசியதால் எங்களால் படகு



செல்லும் திசையைக் கட்டுப்படுத்த முடியாமல் போய்விட்டது. அதனால் ஆந்திரப் பிரதேசக் கடல் பகுதிக்குள் மீன் பிடிக்கச் சென்றிருந்த நாங்கள், ஒருவழியாக 16-ம் தேதி அதிகாலை மூன்றரை மணி வாக்கில் மகாபலிபுரம் கடற்கரை யில் வந்து கரையேற வேண்டியதாகி விட்டது!" என்றார்கள் அவர்கள்.

துறைமுகத்திலிருந்து மட்டும் தினசரி ஐநூறு முதல் அறுநூறு விசைப் படகுகள் வரை மீன் பிடிக்கச் செல்லுகின்றன. ஒவ்வொரு படகி லும் ஐந்து அல்லது ஆறு பேர் செல்லுவார் கள்.

"விசைப் படகுகளில் மீன் பிடிக்கச் செல்வதென்பது ஏதோ காலையில் போய் மாலையில் திரும்புகிற விஷயமல்ல. ஒரு வாரம் முதல் பத்து நாட்கள் வரை ஆழ்கடலுக்குள் சென்று தங்கிச் செய்கிற வேலை இது. எனவே, அவர்கள் கடலுக்குள் செல்லுகிறபோது கரையிலிருக்கிற விஷயங்களைத் தெரிந்து கொள்வதோடு சரி. அதன் பிறகு ரேடியோ செய்திகள் மூலம்தான் எதையும் தெரிந்து கொள்ள முடியும்.

"உதாரணத்திற்கு இந்தப் புயல் சம்பவத் தையே எடுத்துக் கொள்வோம். 10-ந் தேதி முதல் 12-ந் தேதி வரை கடலுக்குள் முந்நூறு விசைப் படகுகள் சென்றன. அவர்கள் புறப்படுகிற வரை யாருக்குமே புயல் பற்றிய செய்தியே இல்லை. புயல் பற்றிய எச்சரிக்கை வந்ததே 13-ம் தேதிதான். அதோடு நமது ரேடியோ செய்திகளில் புயல் வருவதற்குச் சுமார் 24 மணி நேரத்திற்கு முன்புதான் எச்சரிக்கை செய்கிறார்கள். கடலுக்குள் சுமார் இருநூறு கி.மீ. தூரத்திற்கு மேல் மீன் பிடிக்கச் சென்றிருப்பவர்கள் இப்படியொரு குறுகிய

• தப்பி வந்த டிரைவர் அருணாளீஸ்வரன் விளக்குகிறார்..



இதுபோன்ற ஆபத்துக் காலங்களில் கடலில் மீன் பிடிக்கச் சென்றவர் களுக்கும் கரையிலிருப்பவர்களுக்குமான தகவல் தொடர்பு என்பது எப்படி?

"இதுதாங்க பிரச்னையே..." என்று ஆரம் பித்தார்கள் முன்னாள் சட்டமன்ற உறுப்பின ரும் தமிழ் மாநில காங்கிரஸின் அமைப்புச் செயலாளருமான எஸ். வேணுகோபாலும் காசிமேடு கடல் உணவு நலச் சங்கத்தின் செயலாளர் எம். ஜீவநாதனும்.

"சாதாரணமாக இராயபுரம் மீன்பிடித்

கால அவகாசத்துக்குள் கரை திரும்புவதும் கடினம். ஏனெனில் அதிகபட்சம் எட்டு கி.மீ. வேகத்துக்கு மேல் விசைப் படகுகளால் வர முடியாது. அதற்குள் புயல் வந்து விடுகிறபோது சிக்கிக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விடுகிறது."

"இதற்கு என்னதான் தீர்வு?"

"இராயபுரம் மீன்பிடி துறைமுகத்தில் மட்டும் 980 விசைப் படகுகள் இருக்கின்றன. எனவே மீனவர்களுக்கென்று தனியானதொரு



"எதிர்காலத்திட்டம் எங்களிடம் இருக்கிறது!"

மீன்வளத் துறை அமைச்சர் ஜெனிஃபர் சந்திரனைச் சந்தித்த போது...

"செய்தி கேள்விப்பட்டவுடனேயே சம்பந்தப்பட்ட குடும்பங்களுக்குச் சென்றேன். அந்தப் பெண்கள் கதறியழுதபோது நானும் அவர்களோடு சேர்ந்து கதறியழுது விட்டேன். நானும் மீனவக் குடும்பத்துப் பெண்தான் என்பதால் அவர்களுடைய உணர்வுகளை என்னால் முழுமையாகப் புரிந்து கொள்ள முடிந்தது. இருப்பினும் மறுநாள் சாலை மறியலில் ஈடுபட்டார்கள். ஆனால் அவர்கள் சம்பந்தப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் அல்ல. சில சமூக விரோத சக்திகள் இடையில் புகுந்து கொண்டு அப்படிச் செய்து விட்டார்கள். இது சம்பந்தப்பட்ட மீனவர்களுக்கும் தெரியும்."

"நீங்கள் அறிக்கைகள் விடுகிறபோதெல்லாம், 'முதல்வரின் அனுமதியோடு' என்கிற வாசகத்தைச் சேர்த்துச் சேர்த்தே விட்டீர்கள். அப்படியானால், நீங்கள் சுயமாக எதுவுமே செய்யவில்லையா?"

"அப்படியல்ல. முதல்வர் கலைஞர் அவர்கள் காணாமல் போன மீனவர்களை மீட்பதில் மிகுந்த அக்கறை காட்டினார். ஒவ்வொரு மணி நேர இடைவெளியிலும் அது தொடர்பான தகவல்களைக் கேட்டுக் கொண்டே இருந்தார். மற்றபடி நாங்கள் எந்த நேரத்திலும் முதல்வரைச் சந்தித்துப் பேசுகிறோம். அவரது ஆலோசனைகளைப் பெறுகிறோம். அந்த வகையில்தான் நான் அறிக்கைகள் விட்டேன்!"

"எதிர்காலத்தில் இதுபோன்ற அவசரக் காலங்களைச் சமாளிக்க, மீனவர்களுக்கென்றே ஒரு கப்பலும், ஹெலிகாப்டரும் வாங்கப்பட்டு அவை தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்க வேண்டும். அவர்களுக்கென்று தனியான தகவல் தொடர்பு ஏற்படுத்த வேண்டும் என்கிறார்களே, அது பற்றி அரசின் நிலை என்ன?"

"இனிவரும் காலங்களில் காணாமல் போன மீனவர்களை மீட்கவும், இதுபோன்ற சம்பவங்களே நடைபெறாமல் தவிர்க்கவுமான சில திட்டங்களை அரசு வைத்திருக்கிறது. பட்ஜெட் கூட்டத் தொடர் நடக்க இருப்பதால் இப்போது அத்திட்டங்களைப் பற்றிக் கூற இயலாது. பட்ஜெட் கூட்டத் தொடரில் அறிவிக்க இருக்கிறோம்."

சந்திப்பு : ப்ரியன்

தகவல் தொடர்பை ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு விசைப் படகிலும் கரையிலிருந்து தகவல் பெறுகிற சாதனத்தை நிறுவ வேண்டும். இந்தச் சாதனங்களை அரசு மான்ய விலையில் கொடுத்து உதவ வேண்டும். அதோடு நமது வானிலை ஆராய்ச்சி மையங்கள் புயல் பற்றிய எச்சரிக்கையை முடிந்தவரை இன்னும் முன்கூட்டியே சொல்ல வேண்டும். அப்படிச் சொன்னால், மீனவர்களுக்காகவே இருக்கிற தகவல் தொடர்புச் சாதனங்களின் மூலம் உடனடியாக கடலுக்குள் இருக்கிற விசைப் படகுகளைத் தொடர்பு கொண்டு எச்சரிக்கை செய்யலாம்.

"மேலும் இதுபோன்ற ஆபத்துக் காலங்களில் திசைமாறிப் போகிற படகுகளைத் தேடுவதற்கென்றே தனியாக ஒரு கப்பலையும் ஹெலிகாப்டரையும் அரசு வாங்கித் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்..."

"ஏன், நமது கடலோரக் காவற்படையின் கப்பல்களும் ஹெலிகாப்டர்களும் இருக்கின்றனவே... அவை போதாதா?"

"அதற்கு ராணுவம் என்றுதான் பெயரே தவிர, உடனடியாக எந்த நடவடிக்கையும் எடுக்க மறுக்கிறார்கள். நூற்றுக்கணக்கான மீனவர்களின் உயிருக்கே ஆபத்து என்கிற நிலையிலும் எங்கெங்கிருந்தோ மேலிட உத்தரவு வராமல் எதுவும் செய்ய முடியாது என்கிறார்கள்.

"அவர்களை ஒன்று கேட்கிறோம்... நமது கடல் பகுதிக்குள் வேறு யாராவது அந்நியர்கள் ஊடுருவி விடாமல் பாதுகாத்துக் கொண்டிருக்கிற அவர்களுக்கு, நமது மீனவர்கள் புயலில் திசைமாறிச் சென்று கொண்டிருப்பது தெரியாமல் போய்விடுமா என்ன? அவர்கள் நினைத்திருந்தால் உடனடியாகப் பல படகுகளையும் காப்பாற்றியிருக்க முடியும். ஆனால் செய்யவில்லை. காரணம், ரூல்ஸ் என்கிறார்கள். இந்த மாதிரியான விதிகளையெல்லாம் தளர்த்த வேண்டும். அப்போதுதான் எங்களுக்கு நிரந்தரமானதொரு தீர்வு கிடைக்கும்!"

சந்திப்பு : பிரின்ஸ்

படங்கள் : பேஜர் கே. மூர்த்தி


வங்க மூலம் : சுப்ரத சென்குப்தா

பசை

"ஒரு பசை வாங்கிட்டு வந்திருக்கேன். ஒரு தடவை ஒட்டினா அப்புறம் விடவே விடாதாம்!"- அறைக்குள் நுழைந்து எந்தப் பக்கமும் பார்க்காமல் அனில் பேச ஆரம்பித்தான்.

ஆனால் அங்கே இருந்தவர்களில் எவருக்கும் அவன் கொண்டு வந்த பசையில் ஆர்வம் இல்லை.

தரையில் பாய் விரித்து, அவனது மனைவி ஸ்வாகதாவும் பெண் சுலக்னாவும் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். இருவருமே உம்மென்றிருக்கிறார்கள். ஸ்வாகதாவின் கையில் பிரித்துப் போட்ட காகிதம். அவளது கோபம்தான் இன்னும் அதிகமாக இருந்தது. சுலக்னாவின் கையில் பென்ஸில், கன்னத்தில் கண்ணீர்க் கோடுகள். கண்களில் ஈரம். சிறிது முன்னால்தான் தாயிடம் பெண் அடி வாங்கி இருக்கிறாள். இப்போது இங்கிருக்கும் சூழ்நிலை நிச்சயம் அவனுக்கு உகந்ததாக இல்லை.



பசையைப் பற்றிக் கூற முடியாமல் அனிலுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. "ஒன்னோட ஒடெஞ்ச வெளையாட்டு சாமான் எல்லாத்தையும் இங்க கொண்டுவா. என்ன செஞ்சாலும் ஒடையாத மாதிரி நா ஒட்டித் தரேன் பாரு!" என்று சொல்லி, குழந்தையை சகஜ நிலைக்குத் திருப்பலாம்தான். ஆனால் மனைவி, பத்ரகாளியாகி விடக் கூடும். பெண்ணை மீண்டும் அடிக்க ஆரம்பிக்கலாம். சூழ்நிலையை மோசமாக்கிவிடக் கூடிய எதையும் பேசாமல் அவனும் பாயில் மௌனமாகப் பெண்ணருகில் அமர்ந்து கொண்டான்.

மிருதுவான குரலில், "என்னாச்சம்மா?" என்று கேட்டான்.

பெண்ணின் உதடு துடித்தது. இத்தனை நேரங்கழித்து ஒருவராவது தனக்குச் சாதமாகப் பேசக் கிடைத்தது கண்டு அவளது கண்களில் கண்ணீர். ஸ்வாகதாவின் திட்டும், அடியும் நிறையவே கிடைத்திருக்கின்றன என்பது தெளிவாகத் தெரிகிறது.

பெண்ணிற்குப் பதிலாக அவளது தாய்தான் காரமான குரலில் பேசினாள்.

"ஒங்ககிட்ட சொல்லி என்ன பண்ண? அவ என்ன படிக்கவா செய்யறா? நீங்களாவது அவ என்ன பண்ணறான்னு எடுத்துப் பாக்கறீங்களா? ராப்பகலா பாசம் பொழிய தலையத் தடவினா போதுமா? எதிலியாவது கொஞ்சம் கவனம் இருந்தாத்தானே!"

அருமையான இந்தப் பசையை வாங்கி வந்த பணம், உழைப்பு இரண்டுமே வீண்! பசையின் மகிமையைப் பார்த்த தாயும் பெண்ணும் மிக்க மகிழ்ச்சி அடைவார்கள் என்று நினைத்திருந்தான். இப்போது அனில் இந்த விவாதங்களிலிருந்து தப்பிப் போக நினைத்தாலும் ஸ்வாகதா அந்தப் பக்கமே தள்ளுகிறாள்.

கையிலிருந்த காகிதத்தை முன்னால் தள்ளினாள் ஸ்வாகதா.

"பாத்துக்குங்க நீங்களே!"

சுலக்னாவின் பரீட்சை பேப்பர். சிவப்பு மையில் திருத்தியவருடைய மோசமான விமர்சனங்கள்.

சிறுவயதில் நடந்தது அவனுக்குத் திடீரென்று ஞாபகம் வந்து சிரிப்பு வந்தது.

"என்ன சிரிப்பு வேண்டிக்கிடக்கு?"- கோ:பம் குறையாத மனைவி.

அவசர அவசரமாக அனில் சொன்னான்: "ஒண்ணும் இல்லை! நா ஒரு தடவை கணக்குல இருபது மார்க் வாங்கினேன். அதப்பத்தி நெனச்ச உடனே சிரிப்பு வந்துடுச்சி!"

"அப்பிடியா? நீங்க கணக்குல இருபது மார்க் வாங்கினதை உங்க பொண்ணு முன்னாடிதான் அவசியம் சொல்லணும். பொண்ணு இருபதோ முப்பதோ வாங்கினாலும் தப்பே கிடையாது. அவசியம் சிரிக்க வேண்டிய விஷயம்தான். நல்லா சிரிங்க! உங்க பொண்ணும் சிரிக்கட்டும். எனக்கென்னாச்சு? எக்கேடும் கெட்டுப் போங்க!" என்று, கோபம் தலைக்கேற ஸ்வாகதா எழுந்து, தம்தம் என்ற சத்தத்துடன் வீட்டை விட்டே வெளியேறினாள். கோபம் தீர்ந்ததும் வந்து விடுவாள். நடக்கிற கதைதானே?

இந்தப் பக்கம் அழுகை நிறைந்த குரலில் சுலக்னா, "அம்மா போயிட்டா... எங்க போறாப்பா அம்மா?"

தமிழில் : சீதாலட்சுமி விஷ்வனாத்

அனில் பெண்ணை நோக்கினான். கலக்னா மீண்டும் கேட்டாள்... "அம்மா எங்க போறாப்பா?"

கலக்னாவின் தலைமேல் ஆதரவாகத் தடவியபடியே அனில் சொன்னான். "இங்கதான் பக்கத்துல எங்கியாவது இருக்கும்மா. நீ ஏம்மா அழறே?"

"நீ ஏம்பா அம்மாவ போகாதேன்னு சொல்லலே?"

"போகாதேன்னாலும் அம்மா கேட்க மாட்டாம்மா."

"நீ ஏம்பா அம்மா கூடச் சண்டை



போட்டே? அதனாலதான் அம்மா கோச்சுண்டு போயிட்டா?"

"நா எங்கம்மா சண்டை போட்டேன்? நீதான் பாத்துண்டே இருந்தியே!"

"அம்மா எப்ப வருவாப்பா?"- அவன் அழத் தொடங்கினாள்.

இதென்ன புதுத்தொல்லை! இந்தப் பெண்ணிற்காகத்தான் தாயுடன் வாக்குவாதம் நடந்தது. இப்போதோ பெண் அழுகிறாள், 'அம்மா எப்போது வருவாள்' என்று கேட்டுக் கொண்டே!

அவளது தாய் வரும் வரை எப்படியாவது சமாதானப்படுத்தியாக வேண்டும்.

திடீரென்று அவனுக்குத் தான் வாங்கி வந்திருந்த பசையின் நினைவு வந்தது. "அந்தப் பசைய இப்ப நா எடுக்கறேன். உன்னோட உடைஞ்ச விளையாட்டுச் சாமான், கிழிஞ்ச புஸ்தகம் எல்லாத்தையும் கொண்டு வா, பாக்கலாம்..."

பெண் ஒரு உடைந்த குதிரையைக் கொண்டு வந்தாள். இன்னும் சில பழைய புத்தகங்களும் வந்தன. கலக்னா குதிரையை முன்னால் நகர்த்தினாள். அந்தக் குதிரையின் உடைந்த காலில் பசையை ஒட்டிக் கொண்டே மிகவும் கம்பீரமாக முகத்தை வைத்துக் கொண்டு பேசினான். "ரொம்ப ஜாக்கிரதையா குதிரை பக்கத்துல போயி உக்காரு."

"ஏம்பா?"

"பசைய வெச்சு கால ஒட்டின உடனே குதிரை ஓட ஆரம்பிச்சிடுத்துன்னா? சொல்ல முடியாது. சும்மா ஓட மட்டும் இல்ல. பறக்கக் கூட ஆரம்பிக்கலாம்."

ஆனந்தப் பரவசத்துடன் பெண் கேட்டாள். "குதிரை பறக்குமாப்பா? அப்ப நாம கூட அதோட முதுகுமேல ஏறி ஒக்காந்திடலாம்."

"ஆமாம்மா, ரொம்ப ஜோரா இருக்கும்!"

திடீரென்று ஆச்சரியத்தில் வாயடைத்துப் போனான் அனில். குதிரையின் காலில் கவனக்குறைவாகப் பசை வைக்கப் போய், அவனது கை விரலுடன் குதிரை ஒட்டிக் கொண்டது. எத்தனை முயற்சி செய்தும் குதிரையை அவனது விரலிலிருந்து விடுவிக்க முடியவில்லை.

"என்னாச்சுப்பா?"

அனில் கையை உயர்த்தினான். அவன் கையுடன் குதிரையும் எழும்பியது. கையை இறக்கியதும் குதிரையும் இறங்கியது. கையை உயர்த்தவோ அசைக்கவோ போனால் விரலில் வலிக்கிறது. "பாரேன், இந்தக் குதிரை என் விரலோட ஒட்டிண்டிடுத்தும்மா!"

"என்னப்பா!"

"என்ன செஞ்சாலும் கைய எடுக்க முடியலேம்மா!"

"இப்ப என்னாகும்பா?"

என்ன ஆகப் போகிறது என்று இவனுக்கும் தெரியாது. அழுகை நிரம்பிய குரலில் பெண் கேட்டாள். "அம்மா எங்கப்பா? இன்னம் ஏம்பா வரலை?"

எங்கே போயிருக்கிறாளோ, யார் கண்டார்கள்? இப்போது தன்னந்தனியாக இந்தச் சோதனையிலிருந்து எவ்வாறு மீண்டு வரப் போகிறான் இவன்?

திடீரென்று அவனுக்கு நினைவு வந்தது. பசை ட்யூப் இருந்த அட்டைப் பெட்டியில் இதனுடன் ஒரு அச்சடித்த காகிதமும் இருக்கலாம்... இந்தக் காகிதத்தில் இந்தப் பொருளை எப்படி, எந்த அளவில் உபயோகப்படுத்த வேண்டும் என்ற குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கலாம். ஏதேனும் பிரச்னை என்றால் என்ன செய்ய வேண்டும் போன்ற குறிப்புகள்.

தேடி எடுத்துப் படிக்க ஆரம்பித்தான். ஓரிடத்தில் அவனது கண்கள் நின்றன. உதட்டுச் சாயம் நீக்கும் திரவத்தினால் இந்தப் பசையை நீக்கி விடலாம்.

ஆனால் இப்போது அந்தத் திரவத்திற்கு எங்கு போவது? ஸ்வாகதா எப்போதாவது உதட்டுச் சாயம் உபயோகப்படுத்தினாலும், அதை நீக்கும் திரவத்தை வாங்கி இருக்கிறாளா? வாங்கி இருந்தாலும், இப்போது அது எங்கிருக்கிறதோ?

அனில் மெல்ல எழுந்து நிற்க முயன்றான். வீடு திரும்பிய பின் அவன் இங்கேயேதான் உட்கார்ந்திருக்கிறான். பாத்ரூமிற்குக் கூடப் போகவில்லை. கை கால் கழுவவில்லை. ஒரு கப் டீயோ அல்லது தண்ணிரோ கூட அவனுக்குக் கிடைக்கவில்லை.

அனில் தன் இடது கையால் குதிரையைத் தூக்கிப் பிடித்தான். கூடவே வலது கையையும் தூக்கி, தானும் எழுந்து கொண்டான். லேசாக அசைத்தாலே வலிக்கிறது. உயிர் போகும்வலி.

டெலிஃபோன் அருகே மெல்ல நகர்ந்து போனான் அனில்.

வலது கையில் குதிரை தொங்குகிறது. இடது கையால் நம்பர் டயல் செய்தான்.

"யாருக்கு ஃபோன் பண்ணறேப்பா? அம்மாக்கா?"

"இல்லப்பா.. உங்கம்மா எங்க போயிருக்கா தெரியலியே. உன் சித்திக்கு."

"சித்திக்கு அம்மா எங்க போயிருக்கான்னு தெரியுமாப்பா?"

"கேட்டுப் பாக்கலாம்."

இரண்டு முறை டயல் செய்தும் நம்பர் கிடைக்கவில்லை. இத்தனை முறை, இத்தனை நேரமாக யார் பேசுகிறார்கள்? யாருக்கு ஃபோன்? சுமி அவளது தோழர்களுடன் பேசுகிறாளா? மாமியார் எதையும் கண்டு கொள்வதில்லை. இந்தச் சின்னப் பெண் பிஞ்சிலேயே பழுக்கிறாள். ஸ்வாகதாவிடம் இது பற்றிப் பேசுவது சரியா? வேண்டவே வேண்டாம். எதற்கு வீண் வம்பை விலைக்கு வாங்க வேண் டும்?

இதற்குள் ட்ரிங், ட்ரிங்- நம்பர் கிடைத்து விட்டது.

ஃபோனை எடுத்தது அவள் அம்மா. மாமியாரிடம் கேட்டு என்ன பிரயோஜனம்? அனில் கேட்டான்."சுமி இல்லியா?"

"ஏன்? எதுக்கு அவ வேணும்?"

இது என்ன? அங்கு ஏதோ சண்டை நடந்திருக்கிறது.

"கண்ட கண்ட நேரத்துல பையன்க கிட்டேருந்து சும்மா சுமிக்கு ஃபோன் வரது. எத்தனை தடவை சொல்லியாச்சு!"

சுமியைப் பற்றி அனில் என்ன நினைத்தானோ அதைத்தான் அவன் மாமியாரும் சொல்கிறாள். அவன் பேசினான். "ஹலோ! நா அனில் பேசறேன்!"

"எந்த அனில்? அதான் சொல்லிட்டேனே. அவகிட்ட இப்ப யாரும் பேச முடியாது."

எந்த அனிலாம். பேச முடியாதாம்.

ஒழிஞ்சு போங்க எல்லாரும். எரிச்சலடைந்து மாமியார் டக்கென்று ஃபோனை வைத்தாள்.

என்னவெல்லாம் குழப்பமய்யா!

அனில் மீண்டும் ஃபோன் செய்தான்.

மீண்டும் மாமியார் தான் எடுத்தாள். அவசர அவசரமாக அனில் பேசினான். "நாந்தான் அனில்மா, உங்க மாப்பிள்ளை."

"ஓ அனிலா? அப்ப செத்த முன்னாடி நீதான் ஃபோன் பண்ணினியா?"

"ஆமாம்மா."

"ஓ, ரொம்பக் கேவலமாப் பேசிட்டேம்மா. அது என்னன்னா கன்னா பின்னான்னு இவ ளுக்கு ஃபோன் வரதுப்பா, அதான்."

"எனக்குப் புரியறது. நீங்க சௌக் கியந்தானே?"

"ஏதோ போயிண்டிருக்கு."

"சுமி கூடக் கொஞ்சம் பேசணுமே. அவ இருக்களா?"

"இருக்கா... கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி தான் அவள நன்னாத் திட்டி நொறுக் கிட்டேன். முகத்த தூக்கி வெச்சிண்டு அவ ரூமுக்குள்ள ஒக்காந்திண்டிருக்கா. சொல் லேம்பா, என்ன வேணும்? எங்கிட்டச் சொன்னா ஆகாதா?"

"அது வந்து... உங்க வீட்டுல லிப்ஸ்டிக் நீக்கற ரிமூவர் இருக்கா?"

"என்னதுப்பா இது?"

"அதான் லிப்ஸ்டிக் ரிமூவர்மா. கறையப் போக்கறதுக்கு தேச்சுப்பாளாம்."

"அடராமா! யாரோட லிப்ஸ்டிக் கறையடாப்பா நீ தொடக்கப் போறே?"

"இல்லம்மா. வந்து... அது லிப்ஸ்டிக் கறை இல்லம்மா... அது என்னன்னா..."

"என்ன? வேற விஷயமா? ஏம்பா, ஸ்வாகதா எங்க?"

"அவ வீட்டுல இல்ல."

"என்னடா கன்றாவி இது! அவ வீட்டுல இல்லியாம். நீ லிப்ஸ்டிக்க வெச்சுண்டு என்ன பண்ணினே? அடராமா! உம் பொண்ணு எங்க?"

கலவரமடைந்த குரலில் அனில் பேசினான். "எம்பொண்ணு இதோ எங்கிட்டத்தான் உக்காந்திண்டிருக்கா."

"என்னப்பா? அவ அம்மா ஏம்பா வீட்டுல இல்ல? இப்ப எங்க போயிருக்கா?"

"ஒண்ணும் சொல்லிட்டுப் போகல. பக்கத்துல எங்கியாவது தான் போயிருப்பா!"

"போயிருப்பாளா? அப்படீன்னா? உங் களுக்குள்ள ஏதாவது சண்டை கிண்டை ஆச்சா?"

"நா சண்டை போட மாட்டேன்."

"ஓ! அதான் தெரியுறதே! ஆனா இந்த நேரத்துல அவ தன்னந்தனியா எங்கியோ போயிருக்கா? அவளத் தேடப் போகாம நீ லிப்ஸ்டிக்க வெச்சுண்டு என்னப்பா பண்றே? யாரு உதட்டுல லிப்ஸ்டிக் போட்டிண் டிருக்கா?"



"எழுத்தாளரைக் கதாநாயகனாக வைத்து படம் எடுக்கலாம் என்றிருக் கிறேன்"

"என்ன பெயா வைக்கப் போகி றாய்?

"ஆவதும் Penனாலே; அழிவதும் Penனாலே!"

-பிரியாபாலு

அவன் ஃபோனை வைத்து விட்டான். குதிரை எதிலோ மாட்டிக் கொண்டிருக் கிறது. அதனால் எழுந்து கொள்ளும்போதே கை விரலில் அழுத்தி வலிக்கிறது. ஐயோ! என் னடா சோதனை இது! அனில் இடதுகையால் குதிரையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு தள் ளாடிக் கொண்டே நடக்க ஆரம்பித்தான். அவ னுக்குத் தோன்றியது. தப்பு அவனுடை யதுதான். இதைப் போன்ற பசையை வாங்கி வந்து இவர்களை ஆச்சரியப்படுத்த முயல வேண்டும் என்று யார் கேட்டார்கள்? இவர் கள் அதிசயித்து நிற்க விரும்பாதவர்கள்; நிற்கத் தெரியாதவர்கள்.

சுலக்னாவின் குரல் காதில் விழுகிறது.

"அப்பா! நீ ஏம்பா இப்பிடி இருக்கே?"

"என்னம்மா? எப்படி இருக்கேன்?"

"நீ அழறேப்பா!"

ஆமாம்... வலி பொறுக்காமல் கண்களில் நீர் எட்டிப் பார்க்கத்தான் செய்கிறது.

திடீரென்று தன் கையை ஒரே இழுப்பில் குதிரையிடமிருந்து விடுவித்துக் கொள்கிறான். ஒரே ரத்தமயம். மிகவும் வலிக்கிறது. ஆனால் அனில் பொறுத்துக் கொள்கிறான். பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும். பயம் நிறைந்த கண்களுடன் அவன் பெண் தந்தை யின் கைகளையே பார்த்துக் கொண்டிருக் கிறாள். திடீரென்று வாசலில் அழைப்பு மணிச் சத்தம். பெண் குதித்துக் கொண்டு எழுகிறாள். "அம்மா வந்துட்டா! அம்மா வந்துட்டா!"

"அம்மா, இங்க பாரேன்... அப்பா அழறா!"

கலகலவென சிரித்தபடி ஓடும் பெண் ணைப் புரியாமல் பார்த்தபடி நின்றான் அனில்.

KALKI SHOPPING PAGE



அந்தநாள் நாடகம்...!

அமலாக்கப் பிரிவு அதிகாரிகளுக்கே ஆச்சரியம்! வழக்கப்படி சாஸ்திரி பவன் கீழ் தளத்தில் காத்துக் கொண்டிருந்த புகைப் படக்காரர்கள் கூட, மதியம் வாக்கில் யாராவது வழக்கறிஞர், சசிகலா சார்பாக வந்து கால நீட்டிப்பு கேட்டு கடிதம் கொண்டு கொடுப்பார் என்றுதான் நினைத்திருந்தார்கள்.

கொஞ்சம் கையை முறித்துச் சோம்பல் விட்டு, காண்டீன் டீயை ரசித்துக் குடித்துக் கொண்டிருந்த அதிகாரிகளுக்குப் புரையேறி விட்டது! வெள்ளை காண்டஸா காரில் நடராஜனும் சசிகலாவும் வந்து இறங்கினார்கள்!

சசிகலா அ.பி. அலுவலகம் வந்த செய்தி காற்றில் பரவி, சாஸ்திரி பவன் வளாகத்தில் வேலை செய்து கொண்டிருந்த பணியாளர்கள் மூன்றாவது மாடியிலும், முதல் மாடியிலும் குழும ஆரம்பித்து விட்டார்கள். 'விடக் கூடாது. அப்படியே கைது செஞ்சுடணும்' என்று கிசுகிசுத்துக் கொண்டார்கள்.

மதியத்துக்கு மேல் போலீஸ் ஜீப்புகளும், வேன்களுமாகக் கட்டடத்தைச் சுற்றிக் கொள்ள, தெருவில் டிராஃபிக் ஜாம்! "இந்த நடராஜனுக்கும் போயஸ் தோட்டத்துக்கும் தொடர்பே கிடையாதுன்னு சொன்னாங்க... இப்ப எப்படி வந்தார் இவர்?" என்று கேட்டார், பொதுஜனம் ஒருவர்.

'என்ன ஆட்டம் போட்டாங்கப்பா?' என்று டீக்கடையில் ஒருவர் எரிச்சலில் சொன்னார்.

கீழ்த் தளத்திலேயே, லிப்டிற்குள் நுழைவதற்கு முன், படங்களை எடுத்துத் தள்ளிவிட வேண்டும் என்ற தொழில் ஆர்வத்தில் புகைப்படக்காரர்கள் நெருக்க, மன்னார்குடி குடும்பத்துக்கு கோபம் கொப்பளித்து விட்டது.

"எடுக்க விடாதடா" என்று நடராஜன் குரல் கொடுக்க, மறைந்த வினோதகன் மகன் மகாதேவன், அண்ணன் சுந்தரவதனம், உறவினர் சரவணன், ஆகியோர் தங்கள் பலத்தை முழுவதுமாகப் பிரயோகித்து புகைப்படக்காரர்களை நெட்டித் தள்ளினர். அப்படியும் விடாப்பிடியாக இருந்த சிலருக்கு வயிற்றில் 'பஞ்ச்'!

நடராஜனும் அவர் தம்பி பழனிவேலும் ஏற்படுத்திக் கொடுத்த வழியில் சென்று லிப்டிற்குள் நுழைந்தார் சசிகலா.

மூன்றாவது தளத்தில் லிப்டிலிருந்து வெளியே வந்தார் சசிகலா. மறுபடியும் மொய்த்துக் கொண்டு, படமெடுக்கத் தயாரானார்கள் புகைப்படக்காரர்கள். ஆனால் அவருடன் வந்த கும்பல் மீண்டும் தன் கைவரிசையைக் காட்டியது. பாரம்பரியமிக்க ஆங்கிலப் பத்திரிகையின் புகைப்படக்காரருக்கு, சரியான அடி!

"நகருங்கடா... ஏண்டா எங்கள் உயிரை வாங்கறீங்க" என்று வேட்டி கட்டிய சசிகலா தொண்டர் ஒருவர் ஆவேசமாகப் பாய்ந்தார். இந்த களேபரத்தில் அலுவலகத்துக்குள் நுழைந்தார் சசிகலா!

நடராஜன் பேச்சாலும், அடியாட்களின் அத்துமீறல்களாலும், பாதிக்கப்பட்ட புகைப்படக்காரர்கள், நடராஜனை எதிர்த்து கோஷம் போடத் துவங்கினார்கள். அந்த தளத்திலிருந்த கழிப்பறை பழுதாகி



''ராஜா மாதிரி ஒரு ஆள் காரோட, வீட்டோட லட்ச லட்சமாக சொத்தோட வந்து உன்னைக் கல்யாணம் பண்ணிப்பான்!''

''அது சரி... இப்ப இருக்கிற என் வீட்டுக் காரரை நான் என்ன செய்வது?''

— இரா. முத்துவேல்

இருந்ததால் 12 மணி வாக்கில் வெளியே வந்து, கீழ்த் தளத்துக்குச் செல்ல முயன்ற நடராஜனை மடக்கி மன்னிப்புக் கேட்கச் சொன்னார்கள். அவரோ மன்னிப்பு கேட்க மாட்டேன் என்று மறுத்து மறுபடியும் அ.பி. அ.வில் நுழைந்து கொண்டார். இந்த கலாட்டாவில் அ.பி. அலுவலகப் பணியாளர் ஒருவரின் கைக்கடிகாரம் காணாமல் போனது!

புகைப்படக்காரர்கள் ஐம்பது பேர் சேர்ந்து, தாங்கள் தாக்கப்பட்டதாகப் புகார் மனு தயாரித்து 'Fax' மூலம் கமிஷனர் அலுவலகத்துக்கு அனுப்பினார்கள். ஆனால் கமிஷனரோ, 'இப்படிக் கும்பலாகப் புகார் கொடுத்தால் நடவடிக்கை எடுக்க முடியாது' என்று கூறி, 'பாதிக்கப்பட்ட வர்கள் நுங்கம்பாக்கம் போலீஸில் தனித்தனியாகப் புகார் கொடுக்கவும்' என்று வழிகாட்டினார்! இதைத் தொடர்ந்து ஆங்கில தினசரியின் புகைப்படக்காரர்கள் இருவர் புகார் கொடுத்தனர்.

இதற்கிடையில் சசிகலாவைக் கேள்விகளால் திணறடித்துக் கொண்டிருந்தனர் அ.பி. அதிகாரிகள். கூடுதல் இயக்குனரும், துணை இயக்குனரும் கேட்ட கேள்விகளுக்கு அவர் பதில் சொன்னதை ஒரு பெண் அதிகாரி ஸ்டேட்மெண்டாக எழுதிக் கொண்டிருந்தார்.

ஜெ.ஜெ. டீ.வி. டிரான்ஸ்பாண்டர் வாடகைக்கு எடுத்ததற்கு அமெரிக்கக் கம்பெனி முறைகேடாகப் பணம் கொடுத்ததாக உள்ள குற்றச்சாட்டு தவிர, கோத்தகிரியில் ஆறு கோடி மதிப்புள்ள எஸ்டேட் வாங்கப் பணம் எப்படிக் கிடைத்தது என்றும் கேட்டுக் குடைந்து விட்டார்கள் அதிகாரிகள். விசாரணையின்போது சசிகலாவுடன் யாரும் இருக்க அனுமதிக்கப்படவில்லை. கிட்டத்தட்ட 25 கேள்விகளில் பாதிக்கு மட்டுமே பதில் சொன்னார் சசி.

பிற்பகல் மூன்று மணிவாக்கில் சசிகலா கைதாவார் என்பதற்கான அடையாளங்கள் தெரியத் துவங்கி விட்டன. மற்றொரு சேனலில், புகைப்படக்காரர்களை தாக்கியதற்காக நடராஜன் அண்ட் கோ மீது தக்க நடவடிக்கை எடுக்கத் தமிழக போலீஸ் தயாரானது. ''கைது செய்யலாமா?'' என்று முதல்வர் வரையில் விஷயம் எடுத்துச் செல்லப்பட்டு கடைசியில் ஓ.கே. செய்யப் பட்டது. முதற்கட்டமாக நடராஜன் தம்பி பழனிவேலு, (இவர் போலீஸ் இன்ஸ்பெக்டர்!) மற்றும் அடியாட்கள் கைது செய்யப்பட்டனர்.

இதற்கிடையில் இந்திரகுமாரி, செல்வ கணபதி ஆகியோர் அ.பி. அலுவலகத்துக்கு வந்து விட்டனர். சசிகலாவின் அக்கா வனஜாவின் கணவரும், பாஸ்கரன், தினகரன் ஆகியோரது தந்தையுமான விவேகானந்தன், கீழ் தளத்தில் நின்றவாறே எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந் தார். அ.தி.மு.க. எம்.பி. தளவாய் சுந்தரம் செல்லுலரில் போயஸ் தோட்டத்துடன் தொடர்பு கொண்டு அவ்வப்போது தகவல்களைச் சொல்லிக் கொண்டிருந்தார். மதியம் போயஸ்காரர்டன் உணவை அனுமதித்த அ.பி. அதிகாரிகள், இரவு தாங்களே ஓட்டலிலிருந்து வாங்கிக் கொடுத்து விட்டனர்.

சசிகலாவுடன் வந்த கும்பல், தனித் தனியாகப் பிரிந்து, ஆங்காங்கே நின்று கொண்டு, ஊழியர்கள் மற்றும் பாஸ்போர்ட் அலுவலகத்துக்கு வந்த பொதுஜனங்களின் பேச்சுக்களையும் ஒட்டுக் கேட்டது. மாலை ஆறு மணிக்கு மேல், பணியாளர்கள் வீட்டுக்குச் சென்று விட, புகைப்படக்காரர்களும் போலீஸ்காரர்கள் மட்டுமே வளாகத்துக்குள் இருந்தார்கள்.

சரியாக இரவு 8.40க்கு 'You are arrested' என்று அ.பி. அதிகாரிகள் சசிகலாவிடம் சொன்னார்கள். கண்களில் நீர் கோத்துக் கொண்டது அவருக்கு. தனி அறையிலிருந்து வெளியே வந்த அவரிடம் நடராஜன், இந்திர குமாரி ஆகியோர் 'ஒன்னும் ஆகாது... தைரியமா இரும்மா' என்று ஆறுதல் கூறினர்.

சசிகலாவுடன் போலீஸ் ஜீப் நேராக மேத்தா நகரில் உள்ள மாஜிஸ்ட்ரேட் வீட்டுக்குச் சென்றது. பதினைந்து நாள் ரிமாண்டில் வைக்க உத்தரவிட்டார் அவர். 11.25 மணிவாக்கில் சென்னை மத்திய சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார் சசிகலா.

— கௌசி

KALKI SHOPPING PAGE

7 பகவான் வீதி ஊர்வலமாய் எழுந்தருள்கிறார். சரீர உபாதை இருப்பவர்களை உத்தேசித்து அவர்கள் வீட்டு வாசலுக்கே வருகிறார்; வந்து சேவை கொடுக்கிறார். அப்படியொரு நாள் பகவான் எழுந்தருளும்போது எல்லோரும் கற்கண்டு, புஷ்பம் என்று தட்டிலே வைத்துக் கொண்டு வீதியிலே காத்திருக்கிறார்கள். ஒருவர் மட்டும் விஷயம் தெரியாமல் உள்ளேயே இருக்கிறார். அவர் வீட்டு வாசலில் வந்து பகவான் நிற்கிறான். இவர் எதையும் சித்தமாய் வைக்கவில்லை. ஆனால் அவர் ரொம்ப சதுரர் - கெட்டிக்காரர் - பகவானிடம் போய் நின்று கொண்டு, "அப்பனே! அவர்களெல்லாம் புஷ்பம், தேங்காய், வாழைப்பழம் என்று சமர்ப்பித்தார்கள். உன்னிடம் எது இல்லையோ அதையல்லவா சமர்ப்பிக்கணும்..." என்றார்.

உடனே பரமாத்மா கேட்டானாம் - "இவ்வளவு கேட்கிறீரே... நீர் ஏதாவது சமர்ப்பிக்கப் போறீரா இல்லையா...?"

"உன்னிடத்திலே எது இல்லையோ அதைக் கொடுத்தால் தானே உயர்த்தி...?" என்றார் பக்தர்.

"என்னிடத்திலே என்ன இல்லை என்று உனக்குத் தெரியுமா...?" - பகவான் கேட்கிறார்.

"அதைத் தெரிஞ்சு வைச்சுண்டுதான் அதைக் கொடுக்க வந்தேன்..."

"என்னது அது...?"



"கிருஷ்ணாவதார காலத்திலே கோபிகாஸ்த்ரீகளுடன் நீ சஞ்சாரம் பண்ணினாய் அல்லவா... அப்போதே உன் மனசை அவர்கள் எடுத்துக் கொண்டு விட்டார்கள். ஆகையினாலே உன் மனசு உன்னிடத்தில் இல்லை... அதற்குப் பதில் என் மனசை உனக்குக் கொடுக்கிறேன்..." என்றார் பக்தர்.

பகவான் பதிலே சொல்லலை; வாயை மூடிக் கொண்டு விட்டார்!

ஆகவே மனசை சமர்ப்பிக்கணும். தேங்காய், கற்பூரம், பூ என்று சமர்ப்பித்து, மனசை அர்ப்பணிக்கலைன்னா ஏற்பானோ அவன்...?

எதுவாயிருந்தாலும் மனசுடன் சேர்த்துச் சமர்ப்பிக்கப்படுவதுதான் உயர்த்தி என்று உணர்த்தத்தான் அந்த பக்தர் மனசையே அர்ப்பணித்தேன் என்றார்.

பூரணனான அவன் நம்மிடத்திலே ஒன்றே ஒன்றைத்தான் எதிர்பார்க்கிறான். இந்த மனசு அவனுடையது என்று அர்ப்பணிக்கிறோமா என்பதைத் தான் எதிர்பார்க்கிறான். அதை மட்டும்தான் எதிர்பார்த்து உயர்ந்த நிலையை நமக்குக் கொடுக்கிறான்.

நம் மனசை சமர்ப்பிக்காவிட்டால் நாம்தான் அபூர்ணர்களாகிறோமே தவிர அவன் பூரணனாகத் தான் இருக்கிறான்.



திரையொன்றுமில்லை..

எல்லா குணங்களுக்கும் உரியவனாய், ஆபரணங்கள், ஆஸ்ரயங்களுடன் இருக்கிறான்; பகவான் சகலத்திலும் பூரண மாய் இருக்கிறான் என்று சரணாகதி கத்யத்தில் விவரிக்கப் படுகிறது.

திவ்யாபரணங்கள் அவனுக்கு உண்டா...? அவற்றை ஏன் தாங்கியிருக்கிறான்...?

விச்வமாய் காட்சி அளிப்பவனே; தாமரைக் கண்ணனே! உனக்கு ரூபம் கிடையாது, ஆயுதம் கிடையாது, ஆகாரம் கிடை யாதுன்னு அதைச் சொல்கிறோமே... அவையெல்லாம் உனக்கு இருப்பதைப் பார்த்துக் கொண்டே சொல்கிறோமே...? என்று கேட்கலாம்.

ரூபம் இருக்கிறது என்றால் அது அவன் பொருட்டு இல்லை; பக்தர்கள் சேவித்து மகிழ்வதற்காகத்தான் இருக்கிறது.

அவனுக்கு ஆயுதங்கள் இருக்கிறது என்று சொன்னால், அவை நம் இடுக்கண் களைய அவன் தரித்தவை. அவன் பொருட்டு அல்லாமல் நம் பொருட்டுதான் அவன் அவற்றை ஏந்துகிறான்.

ஆபரணங்கள்...! திவ்யமேனியில் இவ்வளவு திருவாபரணங் கள் தரித்திருக்கிறானே! 'ஆபரணத்துக்கு அழகு செய்யும் பெரு மாள்; முன்னழகைக் காட்டிலும் பின்னழகு விஞ்சி நிற்கும் பெருமாள்' என்று பராசர பட்டர் ஸ்ரீ ரங்கநாதருக்குக் கட்டி யம் சொல்கிறார்.

ஒருத்தர் ஒரு லட்ச ரூபாய் செலவில் பெருமாளுக்கு முத் துக் கொண்டை செய்வித்தாராம். அதை அணிவித்து கற்பூர ஹாரத்தி காட்டி சேவிக்கிறார்கள். எல்லோரும், 'ஆஹா! அவன் எவ்வளவு அழகா இருக்கான்' என் கிறார்கள். இப்படிச் சொன்ன வார்த்தை ரொம்ப அபசாரமான வார்த்தை! இந்த முத்துக் கொண்டை இல்லையென்றால் அவன் அழகன் இல்லையா...?

உபசாரமாகச் சொல்ல வேண்டுமென்றால் என்ன சொல்லணும்...? அவன் திருமேனி சம்பந்தப்பட்டதனால் அல்லவோ இந்த முத்துக் கொண்டை இவ்வளவு சோபை பெற்றது! என்று சொல்ல வேண் டும்.

அதே மாதிரிதான் இந்த ஆத்மாவும், அவன் திருவடிக்கு அர்ப்பணமானதினாலேதான் அழகு பெறுகிறது. இந்த சரீரத் திலே அது உட்கார்ந்து கொண் டிருந்தால் அதற்கு அழகு ஏது...?

இன்னதால்தான் அவனுக்கு அழகும் தேஜஸும் உண்டாகின் றன என்று சொல்ல முடியாத அளவுக்கு சர்வத்தையும் தன் னுள்ளே அடக்கி, காத்து, அழிக் கும்படியான ஆற்றல் கொண்ட வன் பரமாத்மா.

முக்கூர்

லக்ஷ்மி நரசிம்மாச்சாரியார்



ருக்மிணி அவனை புவன சுந்தர: என்று அழைக்கிறாள். 'உலகத்திலேயே அழகுடைய வன் நீ ஒருவன்தான். நீ எல்லா சராசரங்களுக்குள்ளேயும் இருப் பதனாலே அவை அழகு பெறு கின்றன. அதனாலே உலகத் திலே அழகன் நீ ஒருவன்தான்' என்று அர்த்தம்.

ஒருத்தர் கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொள் கிறார். 'நான் அழகன்தான்' என்று அவருக்குத் தோன்று கிறது. அவரைக் காட்டிலும் பல அழகர்கள் இருக்கலாம். அப்படி யும் அவருக்கு அப்படித் தோன்றுவானேன்?

அவருக்குள்ளேயும் பகவான் அந்தர்யாமி யாய் உட்கார்ந்திருப்பதினாலே தான் அப்படித் தோன்றுகிறது.

சுயக்ஞன் என்றொரு வித்யார்த்தி (மாண வன்) இருந்தான். தினமும் குருவின் வஸ் திரத்தைத் துவைத்து வைப்பது அவன் பொறுப்பாயிருந்தது. அதை எடுத்து உதறி குரு, தாமே உலர்த்திக் கொள்வார்.

ஒருநாள் அப்படி உதறிய போது, மாண்டு போன மீன்கள் அதிலிருந்து உதிர்ந்தன. அவற்றினால் ஏற்பட்ட அசுத்தம் வஸ்திரத்தில் கறை கறையாகப் படிந்திருந்தது.

ஆற்று நீரில் வஸ்திரத்தை அலசும் போது அதில் சிக்கிய மீன்களைக் கவனிக்காமல் சேர்த்துப் பிழிந்திருக்கிறான்!

இவ்வளவு அலட்சியமா! என்று குரு கோபித்துக் கொண்டார். உடனே சாபம்தான்! நீ பன்றியாகக் கடவாய் என்று சாபம் கொடுத்து விட்டார்!

மாணவன் நடுநடுங்கிப் போய் விட்டான்.

"சுவாமி! பன்றி வாழ்க்கையை நினைத் தாலே நடுக்கமாய் இருக்கு. எப்படியாவது சாபத்தைப் போக்குங்கள்..." என்று கெஞ் சினான்.

"எனக்கு சாபம் கொடுக்கத்தான் தெரியும். போ!" என்று சொல்லி விட்டார் குரு.

சாபம் பலிதமாவதற்குள் சக வித்யார்த்தி களிடம் போனான். நடந்ததைச் சொன்னான்.

"ஆசார்யர் சுமுகமாய் இருக்கிற நேரத்திலே அவரைக் கேட்டு, நான் எந்த இடத்திலே இருக் கேன் என்று தெரிந்து கொள்ளுங்கள். நான் இருக்கிற இடத்துக்கு வந்து என்னை அடித்துக் கொன்று விடுங்கள். என்னாலே அந்த வராஹ ஜன்மத்தைத் தாங்க முடியாது..." என்று வேண் டிக் கேட்டுக் கொண்டான்.

உடனே அந்த வித்யார்த்திகளெல்லாம் "கூட படிச்சதுக்காக நாங்கள் இதைக் கூட பண்ண மாட்டோமா...?" என்றார்கள்.

சாபம் பலித்து விட்டது. ஒருநாள் சாயங் காலம் குரு சந்தோஷமாக இருக்கிறார். வித்யார்த்திகளெல்லாம் அவரிடம் போய் காலில் விழுந்து சேவித்துக் கேட்கிறார்கள். "சுயக்ஞன் எங்கே பிறந்திருக்கிறான்? அவனுக்கு நாங்கள் உதவணும்" என்கிறார்கள்.

குரு, ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சொல்லி, "அங்கே ஒரு பன்றி, ஆறு குட்டிகள் போட்டி ருக்கும். அதில் ஐந்து குட்டிகள் கறுப்பாயிருக் கும். ஒரு குட்டி மட்டும் முன்னும் பின்னும் வெள்ளைத் திட்டு உள்ளதாய் இருக்கும்..." என்று அடையாளம் காட்டுகிறார்.

சீடர்கள், குரு சொன்ன இடத்தில் போய்ப் பார்க்க, அவர் சொன்னபடியே ஆறு குட்டி களில் ஒன்று மட்டும் வேறுபட்டு தெரிந்தது. குரு சொல்லிக் கொடுத்த ஒரு மந்திரத்தைச் சொன்னார்கள். மற்ற குட்டிகளெல்லாம் ஓடி விட, அது மட்டும் அவர்களின் அருகே வந்தது. எல்லா சிஷ்யர்களும் தடியை ஓங்கிக் கொண்டு தயாரானார்கள். அந்தப் பன்றிக் குட்டியோ ஓட ஆரம்பித்தது!

"நில்லு, நில்லு! நீ சொல்லித்தான் வந்திருக்கோம். இந்தப் பன்றி ஜன்மாவிலிருந்து உனக்கு விடுதலை தர வந்திருக்கோம்..." என் றார்கள்.

"அப்போ நான் சொல்லியிருக்கலாம். ஆனால் இப்போது என்னை அடிக்காதீர்கள். என் தாயார் என்னிடம் எத்தனை அன்பாக இருக்கிறாள். என்ன பட்டான மேனி இது...?" என்றது பன்றிக் குட்டி.

வித்யார்த்திகள் விக்கித்துப் போய் நிற்கையிலேயே, 'என்னை அடிக்கவே அடிக் காதீர்கள்' என்று அது ஓடிப் போய் விட்டது.

அந்த சிஷ்யர்களெல்லாம் ஒன்றும் புரியாமல் தலையைச் சொறிந்து கொண்டு குருவிடமே திரும்பிப் போனார்கள்.

ஆசார்யர், "நீங்களாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றுதான் நான் பேசாமலிருந்தேன். உங்களுக்கு வேண்டுமானால் பன்றி பண் ணுகிற காரியம் அருவருப்பாய் இருக்கலாம். ஆனால் அதற்கு அது யோக்யமாய்த்தானே இருக்கு, திருப்தியாய்த்தானே இருக்கு... அதனு டைய ஆனந்தத்தை நாம் இல்லாமல் பண்ணி விட முடியுமா...!" என்றார்.

இப்படி ஒவ்வொரு உயிருக்குள்ளேயும் உட்கார்ந்து கொண்டிருக்கிறான் பகவான் என்பதைத் தெரிவிப்பதுதான் சுயக்ஞன் கதை. அதனால்தான் அவரவர்க்கு அவரவர் உருவம் உயர்த்தியாகத் தெரிகிறது. அதனாலே எந்த உயிரையும் நாம் அலட்சியம் பண்ணிவிட முடியாது!

பத்து லட்ச ரூபாய்க்கு நோட்டுக் கட்டாக அடுக்கி வைத்திருக்கு.. நமக்கு அந்த ரூபாய் உயர்த்தியாகத் தெரிகிறது. அதிலே இரண்டு லட்சமிருந்தா உபயோகமாயிருக்குமேன்னு நினைக்கிறோம்.

ஆனால், அங்கேயிருந்து நாலு கட்டெறும்பு வரும். அந்த நோட்டு கட்டு மேலே ஊர்ந்து மறுபக்கம் போய்க் கொண்டேயிருக்கும்...!

நமக்கு ரொம்ப உயர்த்தியாய் உள்ள பொருள் கட்டெறும்புக்குப் பிடிக்கிறதா! அதுக்கு அதன் உயர்வு தெரியவேயில்லையே! அப்படியும் ஒரு ஜீவன் உலகத்திலே ஜீவிக் கிறதில்லையா...?

இதனாலே உலகத்திலே எதுவுமே பரமார்த் தம் இல்லைன்னு தெரியறது. பரமாத்மாதான் பரமார்த்தம். அவன் அந்தர்யாமியாய் இருந்து, பூரணனாய் இருந்து பூரணமாய் ஆனந்தம் கொடுப்பதினாலேதான் 'புவன சுந்தர:' என்று ருக்மிணி அவனை அழைத்தாள்.

(தொடரும்)

Make your Money work for you with Sindhoori Deposit Schemes

Special Customer Service

HIGHLIGHTS

- Free Master Health check-up at Apollo Hospitals.
- Personal Accident coverage for the first named depositor.
- Concessional terms on Car financing.
- Postdated interest warrants along with Deposit Receipt.
- Outstation repayments will be made by way of demand draft.
- Outstation cheques accepted at par.
- CARE Rated Company.

SCHEME I FIXED DEPOSITS

Period of Deposit	Rate of Int. per annum	
	Monthly	Quarterly
12 months to 60 months	15%	15.19%

SCHEME II CUMULATIVE DEPOSIT

Period of Deposit	Maturity amount on every Rs. 3000/- of deposit	Effective Annual yield
1 Year	3,482	16.08%
2 Years	4,042	17.37%
3 Years	4,692	18.80%
4 Years	5,446	20.38%
5 Years	6,321	22.14%

For full text under Non-Banking Financial Companies & Miscellaneous Non-Banking Companies (Advertisement Rules 1977) refer advertisement released in the Trinity Mirror & Makkal Kural on 18-10-95

OM SINDHOORI CAPITAL INVESTMENTS LTD.

A Part of the Apollo Hospitals Group

Registered Office: Ali Towers, 22, Greams Road, Madras - 600 006. Ph: 8233702, 8233680.
Branch Offices : Bangalore - Ph: 2281529 Cochin - Ph: 368401, Hyderabad - Ph: 316335.
(Applications are also accepted at the offices of the various Managers to the Scheme)

காணவில்லை : காதல்

கர்நாடகா எக்ஸ்பிரஸ் கண்ணுக்கெட்டிய தூரம் வரை இரண்டு பக்கமும் நீண்டு கிடந்தது. குப்பை கூளங்கள், மறந்து போன கர்சீப், வாட்டர் பாட்டில் என்று பயணிகள் விட்டுப் போன அடையாளங்கள் மட்டும் தாங்கி 'ஹோ'வென்று காலியாக நின்றது.

அதன் ஆயாச வெறுமையில் ரஞ்சனி தன்னைப் பார்த்துக் கொண்டாள்.

"இந்த ரயிலைப் பார்த்தா பாவமா இல்லை நந்து...?"

நந்து பேந்தப் பேந்த விழித்தான்.

"ஏன்மா...?"

"எல்லாரையும் கொண்டு வந்து இறக்கிட்டு இப்ப தனியா, காலியா இருக்கே..."

"போம்மா! ரயிலுக்கு ஒண்ணும் lonelyயா இருக்காது..." என்ற நந்துவை ஆமோதித்தான் ஷ்யாம்.

"ஆமாம்! அது என்ன மனுஷனா? எல்லாரையும் தூக்கிக்கிட்டு ஓட வேண்டியது அதன் வேலை. அதைத்தானே அது செய்யறது. நீதானேம்மா சொல்லுவே... அவங்கவங்க வேலை அவங்கவங்க செஞ்சா no problemனு..."

இந்த பூமராங்கை எதிர்பார்க்காத ரஞ்சனி கொஞ்சம் அசடு வழியச் சிரித்தாள்.


"நம்ம அப்பாவோட வேலை இப்படி ஸ்டேஷன் பிளாட்ஃபார்ம் பெஞ்சல ஜோரா குறட்டை விட்டுத் தூங்கறது... இதோ எழுப்பறேன் பாரு..."

தியாகுவின் கண் இறப்பைகளைப் பிரித்து இழுத்தான் ஷ்யாம்.

"ஏய்! வாலு!" அவனைச் சின்னப் பந்து போல் சுருட்டி அணைத்துக் கொண்டான் தியாகு.

"அப்பா, பெப்ஸி வேணும்!" என்ற நந்துவின் கையைப் பிடித்துக் கக்கத்தில் வைத்துக் கொண்டான்.

"ஷ்...! உங்க ரெண்டு பேருக்கும் ஒண்ணும் கிடையாது. கொஞ்சம் முன்னாடி இந்த கர்நாடகா எக்ஸ்பிரஸ்ஸின் தனிமை பற்றித் தத்து வார்த்தமாய் உரை நிகழ்த்திய திருமதி ரஞ்சனி தியாகராஜனுக்கு



மட்டுமே சூடாக ஒரு கப் காப்பி...!"

"இது சீட்டிங்! அழுகுணி! அப்பா டவுன் டவுன்!"

பெங்களூர் சிடி ஸ்டேஷனின் ஐந்தாவது பிளாட்ஃபாரத்தில் தங்களைத் தவிர ஈ காக்காய் இல்லாத தைரியத்தில் குழந்தைகள் கத்தினார்கள்.

"ஷ்!" என்றாள் ரஞ்சனி.

"இருங்கடா!" என்று பர்ஸைத் திறந்து எண்ணினான் தியாகு.

"இது காப்பி, பெப்ஸிக்கு, அப்புறம் ஷதாப்தி எக்ஸ்பிரஸ்ஸிலே டிபன், சாப்பாடு குடுத்துருவான், கவலையில்லை. அப்புறம் இது, சென்ட்ரல்லேருந்து வீட்டுக்குப் போக, இது நாளைக்கு நம்ம ராஜு தூத்துக்குப் பெட்ரோல் போட..... ரைரைட்! வாங்க பெப்ஸிக்குப் போவோம்..."

"யே...!" என்று புறப்பட்டனர் குழந்தைகள்.

"நான் லக்கேஜோட இங்க இருக்கேன். நீங்க காப்பியை வாங்கிக்கிட்டு வாங்க...."

தியாகுவை ரஷியபடி நடந்து போன குழந்தைகளைப் பார்க்க ரஞ்சனிக்குச் சிரிப்பு வந்தது. தங்கள் நிலைமையை எண்ணி மேலும் கொஞ்சம் சிரிப்பு....

சீதா ரவி

ஏதேதற்கோ திட்டமிட்டுச் சேமித்த பத்தாயிரம் ரூபாய் எஃப்.டியை உடைத்து விடுமுறை கொண்டாடியாகி விட்டது. பெங்களூர் வந்திறங்கியது முதல் டீலக்ஸ் ரூம்தான். டாக்ஸி வைத்துக் கொண்டு, மைசூர், ஸ்ரீரங்கபட்டணம், ரங்கணதிட்டு, சோம்நாத்பூர், சிரவணபௌகோலா, ஹலிபீடு... கேட்ட இடத்திலெல்லாம் ஐஸ்கிரீம், பம்பரம், கண்ணாடி வளையல், பொம்மை, கூலிங்கிளாஸ். ஆசைக்காக ஷதாப்தியில் ரிடர்ன் டிக்கட் வாங்கி வஞ்சனையின்றி வேட்டு விட்டு விட்டு விடுமுறையின் கடைசி நாளில் மட்டும் தோட்டை



எண்ணி எண்ணிப் பார்க்கிறான் தியாகு! மாலை வரை ஹோட்டலில் தங்கினால் மேலும் நானூறு ரூபாய் வெட்ட வேண்டும். ஊர் சுற்றினாலோ இன்னும் செலவு! ஆகவே சூட்கேஸ் நிறைய அழுக்குத் துணியுடன் கேர் ஆஃப் பிளாட்ஃபாரம்! நாலு மணிக்கு ஷதாப்தி புறப்படும் வரை இங்கே ஈயோட்டியாக வேண்டும்.

சட்டென்றொரு அசைவு ரஞ்சனியின் கவனத்தை ஈர்த்தது. இருபதடி தள்ளி இன்னொரு பெஞ்சில்... ஜரிகை கரை வேஷ்டியும் சந்தனப் பொட்டுமாய் அவன். அருகே, பிசுக்கேறாத மஞ்சள் கயிறும் இன்னும் மங்காத மருதாணியுமாய் அவள். முகூர்த்தம் முடிந்து இன்னும் மூன்று நாட்கள் கூட ஆகியிருக்காது போலும்...

மிக நெருக்கமாகி அவள் முகத்துக்குள் பார்த்துப் பேசிக் கொண்டிருந்தான் அவன். கண்களில் உலகத்தின் காதல் மொத்தமும் தேங்கியிருந்தது. அவள் இன்னும் கொஞ்சம் நெருங்கி உட்கார்ந்தாள். அவன் கை அவள் தோளைச் சுற்றி வளைத்து சுவாதீனமாய் இறுக்கியது. அவள் கூச்சமின்றி ரசித்துக் கொண்டிருந்தாள். அவள் பின்னலில் இருந்த வதங்கிய கனகாம்பரத்தின் துர்வாசனையை அவன் முகர, அவன் சட்டையில் ஒட்டாத தூசியை அவள் தட்டிவிட... ஸ்பரிசிக்கக் காரணங்களை உருவாக்கிக் கொண்டிருந்தனர் இருவரும்.

ரஞ்சனிக்குப் பழைய நினைவுகள் முட்டி மோதிக் கொண்டு வந்தன. தியாகுவும் தானும் காதலித்த நாட்களில் அரங்கேறிய சின்னச் சின்ன அந்தரங்க நாடகங்கள். அப்புறம் கல்யாணமான புதிதில் தாமரை மொட்டைப் பிரித்து மலர்த்தியது போல் மென்ன விரிந்து விகசித்த இன்னொரு பரிமாணம்.

தெரு முனையில் 'பைக்' சப்தம் கேட்கும் போதே மனசு துள்ளும்; ஒவ்வொரு இரவும் ஒரு புதுக்கவிதையாக நடைபோடும்.

ஒரு நாள்... சமையலறை லைட் ஃப்யூஸாகி விட, இவள் மெழுகுவத்தி ஏற்றி அவசரமாய் ரசத்துக்குத் தாளித்துக் கொண்டிருந்தாள். உள்ளே வந்தவன், அரையிருட்டில் வியர்வை துளித்த அவள் முகத்தைத் தன் வேட்டி முனையால் ஒற்றி எடுத்தான். தொடர்ந்து நடந்தவற்றுக்கு மெழுகுவத்தியும் கொதித்துக் குறுகிப் போன ரசமும் சாட்சி!

அதன் பிறகு ஆறு மாதங்களுக்கு மெழுகுவத்தியைப் பார்த்தபோதெல்லாம் நமுட்டுச் சிரிப்பும் கனிந்த பார்வையும் பரிமாறிக் கொண்டார்கள். நந்து பிறக்கப் போவது உறுதியான போது, விளக்கை அணைத்துவிட்டு மெழுகுவத்தி ஏற்றிக் கொண்டாடினார்கள்.

நந்து, ஷ்யாம் அடுத்தடுத்து பிறந்து விட, வெயிலில் உறிஞ்சப்பட்ட தண்ணீராக அத்தனை மென்மையும், இனிய ஸ்பரிசங்களும் அந்தரங்கப் பரிமாற்றங்களும் உலர்ந்து, வறண்டு போய்விட்டன.

வேலை, பொறுப்பு, செலவு, சரிகட்டல் என்று வாழ்க்கை சிடுக்குப் பின்னலாகியிருக்கிறது. 'பைக்' ஓசை கேட்டால் 'ஐயோ! இன்னும் சமையல் முடிக்கலையே, தியாகு வந்து கத்துவாரே' என்று டென்ஷன்தான் ஏற்படுகிறது. இரவுகள் சோர்வுக்குத் தாரை வார்க்கப்பட்டு விட்டன.

மெழுகுவத்தி...? 'அப்பா! என்ன விலை! இதுக்கே மாசா மாசம் கணையா எடுத்து வைக்க வேண்டியிருக்கு...' என்ற யதார்த்த அலுப்பைத் தவிர வேறு எதையும் மெழுகுவத்தி தூண்டுவதில்லை...

“ஏன்? ஏன்? ஏன்?”

ரஞ்சனி ஒரு நாள் அலுப்புடன் கேட்டாள். "நமக்குள்ளே ஒரு காலத்துல இருந்த அன்னியோன்யத்துக்கு நம்ம குழந்தைகள்தான் நினைவுச் சின்னம் இல்ல தியாகு... வெறும் நினைவுச் சின்னம்தான் மிச்சமிருக்கு இப்போ...."

அவள் நீட்டிய காப்பி கோப்பையை வாங்கி விட்டெறியலாம்போல் ஆத்திரம் வந்திருக்க வேண்டும் தியாகுவுக்கு. அவன் பிரும்ம

ANS

ARYA NALA SASWATHA BENEFIT FUND LTD

ஆர்ய நல சாஸ்வத பெனிபிட் பண்ட் லிமிடெட்

(Incorporated under Companies Act 1956)

No.1, அப்பு தெரு முதல் மாடி, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை
(நுங்கம்பாக்கம் மார்கெட் எதிரில்) சென்னை-34. ✆ 8241258

பிக்சட் டெபாசிட்

காலம்	நாட்கள் 45	90	180	1வருடம்	2வருடம்	3வருடம்	4வருடம்	5வருடம்
வட்டி விகிதம்	15%	15.5%	16%	19%	20%	21%	22%	23%

குழந்தை நலதிட்டம்

வைப்புத் தொகை	வருடம்	முதிர்வு தொகை
ரூ.890	21	1 லட்சம்
ரூ.4450		5 லட்சம்
ரூ.8900		10லட்சம்

மறுமுதலீட்டு திட்டம்

வைப்புத் தொகை	மாதங்கள்	முதிர்வு தொகை
ரூ.5000	40	ரூ.10000
ரூ.5000	60	ரூ.15000

பென்ஷனர் நலத்திட்டம்

குறைந்த பட்ச முதலீடு ரூ. 1000 முதல் ரூ. 10,000க்குள்	வருடம்	1வருடம்	2வருடம்	3வருடம்
	வட்டி விகிதம்	20%	21%	22%

குறைந்த பட்ச முதலீடு ரூ. 10,000மும் அதற்கு மேலும்	வருடம்	1வருடம்	2வருடம்	3வருடம்
	வட்டி விகிதம்	21%	22%	23%

டெபாசிட்டுகளுக்கு 1% ஊக்கத்தொகை வழங்கப்படும்.

- தங்க நகை மேல் கிராமுக்கு ரூ. 300 கடன் வழங்கப்படும்.
- வீட்டின் பெயரில் கடன் வழங்கப்படும்.
- ரெக்கரிங் டெபாசிட் வசதியும் உள்ளது.

வேலை நேரம் : 9.00 முதல் 5.00 வரை
ஞாயிறு 9.00 முதல் 1.00 வரை. செவ்வாய் விடுமுறை

தொழில் முறைத் தொடர்பு உறுப்பினர்களுடன் மட்டும்

பிரயத்தனத்துடன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்வதை கவனித்தாள். குழந்தைகள் தூங்கிக் கொண்டிருந்தனர். அவன் வழக்கம் போல் காப்பியை வாங்கி குட்டி மேஜையில் மூடி வைத்து விட்டு, பல் துலக்கப் போனான்.

ஆபீஸ் விட்டு வந்த போது கம்ப்யூட்டர் பிரிண்ட் அவுட் காகிதத்தை நீட்டினான். Departure 12.5.96 by Bangalore mail என்று ஆரம்பித்து பெங்களூர் - மைசூர் பயணத் திட்டம். இறுதி வரிகளாக: 'காணாமல் போன காதலைத் தேடிக் கண்டு பிடிக்கும் இந்த முயற்சிக்கு ஆகப் போகும் செலவு பற்றிப் புலம்புவதில்லை என்று பிரதிக்ஞை செய்து கொள்வோம்!'

வைப்பு நிதி உடைத்து, பெட்டிகளில் துணி அடுக்கி, புறப்பட்டு... இதோ பயணமும் முடியப் போகிறது. காணாமல் போன காதலைத்தான் இன்னும் கண்டு பிடிக்க வில்லை...

ரஞ்சனி பெருமூச்சு விட்டாள். கலகலத்த சிரிப்புடன் தியாகுவும் குழந்தைகளும் திரும்பிக் கொண்டிருந்தனர்.

"இந்தா..."

ரஞ்சனி காப்பியை வாங்கி உறிஞ்சினாள். மில்க் பவுடரின் பச்சை வாசனை தூக்கலாய்த் தெரிந்தது. தியாகு அவள் அருகே அமர்ந்து கொண்டான். குழந்தைகள் காலி பிளாட்ஃபாரத்தில் ஓட்டப்பந்தயம் நடத்தினார்கள். தடதடத்த அவர்கள் ஷூ ஒலியும் அவ்வப்போது எழுந்த 'வீல்' 'வீல்' சப்தங்களும் பெரிய இரைச்சலாகக் கேட்டன.

திடீரென்று ஓட்டப்பந்தயம் நின்று போனது. கிசுகிசுத்தபடி ஷ்யாம் திருட்டு நடையுடன் வந்தது. "சீ! கம்மாயிரு!" என்று அதட்டியபடி நந்து.

"அங்கபாருப்பா... அந்த மாமாவும் மாமியும் லவ் பண்றாங்க..." என்றது ஷ்யாம்.

தியாகு அவன் காட்டிய திசையில் பார்த்த போதுதான் அந்தப் புதுமண தம்பதியைக் கவனித்தான்.

"அவங்க ஒண்ணும் லவ் பண்ணலை. அவங்களுக்குக் கல்யாணம் ஆயிடுச்சு... இல்லப்பா..." நந்து பெரிய மனித தோரணையில் திருத்தினான்.

சட்டென்று ரஞ்சனியைத் திரும்பிப் பார்த்தான் தியாகு. அவள் முகம் பாறையாக இறுகிக் கிடந்தது.

"லவ்னா என்னடா...?" ஷ்யாமிடம் கேட்ட போது அவனுக்கு இலேசாகக் கூச்சம் வந்தது.

"அதான் தினமும் டி.வியில் பார்க்க றோமே... ஒரு பாயும் ஒரு கர்ளும் ரொம்பத் தான் கொஞ்சிப்பாங்க..."

"ஐயே....! என்றான் நந்து பொய்யான அருவருப்புடன்.

"அப்புறம்....?"

"ஆங்... எனக்குத் தெரியும்! கல்யாணம் பண்ணிப்பாங்க. ரகு மாமா, ஜீவா ஆண்ட்டி பண்ணிக்கலை... அது மாதிரி..." நந்து சீரியஸாகவே பதில் சொன்னான்.

"சரி, கல்யாணம் பண்ணிக்கிட்டப்பறமும் லவ் பண்ணலாம் இல்ல..?" தியாகுவின் கேள்வி புரியாமல் குழந்தைகள் விழித்தார்கள்.

"போதுமே! குழந்தைங்ககிட்டே எதைத் தான் பேசறதுன்னு இல்லையா...?" ரஞ்சனி அலுத்துக் கொண்டாள்.

"இரு ரஞ்சனி. நீ சொல்லுடா ஷ்யாம்..."

"அம்மாவும் நீங்களும் 'லவ்' பண்ணி நான் பார்த்ததேயில்லையே...."

"தியாகு! திஸ் இஸ் டூ மச்...!"

"இப்ப உங்களையும் சேர்த்து லவ் பண்ண வேண்டியிருக்கேடா.... டைம் பத்தலை..."

"ஆனா, இப்ப அம்மாவுக்கு மூணு லவ் இருக்கே... நீங்க, நான், நந்துக்கா...'' விரல் விட்டு எண்ணியது ஷ்யாம்.

"ஆமாம்டா! ஆனா நான்தானே ஃபர்ஸ்ட் லவ்..!" ரஞ்சனியின் கை பிடித்து பளிச்சென்று இதழ் பதித்தான் தியாகு.

"கிடையாது! கிடையாது! நான்தான் ஃபர்ஸ்ட்!" ரஞ்சனியின் மடியில் ஏறி உட்கார்ந்து கொண்டான் ஷ்யாம்.

"உனக்கு முன்னாடி நான்தான்" கழுத்தைக் கட்டிக் கொண்டாள் நந்து.

"ஐயோ! அப்ப நானு...?" தியாகு ஏமாற்றமாய் நடிக்க, குழந்தைகளின் பிடி மேலும் இறுகியது.


உள்ளுக்குள் ஒரு டஜன் மெழுகுவத்திகளை ஏற்றி வைத்ததுபோல் உருகி ஒளிர்ந்தாள் ரஞ்சனி.

"இன்னொரு முறை என் மகளிடம் லவ் லெட்டர் கொடுத்தால் உன் கையை வெட்டி விடுவேன்'னு மிரட்டல் கடிதம் வந்திருக்குடா?"

"லவ் லெட்டர் கொடுக்காம இருந்துட வேண்டியதுதானே....!"

"கடிதத்துல விலாசம் இல்லாததால எந்த பெண்ணோட அப்பா எழுதியிருக்கார்னு தெரியலை!"

— ஜூனியர் தேஜ்



ஸ்ரீ கந்தசுவாமி

பர்மனென்ட் பண்டு லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம் துவக்கம் 1990

பதிவு அலுவலகம்: 60, சாமி பண்டாரம் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2. ph: 848917

கிளை அலுவலகம்: 36, ஜீனிஸ் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை-600 015. போன்: 459569



கந்தகோட்டம்
ஸ்ரீமுத்துக்குமாரசுவாமி

பிக்சட் டிபாசிட்

46நாள்	3மாதம்	6மாதம்	ஆண்டு	2ஆண்டு	3ஆண்டு	4ஆண்டு	5ஆண்டு
13%	14%	15%	17%	18%	18.5%	19%	20%

21%

5 வருடங்கள்
ரூ.50,000/-
அதற்கு மேலும்

PB பாண்டு

முதலீடு	காலம்	திரும்பப் பெறும் தொகை
ரூ. 25,000	60 மாதம்	ரூ. 70,000


சொத்துக்கள் மீது கடன்

- வீடு / ஃப்ளாட் பேரில் கடன் வழங்கப்படும்.
- மாத வட்டி ரூ.1.85 மட்டுமே
- விரைந்த சேவை.
- சென்னை மாநகராட்சி எல்லைக்குள் இருக்க வேண்டும்.



நகைக்கடன்

- குறைந்த வட்டிக்கு கிடைக்கும்
- 10 கிராமுக்கு ரூ.3000 வழங்கப்படும்.
- R.D. கட்டத் தேவையில்லை
- எந்த சார்ஜும் வசூலிப்பதில்லை



பாதுகாப்புப் பெட்டக வசதியும் உண்டு.

பென்ஷனர் நலத்திட்டம்

20% P.a ரூபாய் 10 ஆயிரமும் அதற்கு மேலும் காலம் 1 ஆண்டு வயோதிகர், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.



சேர்மன்:

P. பாலசுப்பிரமணியம், B.Sc.,
முதன்மை அறங்காவலர்,
கந்தகோட்டம்,
சென்னை-600 003.
நிர்வாக இயக்குனர் :
பார்க் டவுன் பெனிபிட்
பண்டு லிட்.

இயக்குநர்கள் குழு

R.விவேகானந்தன் B.Com.,
(Chairman : Park Town Benefit Fund Ltd.)
A.சுப்பிரமணியன்
V.சண்முகவடிவு B.A.,
V.விஜயகோபால் B.Com., D.C.P.
M.ராஜேந்திரன்
P.ஏகாம்பரம்

பங்குதாரர்களுக்கு மட்டும்

H.O. Friday Holiday (It is a P.B. Group Concern) B.O. Tuesday Holiday



• ச.ஆடம்ஸ்

அரியணை ஏறும் வன்முறை!

மிஞ்சி மிஞ்சிப் போனால் தமிழ் நாட்டின் அளவில் பத்தில் ஒரு பங்கே இருக்கும் நாடு அயர்லாந்து. மொத்த மக்கள்தொகை பதினேழு லட்சம். இதில் கிறிஸ்துவ பிராடஸ்டன்ட் பிரிவினர் பத்து லட்சம். ஆறரை லட்சம் கத்தோலிக்கர்கள். கடந்த கால் நூற்றாண்டு காலமாக அங்கே நடக்கின்ற மோதலே இந்த இரண்டு கிறிஸ்துவப் பிரிவினருக்கிடையே தான்!

பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்கள் அயர்லாந்தை ஆக்ரமிக்க ஆரம்பித்தார்கள். சாதாரண குடியேற்றம் தான் ஆக்ரமிப்பாக மாறியது.

இன்று படிப்படியாக நிலைமை மாறி அயர்லாந்தின் தென் பகுதியில் கத்தோலிக்கர்கள் பெரும்பான்மை. வடக்கில் பிராடஸ்டன்ட்கள் அதிகம். (இங்கிலாந்திலிருந்து வந்தவர்கள்).

'ஆங்கிலேயனே வெளியேறு! நாங்கள் ஒருங்கிணைந்த அயர்லாந்தாக ஆகி விடுகிறோம்' என்கிறார்கள் வட அயர்லாந்து கத்தோலிக்கர்கள். இதற்காக ஆயுதம் ஏந்தத் தயங்கவில்லை. தீவிரவாதிகள் ஐ.ஆர்.ஏ (அயர்லாந்து ரிப்பளிக் ஆர்மி) என்ற அமைப்பைத் துவங்கினார்கள். அதன் அரசியல் பிரிவாக ஸீன் பென் (Sinn Fein) என்ற கட்சியையும் தொடங்கினார்கள்.

'வெளியேற மாட்டோம். நாங்கள்தான் மெஜாரிட்டி. வட அயர்லாந்து இங்கிலாந்துடன் இணைந்திருப்பதே சரி' என்பது பிராடஸ்டன்ட்கள் காட்டும் பிடிவாதம்.

இரண்டு பேரும் விட்டுக் கொடுக்காத நிலையில் வன்முறை அரியணை ஏறியது. கொரில்லா போர். வட அயர்லாந்தில் எங்கேயாவது கத்தோலிக்கர்கள் தாக்கப் பட்டால், லண்டனில் ஏதாவது முக்கியமான நபரை அல்லது இடத்தை ஐ.ஆர்.ஏ தாக்கியது.

மவுண்ட்பேட்டன் பிரபு ஐ.ஆர்.ஏ.வுக்குப் பலியானவர்களில் ஒருவர். 1985-ல் பிரிட்டனில் மார்கரெட் தாட்சர் தன் கன்ஸர்வேடிவ் கட்சியின் வருடாந்திர மகாநாட்டை நடத்திக் கொண்டிருந்தபோது ஐ.ஆர்.ஏ.வின் குண்டுகள் அந்த இடத்தைக் குறி வைத்துத் தாக்கின. தாட்சரும், அவரது அமைச்சரவை சகாக்களும் மயிரிழையில் தப்பினார்கள்!

சமாதானப் பேச்சு வார்த்தை என்று அவ்வப்போது அறிவிப்பு வரும். ஒப்புக்கு இரு தரப்பினரும் கை குலுக்கிக் கொள்வார்கள். உள்ளுக்குள் நெருப்பு மட்டும் நீறு பூத்துக் கொண்டே இருக்கும்.

'அமைதிப் பேச்சுவார்த்தைக்கு வருவது என்றால் ஐ.ஆர்.ஏ. ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டு வந்தால்தான் அனுமதி' என்பதுதான் இன்றைக்கு பிராடஸ்டன்ட்களின் தாரக மந்திரம்.

'நான் மட்டும் என்ன இளிச்சவாயனா? சம்பந்தப்பட்ட அனைவரும் துப்பாக்கிக்கு ஓய்வு கொடுத்தால் நானும் கீழே போடுகிறேன்!' - இது ஐ.ஆர்.ஏ.

சமீபத்தில் இங்கிலாந்து பிரதமர் ஜான் மேஜர் ஒரு முடிவு செய்தார். வட அயர்லாந்தில் ஒரு தேர்தல் நடத்துவது. சீரியஸாக ஒரு அமைதிப் பேச்சுவார்த்தையில் தொடர்பு கொள்ள அத்தேர்தல் மூலம் 110 பேர் கொண்ட ஓர் அணியைத் தேர்ந்தெடுப்பது. அந்த அணியினர் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகளை முடிவு செய்வது...

தேர்தலில் ஸின் ஃபென்னுக்கு 15 சதவீதம் வாக்குகள் கிடைத்தன. வழக்கமாக இது போன்ற சமயங்களில் பத்து சதவீதம் வாக்குகள் கிடைப்பதுதான் அக்கட்சிக்கு வாடிக்கை. இந்தமுறை ஐந்து சதவீதம் அதிகம். ஸின் ஃபென் தலைவர் கேரி ஆடம்ஸ் இதைச் சுட்டிக் காட்டி 'எங்களை நிச்சயமாகப் பேச்சுவார்த்தையில் சேர்த்துக் கொள்ள வேண்டும்!' என்று கொடி பிடித்தார்.

பெரும்பான்மை பிராடஸ்டன்ட்களோ, முதலில் ஆயுதத்தைக் கீழே போடு என்ற பழைய பல்லவியையே பாடினார்கள்.

கேரி ஆடம்ஸ் நேராகப் போனார். பேச்சுவார்த்தை நடைபெற்ற கட்டடத்தின் முன்னால் வேயப்பட்டிருந்த முள்வேலி அருகே நின்று கொண்டார்! என்னை உள்ளே விடு என்று கோஷமிட்டார். உலகத்தின் மீடியா அங்கே முகாமிட்டு ஆடம்ஸின் போராட்டத்தை டி.வி.யிலும், காமிராவிலும் சுட்டுத் தள்ளியது.

வெளியே இப்படி. கட்டடத்துக்கு உள்ளே வேறு மாதிரியான சர்ச்சை! அமைதிப் பேச்சுவார்த்தைக்கு அமெரிக்க செனட்டர் ஜார்ஜ் மிட்செல் என்பவரை தலைமையேற்கச் செய்வதாக ஏற்பாடு. இந்த மிட்செல் ஏற்கனவே ஒரு ஆறு அம்ச அமைதித் திட்டத்தைத் தீட்டிக் கொடுத்தவர். அதற்கு ஆடம்ஸூம் சம்மதம் தெரிவித்திருந்தார்.

'எங்கள் சண்டையைத் தீர்க்க அமெரிக்கர் எதற்கு? என்று கட்டடத்துக்குள் சண்டை!

-ராணி மைந்தன்



• அபத்தம்!



• இணைந்தார்!

● காசிநாதன், ஒசூர்.

? அ.தி.மு.க.வில் உள்ளவரெல்லாம் தி.மு.க.வுக்கு வாருங்கள் என்று கலைஞர் அழைப்பு விடுப்பது சரியா...?

! 'தொண்டர்களுக்குத்தான் அழைப்பு; குண்டர்களுக்கு அல்ல...' என்று விளக்கமும் தந்திருக்கிறாரே!

● சுந்தர் அழகேசன், திருச்சுழி.

? 'எங்கள் உடம்பில் உள்ள கடைசிச் சொட்டு ரத்தம் கூட புரட்சித் தலைவி புகழ் பாடும்' என்று காளிமுத்து கூறியிருப்பது பற்றி...?

! அடக் கடவுளே! இப்படி கொத்தடிமை போல் பேசுகிறாரே... மறுபடி கட்சி மாறப் போகிறாரா என்ன...?

● இ. மகராசன், சின்னமனூர்.

? தினமணி கதிரில் கலைஞரைப் பிரதமராகச் சித்திரித்து ஞாநி எழுதிய கட்டுரையைப் படித்தீர்களா....?

! தமது கட்சிக்காரர்களின் 'துதி'யில் ஜெ. மயங்கிய மாதிரி, பத்திரிகையாளர்களின் துதியில் கருணாநிதி மயங்கி விடக் கூடாது! அப்படி ஏமாற மாட்டார் என நம்புவோம்.

● இ. சுபாகரன், சுப்பராயர்புரம்.

? ரஜினியும் மனோரமாவும் சந்தித்தால்...?

! சந்திக்கவும் வேண்டும்; ஒரே படத்தில் நடிக்கவும் வேண்டும். அரசியல் காழ்ப்புணர்ச்சிகள் கலையுலகில் அனுமதிக்கப்பட வேண்டியதில்லை.

● எஸ். தங்கராஜு, சென்னை - 35.

? காவல் நிலையங்களில் மாலை ஆறு மணிக்கு மேல் மகளிரைக் காவலில் வைக்கக் கூடாது என முதல்வர் ஆணையிட்டிருக்கிறாரே...?

! இது ஏற்கெனவே உள்ள விதிதானே. பெண்களுக்கு அறியாமையால் அது தெரியவில்லை; காவலர்க்கு ஆணவத்தால் தெரிவதில்லை...!

[redacted]

● ஆர். முரளி, சென்னை - 15.

? விளம்பரம் என்பதற்கு உண்மையை விளம்புதல் என்றுதானே அர்த்தம் (விளம்பு + அறம்)...? பின் ஏன் அமெரிக்காவில் - இங்கும்தான் - விளம்பரச் சண்டை...?

! புதிய, சுவையான வியாக்யானமாயிருக்கிறதே! ஆனால் விளம்பரம் என்பது ஒரு வியாபார யுக்திதான். வியாபாரம் என்று வரும் போது போட்டி நிச்சயம் உண்டு. போட்டி ஆரோக்கியமிழந்தால்... சண்டை !



• இவர்கள்...



• ...சந்தித்தால்

ரஜினி - மனோரமா சந்தித்தால்...?

● கே. என். பாலகிருஷ்ணன்,
கும்பகோணம்.□

? எஸ்.டி.எஸ். சிறைக்குச் செல்லும் போதும் இரட்டை விரலைக் காண்பித்துள்ளாரே...?

! முக்கியமான இருவர் இன்னும் வெளியில் தான் இருக்கிறார்கள் என்று யாருக்காவது சமிக்ஞை கொடுத்தாரோ என்னவோ... யார் கண்டது!

● மு. கருணாநிதி, தேவராயனேரி.

? 'தேவேகௌடா தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசை எந்தச் சூழலிலும் கவிழ்க்க மாட்டோம்' என்று ராவ் உறுதி அளித்திருக்கிறாரே...?

! அது எப்படியோ...! லஞ்ச ஊழல் நாயகனாகி

விட்ட ராவ், காங்கிரஸ் தலைமையிலிருந்து கவிழ்க்கப்பட வேண்டியது ரொம்ப அவசியம்!

● எஸ். அருள்மொழி, காட்டூர்.

? இருபது நாட்களில் ஒன்றரை லட்சம் மனுக்களாமே...?

! கடந்த ஆட்சியில் அத்தனை அநீதிகள் நடந்துள்ளபோது மனுக்கள் குவிவதில் ஆச்சரியமில்லை. முறையாகப் பரிசீலித்து, வடிகட்டி, விருப்பு வெறுப்பின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

● என். ராஜி, மேலப்பாதி.

? கலைஞரின் ஆட்சி முறை ஆச்சரியமளிக்கிறதா? அதிர்ச்சியளிக்கிறதா?

! ஆறுதலளிக்கிறது – இப்போதைக்கு!

● ஜே. காளிதாஸ், பொள்ளாச்சி.

? மத்தியில் அமைந்துள்ள புதிய அரசால் சுதந்தரமாகச் செயல்பட முடியுமா?

! ஆஹா! நல்ல ஜோக். இதற்கு ராவ் நிச்சயமாகச் சிரிப்பார்.

● அ. ராஜா ரஹ்மான், கம்பம்.

? வாழப்பாடி மீண்டும் காங்கிரஸில் இணைவது ஏன்...?

! அதுவும் சைபர்; இதுவும் சைபர். சைபரோடு சைபர் கூட்டினால் விடை என்ன என்பது குழந்தைகளுக்குக் கூடத் தெரியும்! ஏதோ, பத்திரிகைகளும் மக்களும் வாழப்பாடியை மறந்து விடாமல் இருக்க இது ஒரு வழி என்று வேண்டுமானால் சொல்லலாம்.



● குப்பு. க. ஆ. பொன்னுச்சாமி, தூத்துக்குடி.

? வைரமுத்துவின் 'தண்ணீர் தேசம்' நூல் அரசு நூல் நிலையங்களில் வைக்கப்படும் என முதல்வர் அறிவித்துள்ளாரே...?

! எத்தனையோ புத்தகங்களில் அது ஒன்று. 'வைக்கக் கூடாது' என்று முடிவெடுத்திருந்தால்தான் 'நான்முடிச்சோழன்' விளக்கம் தர வேண்டியிருந்திருக்கும்.

● சி. கொ. தி. முருகேசன், கோபி.

? பிரெஞ்சு ஓபன் டென்னிஸில் மேரி பியர்ஸ் செக்ஸி டிரெஸ்ஸில் விளையாடியிருக்கிறாரே...?

! ஆட்டத்தைப் பாருங்க சார்...!

● ராமு, சென்னை – 90.

? 'வேதம் படித்தவர்கள்தான் பிரதமராக முடியும் என்கிற நிலை மாறிவிட்டது...' என்று ப. சிதம்பரம் பேசியுள்ளது பற்றி...?

! அபத்தம்! வேதத்தை யார் வேண்டுமானாலும் படிக்கலாம் – தேவேகௌடா, ப.சி. உள்பட. ஆனால் யார் வேண்டுமானாலும் பிரதமராகி விட முடியாது!

**☐ ரூ. 25 பரிசு பெறுபவர் :
கே. என். பாலகிருஷ்ணன்,
279, பெரிய கடை தெரு,
கும்பகோணம் – 612 001.**

● வி. சத்தியப்ரியன், சென்னை – 15.

? '133 கோடி ரூபாய் உர இறக்குமதி ஊழலில் உண்மையை மூடி மறைக்க மாட்டோம்' என தேவேகௌடா கூறியுள்ளாரே, சாத்தியமா...?

! சாத்தியம்தான். மூடி மறைத்தால் காங்கிரஸுக்குள்ளேயே கூட அவர் எதிர்ப்பைச் சந்திக்க நேரும் என்னும்போது பிற கட்சிகள் பற்றிச் சொல்லவே வேண்டாம்...!

● பி. பாலாஜி கணேஷ், கோவிலாம்பூண்டி.

? லஞ்சம், ஊழல் இரண்டுக்கும் என்ன வித்தியாசம்?

! லஞ்சம் என்பது இயல்பாக நடக்க வேண்டிய ஒரு காரியத்தைச் செய்துதரப் பணம் பெறுவது. ஊழல் என்பது அதிகார துஷ்பிரயோகத்தின் மூலம் லாபம் அடைவது. இரண்டும் கைகோத்துக் கொள்வதும் சகஜம்.

● நா. ரெங்கப் பிரசாத், சிறுகமணி.

? அடுத்த ஐந்தாண்டுகளில் தேர்தலைச் சந்திக்கும் போது, மக்கள் ஜெயலலிதா நடத்து கொண்ட முறையை ஞாபகம் வைத்திருப்பார்களா...?

! காலம் என்பது எந்தப் புண்ணையும் ஆற்றும் வல்லமை படைத்த மருந்து. அதனால் மக்கள் மறந்தால் ஆச்சரியமில்லை. அந்த மறதியை விஞ்சும்படி கருணாநிதி ஆட்சி குறித்த நல்லெண்ணம் மனத்தில் தங்கச் செய்ய வேண்டும்.



"கல்யாணத்துக்கு என்ன அவசரம்?"

"விஷ்ணுப்பிரியாவுக்கு இன்னமும் திருமணம் ஆகவில்லை. நல்ல மாப்பிள்ளையாகத் தேடிக் கொண்டிருக்கிறோம்" என்று தமிழ் மாநில காங்கிரஸின் மகளிர் அணி துவக்க விழாவில் குறிப்பிட்டார் மூப்பனார்.

விஷ்ணுப்பிரியா?...

தமிழ் மாநில காங்கிரஸின் மகளிர் அணித் தலைவி.

பெயர் புதிதாக இருந்தாலும் அரசியலுக்குப் பழையவர்தான்!

"ஏழு வயதிலே காங்கிரஸ் மேடையில் ஏறிப் பேசியவள் நான். இதுவரை 5000 பொதுக் கூட்டங்களுக்கு மேல் பேசியுள்ளேன். கட்சி நடத்திய போராட்டங்களில் கலந்து கொண்டு பலமுறை சிறை சென்றுள்ளேன்" என்கிறார் விஷ்ணுப்ரியா.

சொந்த ஊர் திண்டுக்கல். அப்பா கஸ்தூரி நாதன், நகர காங்கிரஸ் தலைவராக இருந்தவர். மூப்பனாரின் அணுக்கத் தொண்டர். ஒரு சகோதரி; இரண்டு சகோதரர்கள். பள்ளி, கல்லூரிப் படிப்பு திண்டுக்கல்லில் தான்.

"எங்கள் வீட்டில் பெரும் பாலும் அரசியல்தான் பேச்சு. எனக்கு வேறு எதுவும் பொழுதுபோக்கு கிடையாது. எனக்கு நன்கு நினைவு தெரிந்து நானே தயார் செய்து பேசியது காமராஜ் அவர்கள் இறந்த தினத்தன்று தான். ஒருமுறை தஞ்சாவூரில் (1980) நான் பேசியபோது மேடையில் இந்திரா காந்தியும் இருந்தார். பேசி முடித்தவுடன் கட்டிப் பிடித்து மாலை போட்டார்! அதே காலகட்டத்தில் திறந்த ஜீப்பில் நான் பிரசாரம் செய்த போது சாலையே போக்குவரத்து நெரிசலில் ஸ்தம்பித்துப் போனது! ஐயா (மூப்பனார்) அவர்களது வண்டியும் அதில் மாட்டிக் கொண்டது" – சந்தோஷமும் பெருமையுமாகக் குறிப்பிடுகிறார்.

விஷ்ணுப்ரியாவின் குடும்பத்தில் எந்த விஷயமாக இருந்தாலும், மூப்பனாரைக் கலந்தாலோசித்துத்தான் செயல்படுவார்களாம்.

"நான் சட்டம் படித்தது கூட, ஐயா அவர்கள் சொல்லித்தான்" என்கிறார்.

கிட்டத்தட்ட 10 வருட காலமாக சென்னையில் வழக்கறிஞராக பிராக்டீஸ் செய்யும் இவர், மத்திய அரசின் பல இலாகாக்களுக்கு ஆஜராகிறார். இலவச சட்ட உதவி, நுகர்வோர் கோர்ட்டு என்று அலைந்து கொண்டிருப்பவர்.

"என்னோட முதல் வேலையே நிறைய படித்த இளைஞிகளைக் கட்சியில் உறுப்பினர்களாகச் சேர்ப்பதுதான். திருச்சியில் நடக்கப் போகும் எங்கள் மாநில மாநாட்டில் மகளிர் அணி எல்லோரையும் அசத்தும்விதத்தில் அணி திரண்டு வரும்!"

"அது சரி விஷ்ணுப்ரியா, மூப்பனார் அவர்கள் உங்களுக்கு மாப்பிள்ளை பார்த்துக் கொண்டிருக்கிறாரே!"

"எனக்கு என்ன வயசாச்சு! 31 தானே? கல்யாணத்துக்கு என்ன அவசரம்? என் நலனில் அக்கறை கொண்டுள்ளதால் ஐயா அவர்கள் அது போல் சொல்லியிருக்கிறார்கள்!"

சந்திப்பு : ஸ்ரீநிவாசன்
படம் : பேஜர். கே. மூர்த்தி

வட்டமேஜை

◆ அதிரடியாய் இயங்கிய அமைச்சர் செங்குட்டுவனுக்கும் இயக்கிய கல்கிக்கும் என் பாராட்டுக்கள்! இதுபோன்று பத்திரிகையாளர்களை நண்பர்களாக மதித்து நல்வழிகாண முயன்ற அமைச்சரின் செயல் ஒரு வித்தியாசமான, ஆரோக்கிய அணுகுமுறை.

கோட்டையூர், நா. சங்கர்.

ரூ. 20 பரிசு பெறும் கடிதம்

◆ வடபழனி கோவிலில் அப்படி ஒன்றும் ஊழல் இல்லை. பிரசாத ஸ்டாலில்தானே! சரிபண்ணிக்கலாம். அமைச்சர் தெற்கு பக்கம் வந்தால் நன்றாக இருக்கும். சில கோயில்களில் சாமி

சாமிகளையே காணோம்!

களையே காணோம்!

தூத்துக்குடி, எஸ்.ராம சுப்பிரமணியன்.

◆ ஆர்.வி.யின் வீடு தொடர்பான தராசின் பதிலில் நழுவல் தெரிகின்றது. முன்னாள் ஜனாதிபதி என்றால் தலையில் கொம்பா முளைத்திருக்கிறது? ஆர்.வி. தனக்கு வீடு இல்லாதபட்சத்தில் ரூ. 75 லட்சம் செலவில் தான் குடியேறாத வீட்டினை புதுப்பித்தது ஏன்? அரசின் பணத்தை ஜனாதிபதி என்றால் எப்படி வேண்டுமானாலும் செலவு செய்ய வைக்கலாமா? இது ஊழல் இல்லையா?

கச்சமங்கலம், அருள் இளங்கோ.

◆ 'பிறந்த நாள் கொ(தி)ண்டாட்டங்கள்' தலையங்கம் படித்தேன். கலைஞரின் ஆட்சிக் காலம் எப்படி இருக்க வேண்டும் என்று நன்கு ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளது! ஆடம்பரங்களைத் தவிர்த்து எளிமையாகவே விழாக்களை நடத்துவதற்கு உத்தரவிடும் முதல்வர், தமது பிறந்த நாள் விழாவை மரம் நடும் விழாவாகக் கொண்டாடச் செய்தார். அத்துடன் தமது பிறந்த நாளன்று வந்த உண்டியல் பணம் ஏழு லட்சங்களை சில சேவை மையங்களுக்கு வழங்கியுள்ளார். வரவேற்க வேண்டிய விஷயம். முதல்வரின் இதே செயல்பாடுகள் தொடர்ந்தால் ஒரு முதலமைச்சர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குவார் கலைஞர்.

தேவராயனேரி, மு. கருணாநிதி.

◆ 'ஆண்களைப் பின்னுக்குத் தள்ளும் பெண்கள்' கட்டுரை அருமை. பெண்களின் வெற்றி வாய்ப்புக்கான காரணங்களையும் ஆண்களுக்குத் தோல்வி ஏற்படுவதற்கான காரணங்களையும் விளக்கிய விதம் அசத்தல்! ஆசிரியரும் பெற்றோரும் முயன்றால் இந்நிலையை மாற்ற முடியும் என்பது வைர வரிகள்!

நாச்சியார்கோவில், ஆர். ராஜன்.

◆ மாணவர்களின் கவனம் படிப்பில் குறையக் காரணமாயிருப்பது கஞ்சா, பீர், விஸ்கி, பிரவுன் சுகர், பான்பராக் வகைகள் என்பது நூறு சதவிகிதம் சரிதான். இவற்றையெல்லாம் மிஞ்சுவது சினிமா. சினிமா ஹீரோக்களின் மானரிஸங்களால் கவரப்படும் மாணவர்கள் மேற்கண்ட தீய பழக்கங்களில் மூழ்கி விடுகிறார்கள் என்பது வருத்தமடையச் செய்கிறது. இப்பொழுதைய இளம் ஹீரோக்களின் சேஷ்டைகளே இதற்கு சாட்சி! மாணவர்கள் சினிமாவை தற்காலிகமாகத் தள்ளி வைத்தால் நிரந்தர வெற்றி பெறலாம்.

திருவிடைமருதூர், எம். ஆர். சிவா.

◆ "எனக்கு (நல்ல பெயர்) வாங்கிப் பழக்கமில்லை; (அதிருப்தியை) கொடுத்துத்தான் பழக்கம்" என்று ஜெ. சொன்னது முற்றிலும் சரிதான். விரக்தியில் மாற்றிச் சொல்லவில்லை. இரண்டு வார்த்தைகளை மட்டும் மறந்து விட்டிருக்கிறார்.

சிதம்பரம், என். எம். கிருஷ்ணா.

◆ சித்து வெளியேறியதற்கான காரணங்களைப் படித்தபோது, நம் அணி எங்கே போய்க் கொண்டிருக்கிறது என்ற கவலையே ஏற்பட்டது. கிரிக்கெட் போன்ற குரூப் போட்டிகளில் "டீம் வொர்க்" எத்தனை அவசியமானது என்பதை யாருமே உணர்ந்ததாய்த் தெரியவில்லை. பக்கத்து குட்டி நாடு, தனது "டீம் வொர்க்"கினால், பல ஜாம்பவான்களை மண்ணைக் கவ்வ வைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தபின்பும் இவர்கள் திருந்தாதது ஆச்சர்யம்தான்..! இன்று சித்துவுக்கு நிகழ்ந்தது, நாளை வேறெந்த ஆட்டக்காரருக்கும் நிகழாமலிருக்க வேண்டுமானால், கிரிக்கெட் கண்ட்ரோல் போர்டு உடனடியாக இந்த விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டும்..!

கள்ளிப்பாடி, கே. ஸ்டாலின்.

◆ 'அத்தை மனசில் என்ன குறை' சிறுகதை ஒவ்வொரு மாமியார் மருமகளுக்கும் இடையே ஓர் அருமையான உறவுப் பாலத்தை ஏற்படுத்தியிருக்கும்!

பாண்டிச்சேரி, வசந்தராஜசெல்வன்.

◆ வாரா வாரம் 'கல்கி' எப்போது வரும் என்று எதிர்பார்த்து ஏங்க வைத்து விடுகிறது முக்கூராரின் கட்டுரை.

கொத்தாம்பாடி, ராமசேஷன்.

◆ 'ஆகாயச் சிறகு'களில், திரு. மாருதி வரைந்திருந்த ஓவியத்தைப் பார்த்து அசந்து விட்டேன்! நாடி பார்ப்பதற்கு இப்படிக் கூட ஒரு வழி இருக்கிறதா, என்ன?

வேலூர், எல். கோபாலகிருஷ்ணன்.

'லது என்ற ஜி. லதாவைச் சந்திக்கவும். ஜே. ஆர்க்கு அவள்தான் எல்லாம்' என்றது பேக்ஸ். மூர்த்தியை ஆயாசம் தொற்றிக் கொண்டது. பெயர் மட்டும் சுவை தந்தது. லது. எத்தனையோ லதாக்கள்? அதில் இவள் எவளோ? தனக்குத் தெரிந்த லதுவாய் இருக்க வேண்டிய அவசியமில்லை.

தனக்குத் தெரிந்த லதுவென்றால்? சிலீரென்ற பூரிப்பு. இருக்கலாம். ஆனால், 'அவள் தான் எல்லாம்' என்ற செய்தி உறுத்தியது. இந்தத் துறையில் இதற்கு நிறைய அர்த்தமுண்டு.

இரண்டு நாளாய் மண்டையைக் குடைகிறது. தொலைபேசியும், பேக்ஸுமாய் அலறுகிறது. 'எப்படியாவது சம்மதிக்க வை. பணத்தை வாங்கு. பில்லைக் கிளியர் செய்யவை.'

மூர்த்தி ஒரு லையஸன் ஆபீஸர். சென்னையில் காரியங்கள் முடித்துக் கொடுக்கக் கடமைப்பட்டவன்.


அவனது லாரி கம்பெனிக்குத் தொட்ட திசையெல்லாம் கிளைகள். அப்படி சென்னையிலிருந்து பம்பாய் போன ஆயத்த ஆடைகள் மூன்று நாட்கள் லேட். கப்பல் புறப்பட்டு விட்டது. யாரையும் தவறு சொல்ல முடியாது. வண்டியைத் தவிர. ஆனால் ஜே.ஆர்.என்ற ஜே. ரங்கராஜன் எதையும் ஒப்புக் கொள்ளத் தயாரில்லை. 'தவறு உன்னுடையதுதான். பணம் எதிர்பார்க்காதே. ஓடிப்போய்விடு' என்கிறான். மூர்த்தியை 'வாங்கித்தரா துப்பில்லையா' என்கிறது மத்திய அலுவலகம்.

மோசமான பிழைப்பு. மானம், ரோஷம் போன்ற வஸ்துக்களை ஒதுக்கிவிட்டு, பணியின் எந்த எல்லைக்கும் போக வேண்டும்.

மீண்டும் பேக்ஸைப் பார்த்தான். லதுவின் விலாசமிருந்தது. மேற்கு மாம்பலத்தில் என்னவோ பிளாட். ஒருவேளை தனக்குத் தெரிந்த அவளே தானா?

சீமந்தம் அமர்க்களப்பட்டது. பெரிய மன்னிக்குச் சீமந்தம். அண்ணாவுக்கு வாய் முழுக்கப் பல்.

மூர்த்தி பட்சணம் போட்டுக் கொண்டிருந்தான். சின்ன அத்தை மேற்பார்வை.



ஒய் பெண்ணைத் தேடி...


ஆர். வெங்கடேஷ்

அவனது சின்னக் கைதான் மிக்ஸர் போட ஏற்றது என்பது அவன் கணிப்பு. அப்போது தான் மைத்ரேயி, லதுவைக் கூட்டி வந்தாள்.

''உன்னை வாசல்லயெல்லாம் தேடிண்டிருந்தோம்டா'' என்றாள் மைத்ரேயி.

''என்ன விஷயம்?''

''இவளைத் தெரியுமா? லது. விஜியக்கா



பொண்ணு.''

''இவ கவிதையெல்லாம் எழுதுவாளாம்டா. நீயும் எழுதுவியோல்யோ? அதான் சொன்னேன். உன்ன பாக்கணும்னா'' என்றாள் மைத்ரேயி.

வெளியே வந்து, ரேழி திண்ணையில் உட்கார்ந்து கொண்டார்கள். கூச்சத்தோடு தொடங்கின பேச்சு, அப்புறம் மூச்சு முட்டத் தொடர்ந்தது! 'சரியான போர்' என மைத்ரேயி பாதியில் போய்விட்டாள்.

மூர்த்திக்குத் தரையில் கால் பாவவில்லை. தெரிந்ததையெல்லாம் கொட்டினான். எதிரே ஆர்வம் ததும்பும் லது. அவன் சொல்வதை முழுதாய்க் கேட்டுவிட்டு, பின்னர் தன் கருத்தைச் சொன்னாள். பேச்சு சுவாரஸ்யத்தில் இரண்டு பந்தி முடிந்து போனதும் தெரியவில்லை. அப்புறம், சின்ன அத்தை எட்டிப் பார்த்தாள்.

''இதுதான் கடைசிப் பந்தி. சாப்பிட வரேளா?''

நமுட்டுச் சிரிப்பு.

மூர்த்திக்கு மனசெல்லாம் இறக்கைகள். எப்போது சாப்பிட்டுப் படுத்தான் என்ற நினைவில்லை.

சாயங்காலம் எழுந்தபோது, வாசல் திண்ணையிலிருந்தான். உள்ளே வர, மிதமான புகை வாசனை. மின்விசிறியின் 'லொடலொட' சப்தம். அரையிருட்டு. மூலைக்கு ஒரு காலும் கையுமாய் அத்தைகளும் பெரியம்மாக்களும் உருண்டிருந்தனர்.

லதுவைத் தேடினான். கூடத்துச் சுவரோரம், கால்களை பாவாடைக்குள் அடக்கி, நெற்றிவரை தாவணி போர்த்தி, துளிதேகமும் தெரியாது, தீப்பெட்டிபோல் படுத்திருந்தாள். மூர்த்திக்கு, லதுவை மிகவும் பிடித்திருந்தது.

தி. நகரில் இறங்கினான் மூர்த்தி. இந்த லது என்ற லதாவை எப்படிச் சமாளிப்பது? இன்றைய பெண்கள் அவ்வளவு சுலபமானவர்கள் அல்ல. காரியக்காரர்கள். ஆனால், எதற்கும் ஒரு விலையுண்டு. இவளுக்கு என்ன விலை என்று தெரியவில்லை.

எதற்கும் இருக்கட்டுமென்று ஒரு நகைக் கடைக்குள் நுழைந்தான். இரண்டு சவரனில் சின்னதாய் செயின் ஒன்று வாங்கிக் கொண்டான்.

இனி அவள் வாசலில் தொங்க வேண்டும். 'அவள் தான் எல்லாம்' மீண்டும் ஞாபகம் வந்தது. இதுபோல் நிறையப் பேரைப் பார்த்தாயிற்று. சௌகரியமான வாழ்க்கை, சமூக அந்தஸ்து போன்றவைகளுக்காகச் சில ஒழுக்கங்களை விட்டவர்கள். ஒரு நிலைக்குப் பின் இவர்கள் மரியாதைக்குரியவர்கள். ரிஷிமூலம்,

நதிமூலம் எல்லாம் யாரும் அப்போது அறிய மாட்டார்கள்.

யோசிக்க, குட்டியது. இனி செய்வதற் கொன்றுமில்லை. பையன் பத்தாவது. பெண் கல்லூரியில் முதல் வருடம். வருமானம் அவஸ்யம். எல்லோரையும் கரையேற்ற வேண் டும். ஆனால், குமட்டல் குமட்டல்தான். 'இது வேலையின் ஒரு பகுதி. இதற்குப் போய் அலட் டிக் கொள்கிறாயே' என்றான் விற்பனை மேலாளன். அவனுக்குக் காசு, குறி.

மூர்த்தியை இத்தனை துரத்தியதும் அது தான். இப்போதெல்லாம், ஒழுக்கம் பற்றி நிறைய எண்ணம் வருகிறது. 'யாருக்காகவோ செய்கிறோம், நமக்கென்ன' என்ற எண்ண மில்லை. அதன் உப்பைத்தான் வீடு முழுவதும் தின்கிறது.

"லதாவுக்குக் கல்யாணம் ஆயிடுத்து தெரியுமோல்யோ?" என்றாள் மைத்ரேயி. எங்கோ ஒரு கல்யாணத்தில் பார்த்தபோது, ரொம்ப காரியமாய், மைத்ரேயி, மூர்த்தியிடம் வந்து சொன்னாள். வெறுமனே கேட்டுக் கொண்டான். அதற்குள் மூர்த்திக்குக் கல் யாணம் ஆகிவிட்டிருந்தது.

லதாவுக்கு லேட் கல்யாணம். வரன் கிடைக்கவில்லை என்பது அவளது அம்மா சொன்னது. ஆனால், வறுமை என்பது உண்மை. அவளது அப்பாவுக்கு கால் இழுத் துக் கொண்டு விட்டது. சரியான வைத்திய மில்லை. அதனால் உதவியற்று இருந்தார்.

லதாதான் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டதாய் சொன்னார்கள். ஒருமுறை ஸ்கூல் டீச்சர் என்றார்கள். மறுமுறை சுயமாய் துணி தைக்கிறாள் என்றார்கள். ஒருமுறை சைதாப்பேட்டையில் பார்த்தபோது, ஒரு நிறுவனத்தின் பெயர் சொல்லி, அங்கே ரிசப் ஷனிஸ்ட் என்றாள் லதா.

ஆறு மாதத்திற்கு ஒருமுறை, ஒரு வருடத் திற்கு ஒருமுறையென்று யாராவது லதாவின் தற்போதைய நிலை பற்றிச் சொல்லிக் கொண் டிருந்திருக்கிறார்கள். கல்யாணமானபோது, விடிவுகாலம் பிறந்ததாய்ச் சொன்னார்கள். அவள் கணவனுக்கு ரயில்வேயில் வேலை யென்றார்கள்.

இரண்டு மூன்று வருடத்தில் அந்த நம்பிக் கையும் பொய்த்தது. அம்மாவோடு திரும்ப வந்து வாழ்கிறாள் என்றார்கள். காரணம் தெரியவில்லை. அப்புறம் விஷயம் தேய்ந்து விட்டது. அல்லது மூர்த்தியிடம் சொல்லப்பட வில்லை.

லதாவை நினைக்கும்போதெல்லாம், தீப்பெட்டி போல் படுத்திருந்த தோற்றம்தான் கண்முன் வரும். அந்தப் படுக்கும் முறையே அவளைப் பற்றி நிறைய விஷயங்களை அவனுக்குச் சொல்லியிருக்கிறது. வாழ்வின் அலைக்கழிப்பில் யார் என்ன செய்ய முடி யும்?

அவன் வீட்டை அடைந்து, மணியடித் துக் காத்திருந்தான் மூர்த்தி. கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டான். தலை யைக் கோதி விட்டுக் கொண்டான். லது பரதேவதையே, சரணம். கதவைத் திற, தாயே!

சின்னதாய் கதவு திறக்கப்பட்டது. மிடி போட்ட சின்னப் பெண், "யாரு வேணும்?" என்றது.

"ஜி. லதாங்கறவங்க..."

"வாங்க..."

கதவைத் திறந்துவிட்டு, நேரே உள்ளே போனது. ஷூவைக் கழட்டிவிட்டு, ஹாலுக்கு வந்தான் மூர்த்தி. மின்விளக்கு வெளிச்சம் மௌனம் காத்தது. ஓரமாய், போடாத டி.வி. அழுக்குப் படிந்த சோபா, டவல்கள்.

"வாங்கோ, இப்போதுதான் வழி தெரிஞ் சுதா?"

மூர்த்திக்குத் தெரிந்த லது என்ற லதாள் எதிரே நின்றாள். பூசினாற்போலிருந்தாள். மூர்த்திக்கு அதிர்ச்சியாகக் கூட இருந்தது. இவளை எதிர்பார்க்கவேயில்லை. இவள்தான் ஜே. ஆர்க்கு எல்லாமா?

"எப்படி இருக்கீங்க?"

"ஓ. சௌக்கியமா இருக்கோம். பாட்டிய கூப்பிடுடி.... மூர்த்தி மாமா வந்திருக்கார்னு சொல்லு" என்று அந்தச் சின்னப் பெண்ணை ஏவிவிட்டாள்.

"ஆச்சரியமாயிருக்கு. எப்படி என் அட்ரஸ் கெடைச்சுது?"

அருள்வாக்கு

'பக்தி வளரணும்' 'சகலரும் ஒன்று சேர்ந்து பண்ணுகிற சமூகத் தொண்டுகள் வளரணும்' என்று முயற்சி செய்ய ஆரம்பித் தால், ஜாதி த்வேஷம் என்பதை Ignore (அலக்ஷி யம்) பண்ணினதாகி விடும். அதை ரொம்பவும் லக்ஷியம் பண்ணி, எதிர்ப்புச் சண்டை போட் டால்தான் அதுவும் பதிலுக்குப் பதில் ஜாஸ்தி வீரியம் அடைகிறது. இப்படிச் செய்யாமல் மற்ற நல்ல விஷயங்களிலேயே கவனத்தைச் செலுத்தி இதை Ignore செய்தோமானால், தானே இருந்த இடம் தெரியாமல் போய் விடும். 'மருந்து சாப்பிடுகிறபோது குரங்கை நினைத்துக் கொள்ளாதே' என்றால் தப்பாமல் அந்தக் குரங்கு நினைவுதான் ஒவ்வொரு தர மும் மருந்தை எடுக்கிற போது வரும் என்கிற மாதிரி, "ஜாதி ஜாதி என்று த்வேஷம் கூடாது" என்று சொல்கிறபோதே ஜாதியி னால் உயர்வு தாழ்வு உணர்ச்சியையும் ஞாப கப்படுத்திக் கொண்டேதான் போகிறோம்!

அதனால் ஸகல ஜாதியாரும் சேர்ந்து



கோயில் திருப்பணி, அல்லது தூர்ந்த ஏரியில் மண் வாருவது என்கிற மாதிரியான பெரிய காரியங்களை எடுத்துக் கொண்டு, ஓயாமல் பொதுத் தொண்டுகளில் ஈடுபட்டிருந்தால் தன்னால் அன்பும் ஸமூஹ ஸௌஜன்யமும் ஏற்பட்டு விடும். இப்போது காரியம் இல்லாமலிருப்பதால்தான் எதையாவது நினைத்துக் கொண்டிருக்கத் தோன்றுகிறது. இதிலிருந்துதான் விதண்டா வாதம், வம்பு தும்பு, 'ஒழிக' சண்டை எல்லாம் உண்டாகின்றன. 'ஒரு சண்டை பூசல் என்று கிளப்பி விட்டால்தான் ஸ்வாரஸ்மாயிருக்கிறது; கிளர்ச்சி ஆர்ப்பாட்டம், புரட்சி என்று கிளப்பி விட்டால்தான் தங்களைச் சுற்றி 'ஜே' போடப் பத்துப் பேர் சேர்கிறார்கள்' என்பதால் இம்மாதிரி செய்கிறார்கள். இதற்கெல்லாம் பொழுதேயில்லாதபடி காரியங்களில் ஈடுபட்டிருந்தால் எல்லாம் சரியாகி சாந்தமாகி விடும். தொண்டைத் தண்ணீர் வற்ற 'ஒழிக' கூச்சல் போட்டுக் கொண்டு, கால் வலிக்க ஊர்வலம் வருவதற்குப் பதில் இந்த மனித சக்தியை ஏதாவது ஆக்கரீதியான திசையில் திருப்பி விட்டால் எத்தனையோ வளர்ச்சி ஏற்படும். எல்லாவற்றையும் விடப் பெரிய வளர்ச்சி ஸமஸ்த ஜனங்களிடையும் உண்டாகிற அன்புதான். அநுஷ்டானங்கள் பண்ணுவது, கோவிலுக்குப் போவது, உபந்நியாஸத்துக்குப் போவது, லீவு நாளானால் ஸகல ஜாதியாரும் சேர்ந்து நாள் முழுக்க தெய்வப்பணி, ஸமூஹப் பணி செய்வது என்று 'டைட்'டாக டைம் டேபிள் போட்டுக் கொண்டு பண்ண ஆரம்பித்து விட்டால், இந்த 'ஒழிக', 'வீழ்க'வுக்கெல்லாம் அவகாசமேயில்லாமல் எல்லாரும் வளர்ந்து வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

பேச்செழவில்லை மூர்த்திக்கு. தீப்பெட்டி போல் போர்த்தியிருந்த லதுவா இது? இவளிடமா காரியத்தை முடித்துக் கொடுக்கக் கேட்பது?

வருத்தமும் இயலாமையும் புரண்டன. வீட்டின் அமானுஷ்ய மௌனம் மேலும் இயல்பைக் குலைத்தது.

"என்ன சாப்பிடறேள், காபி, டீ?"

"எதுவும் வேண்டாம்."

"முதல்முறை வந்திருக்கேள். காபி சாப்டுங்கோ" என்றபடி மீண்டும் சமையலறை உள்ளே போனாள்.

யாரோ ஒருவரோடு லது இருப்பதை நினைத்துக்கூடப் பார்க்கமுடியவில்லை.

"எத்தனை கொழந்தைகள்?"- மாமி கேட்டாள்.

"ரெண்டு. ஒரு பொண்ணு, ஒரு பிள்ளை."

"பெரியவாளாயிருப்பா. லதுவுக்கு முன்னாலே கல்யாணம் ஆயிடுத்து இல்ல."

"ம்."

"இந்தாத்துல ஒரு ஆம்பிளை துணை குடுத்துவைக்கல. எல்லாம் பொம்மனாட்டிகள் தான். பணம் வந்திண்டிருந்தது. அதுக்கும் ஒருவழி பண்ணிவிட்டா மகராசி."

"வந்தவுடனே உன் பொலம்பல ஆரம்பிச்சுட்டியா?"- உள்ளேயிருந்து லதுவின் குரல்.

"எனக்கு எதுக்குப் பொல்லாப்பு? சொன்னா, என் மேல பாயறா. நல்ல வேலை. வீடு குடுத்தான். வண்டி குடுத்தான். கம்பெனியில நல்ல சம்பளம் குடுத்தான். எல்லாத்தையும் வேணாமுன்னுட்டா. ரெண்டு நாளைக்கு முன்னால வேலைய வுட்டுட்டாளாம். எங்க போயி இடிச்சுக்கறது?"

"எல்லாம் பெருமாள் பாத்துக்குவார்மா. நீ ஏன் அல்லாடறே?" என்ற லது, சமையலறை வாசலில் நின்றிருந்தாள்.

மூர்த்திக்கு ஒன்றும் புரியவில்லை. வேலையை விட்டுவிட்டாளா?

"இப்ப நீங்க வேல செய்யலியா லதா?"

"ம்ஹூம்..." அதே புன்னகையோடு தலையாட்டினாள். சந்தோஷம் முகத்தில் தெரிந்தது.

"சிரிக்காத. உன் பொண்ணுக்கு என்ன பண்ணுவ? யோசிச்சியா. எப்படி வாழ போற? யோசிச்சியா?"

"இனிமேதான் யோசிக்கணும். என்ன இப்போ. அப்பா போனப்பறம் நாம வாழாமையா போயிட்டோம்? எதுக்கு அலட்டிக்கற?"

மூர்த்திக்கு ஆச்சரியம். மத்திய அலுவலகம் முதல் முறையாய் தவறு செய்திருக்கிறது. அதைவிட ஆச்சரியம், இது போன்ற சௌகரிய வாழ்க்கையை விட்டுவிட யாருக்குத் துணிவு வரும்? தனக்கு இன்னும் வரவில்லை.

"இந்தாங்கோ, காபி."

துளியும் கல்மிஷமற்ற புன்னகை. காபியை வாங்கிக் கொண்டான். எதிரே லது உட்கார்ந்துகொண்டாள். மாமி எழுந்து உள்ளே போனாள். இனி, லதுவை 'எதையும் செய்து கொடு' என்று கேட்க முடியாது. பாக்கெட்டில் தங்கச் சங்கிலி ரொம்பவும் கனத்தாலும் ஒரு பக்கம் சந்தோஷமாகவும் இருந்தது.

26. உயிரோவியம்

கெடிலத்தின் இரு கரைகளிலுமிருந்த படைகளை இணைத்து விட உத்தேசித்த காடவராயன், வடகரையிலிருந்த தனது வீரர்களை ஆற்றைக் கடந்து தென்கரைக்கு வந்து விட உத்தரவிட்டிருந்தான். வீரர்கள் அந்த உத்தரவைப் பாதி வரை மட்டுமே நிறைவேற்ற முடிந்தது. பாதி ஆற்றைக் கடந்த காடவராயன், தன் பொதி வண்டிகள் வரும் அதே பாதையில் பாண்டியரின் புரவிப் படைப் பிரிவின் முன்னால் ஆதித்யன் கன வேகத்தில் வந்து கொண்டிருப்பதைக் கண்டு திகைத்தான். அவனை மேற்கொண்டு சிந்திக்க விடாத பாண்டியரின் புரவிப் படைப் பிரிவு, காடவர் அணிவகுப்பை ஊடுருவி பல துண்டுகளாகப் பிரித்தது. ஆதித்யன் கரத்திலிருந்த வாள் கரகரவெனச் சுழன்றதையும் காடவ வீரர்கள் வரிசையாக மண்ணில் சரிந்ததையும் கண்ட காடவராயன், எஞ்சிய தனது வீரர்களுடன் புரவியைத் திருப்பிக் கொண்டு, மீண்டும் சேந்தமங்கலத்தை நோக்கி விரைந்தான். அங்கும் அவனுக்கு நிலைமை ஆதரவாக இருக்கவில்லை. தெற்கிலிருந்து எதிர்பாராமல் படைப் பிரிவொன்று சினத்து வாலிபன் ஒருவனுடன் வந்து சேந்தமங்கலத்தைச் சுற்றி வளைத்திருந்தது. கெடிலத்தின் தென்கரையில் மலையமானும் சம்புவரையனும் வீரபாண்டியனின் படைப் பிரிவால் சுற்றி வளைக்கப்பட்டிருந்தார்கள். மூன்று பக்கங்களிலும் ஏற்பட்ட தாக்குதலில் இனி காடவ அரசோ, சிற்றரசர்களோ தப்பிப் பிழைக்க வழியேதும் இல்லையென்பதை ஒரு ஜாம நேரப் போரில் புரிந்து கொண்ட காடவராயன் தன் வீரர்களுடன் பின்வாங்கி கெடிலத்தின் பாதையிலேயே விரைந்து மறைந்தே போனான்.

சுவாரசியமே இன்றி அந்தப் போரை நடத்திய வீரபாண்டியனுக்கு அந்தப் போர் வெறும் விளையாட்டாகவே இருந்தது மட்டுமின்றி, "பல்லவன் நடுங்கப் போர் விளையாடி" என்று அவன் மெய்கீர்த்தி எழுதப்படவும் காரணமாயிற்று. காடவ மன்னன் கோப்பெருஞ்சிங்கனைச் சிறை செய்த வீரபாண்டியன், அவன் முதுமைக்கு மதிப்பளித்து தக்க காவலுடன் ரதமொன்றில் துறவியாரின் உத்தரவின்படி தஞ்சைக்கு அனுப்பி வைத்தான். கொங்கு நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட பொக்கிஷங்களோ, காடவராயனோ சேந்தமங்கலத்தில் இல்லையென்பதை வந்து அறிவித்தான் ஆதித்யன். அது பற்றிக் கவலை கொள்ள வேண்டாமென ஆதித்யனிடம் கூறிய வீரபாண்டியன், துறவியாரின் அழைப்பின் பேரில் அவனைத் தஞ்சைக்குச் செல்லவும் பணித்தான்.

இந்திர தனுசு

விஷ்வக்சேனன்

மழையைப் பொழிந்து விட்ட மேகங்கள் விலகிச் சென்று விட்டதால் சுத்தமாகத் துடைக்கப்பட்டிருந்தது நீலவானம். கதிரவன் ஒளி பரவத் தொடங்கிய அந்த காலைப் பொழுதில், தஞ்சைக் கோட்டை மதில்களின் பொந்துகளில் மழைக்கு அஞ்சி உள்ளே கிடந்த மைனாக்களும் கிளிகளும் வெளியே தலையை நீட்டி இனிமையாகக் குரலெழுப்பியபடி பறந்தன. நந்தவனத்து மரக்கிளைகளில் வந்து அமர்ந்து நீர்த்துளிகளை உதிர்த்து தரையைச் சிலிர்க்க வைத்தன!

ஈரமான புற்களைச் சுவைத்துக் கொண்டிருந்த மான்கள், திடீரென விழுந்த நீர்த் துளிகளால் திடுக்கிட்டு ஓட முயன்றன. ஓட முற்பட்டால் அப்பாவிகளைக் காரணமின்றி விரட்ட உலகில் பலர் இருக்கிறார்கள் என்பதை நிரூபிப்பது போல், மந்திகள் மரத்தின் உச்சியிலிருந்து சரசரவென இறங்கி அந்த மான்களைத் துரத்திச் சென்றன.

உப்பரிகைச் சாளரத்தினருகில் தலைநீட்டிய மரக்கிளையில் பறந்து வந்து அமர்ந்தது ஒரு குயில். தலையைச் சாய்த்து சாளரத்தினருகில் அமர்ந்திருந்த பூங்கோதையைப் பார்த்தது. எங்கோ வெறித்துக் கிடந்த அவளது பார்வையையும், முகத்தில் அப்பிக் கிடந்த சோகத்தையும் காணப் பொறுக்காமல், இரு முறை தனது இனிய குரலில் அழைத்துப் பார்த்து விட்டுப் பறந்தது.

உணர்ச்சிகளின் கலவையாக நிறைந்து கிடந்தது பூங்கோதையின் சித்தம். தஞ்சை அரண்மனைக்கு வந்தது முதல் அன்பையும் பரிவையும் அள்ளிக் கொட்டிய துறவியார் சில தினங்களாக அவளைக் கவனிக்கவும் நேரமின்றி புரவியிலும் ரதத்திலுமாக எங்கோ செல்வதும், ஓலைகளை வெவ்வேறு திசைகளுக்கு அனுப்பி வைப்பதுமாகத் தோன்றித்

தோன்றி மறைந்து கொண்டிருந்தார். தந்தை அவநிதன், போசளர் பிடியிலிருந்து விடுபட்ட பின்னரும் கூட தன்னைக் காண வரவில்லையே என்ற ஏக்கமும் அவள் உள்ளத்தில் வாட்டத்தை ஏற்படுத்தியிருந்தது. அவ்வப்பொழுது வந்து செய்திகளை அறிவித்து, ஆறுதல் கூறிச் சென்ற விஜயன், கண்ணனூர்க் கோட்டை வெல்லப்பட்டதையும், காடவ மன்னன் சிறைப்பட்டதையும் கூறிய போது கூட அவள் வெறித்த பார்வையுடனேயே கேட்டுக் கொண்டாள். இனந்தெரியாத சோகத்தில் மூழ்கிக் கிடந்தவளுக்கு, காடவ மன்னன் தஞ்சைக்கு அழைத்து வரப்பட்டதும் தனி சிறைச்சாலையொன்றில் காவலில் வைக்கப்பட்டதும் கூட ஒரு சுவாரசியத்தை உண்டாக்கவில்லை. எவரையோ வரவேற்க கோலாகலமாகத் தயாரான தஞ்சை அரண்மனையும் தோரணங்களும் பந்தல்களும் அவள் சித்தத்தில் பதியவில்லை. பிரமை தட்டிய சித்தத்தின் இடையே எழுந்தது ஒரு விளையாட்டுப் பிள்ளையின் முகம். அதன் விஷம விழிகள் அவளை உறங்கவோ, உண்ணவோ விடாமல் அடித்து "ஏழையர் ஆவி உண்ணும் இணைக் கூற்றங்கொலோ அறியேன், ஆழியங் கண்ணபிரான் திருக்கண்கள் கொலோ அறியேன்" என்று புலம்பிய ஆழ்வாரின் திருவாய்மொழியின் பொருளைப் புரிய வைத்தன.

சாளரத்தை விட்டு எழுந்தவள் அரண்மனையின் சிற்ப மண்டபத்தை நோக்கி நடந்தாள். தஞ்சையின் அந்தப் பிரசித்தி பெற்ற கலைக்கூடம் அவள் சிந்தைக்கு மெள்ள மருந்தும் விருந்துமாக மாறத் தொடங்கியது. கற்களாலும், தந்தத்தாலும், உலோகங்களாலும் நிறைந்து கிடந்த சிற்பங்கள் நாட்டியக் கலையின் அத்தனை பாவங்களையும், கரணங்களையும் விளக்கின.

இடது பாதம் தூக்கி ஆடும் தாண்டவமூர்த்தியும், மண்ணையும் விண்ணையும் காலால் அளந்து விட்டு மூன்றாவது அடிக்கு இடம் கேட்டுக் கொண்டிருந்த பெருமாளும் சுந்தரனின் திருமணத்தைப் பாதியில் நிறுத்தி அவன் அடிமையென்று வாதிட்டுக் கொண்டிருந்த கிழ பிராமணனும், வந்திக் கிழவி அளித்த பிட்டைத் தின்று விட்டு பாண்டியனின் கோபத்தைப் பொருட்படுத்தாமல் உறங்கிக் கிடந்த சிவபெருமானும், போர் துவங்க காத்துக் கிடந்தவர்களைப் பற்றிக் கவலையேதுமின்றி தேர்த்தட்டில் அமர்ந்து காண்டீபனுக்கு உபதேசித்துக் கொண்டிருந்த கண்ணனும் அந்த மண்டபத்தில் அழகிய சிற்பங்களாக நின்றிருந்தனர்.

அடுத்து நீண்ட மண்டபத்தில் நிறைந்து கிடந்த சித்திரங்களை அடைந்த பூங்கோதை, பணிப் பெண்ணொருத்தியிடம் வண்ணங்களை குழைக்கப் பணித்து விட்டு எதிரிலிருந்த சிலையொன்றில் மெள்ள தீட்டத் தொடங்கினாள். வண்ணக் கலவைகளில் மூழ்கி மூழ்கியெழுந்த தூரிகை, சாம்பல் நிறப் புரவியொன்றைப் பாய்ந்து வரச் செய்தது. அதன் நெற்றி முகப்பில் பெரும் முத்து ஒன்றும் ஊசலாடியது.

அரண்மனை வாயிலில் எழுந்த வாழ்த்துக் கோஷங்களோ, ரதங்களும் வீரர்களும் வந்து இறங்கிய ஆரவாரங்களோ, அவள் சித்தத்துக்கு எட்டவில்லை. உருவாகிக் கொண்டிருந்த சித்திரமும், வண்ணங்களும் அவளை ஏதோ கனவுலகத்தில் சஞ்சரிக்க வைத்திருந்தன.

தஞ்சைக் கோட்டைக்குள் பிரவேசித்த ஆதித்யனுக்கு அணிவகுத்து நின்ற சோழர் காவற்படை அளித்த வரவேற்பில் அன்பும் மதிப்பும் தெரிந்தது. தாழ்த்திப் பிடித்த வாட்கள் பாண்டியருக்கு நன்றியைத் தெரிவித்தன. அரண்மனை வாயிலில் போமைச்சருடன் காத்து நின்ற துறவியாரை வணங்கிய ஆதித்யன், உடன் நின்ற விஜயனை விசாரித்தபடியே உள்ளே நுழைந்தான். மேன்மாடத்து அதே அறையில் சாளரத்து இருக்கையிலமர்ந்து ஆதித்யனையும் அமருமாறு பணித்தார் துறவியார். ஆதித்யனின் விழிகள் அங்குமிங்கும் அலைபாய்ந்து யாரையோ தேடுவதைக் கவனித்து விஷமப் புன்முறுவலொன்றைப் படர விட்டுக் கொண்டார்.

கண்ணனூர்ப் போரையும், காடவராயன் தப்பியதையும் விசாரித்த துறவியார், அவன் விழிகளில் இன்னும் சலனம் தென்படுவதைக் கவனித்து, "யாரையேனும் எதிர்பார்க்கிறாயா ஆதித்யா?" என்றார் ஏதும் அறியாதவர் போல. துறவியாரையும் அருகில் நின்ற விஜயனையும், அவர்கள் முகத்தில் தெரிந்த விஷமத்தையும் கவனித்த ஆதித்யன், அவர்கள் தன் மனத்திலோடிய எண்ணங்களை ஊகித்து விட்டார்கள் என்பதைப் புரிந்து கொண்டான். சட்டென்று அவன் முகத்தில் ஒரு செம்மை படர்ந்தது. ஆனால் அடுத்து வந்த அவன் சொற்கள் தெளிவாகவே ஒலித்தன. "ஆம் துறவியாரே, கொங்கு நாட்டு இளவரசி இங்கிருப்பது பற்றி அறிவேன். இதுவரையில் என் கா



களில் தென்படவில்லையென்றுதான் பார்த்தேன்" என்றான் ஆதித்யன்.

பட்டவர்த்தனமாக வந்த அவனது பதில் ஆதித்யனிடம் சுற்றிவளைத்துப் பேசுவதோ, மழுப்பலான பதில்களோ அறவே கிடையாது என்பதை நிரூபித்தது. அதே முறுவலுடன் துறவியார் கூறினார். "ஆதித்யா, வீரனாயிருப்பவன் உணர்ச்சிகளை அடக்கப் பழக வேண்டும். உண்மையைக் கூறவும் சமய சந்தர்ப்பங்கள் உண்டு. எனினும் என்னிடம் கூறுவதில் தவறில்லை. ஆனால் சோழ நாட்டுத் தூதுவனாகச் செல்பவன் தனது உணர்ச்சிகளைக் கட்டுக்குள் வைத்திருப்பது அவசியம்."

"சோழ நாட்டுத் தூதனா? நானா?" ஆதித்யனின் குரல் வியப்புடன் ஒலித்தது.

"ஆம் ஆதித்யா, காகதீய மன்னனிடமும், அவன் மகள் ருத்ராம்பாளிடமும் நீ சோழ நாட்டுத் தூதுவனாகச் செல்லப் போகிறாய். அதற்கு முன்பாக காஞ்சியில் விஜயகண்ட கோபாலனையும் காண வேண்டும்'' என்ற துறவியார், "சரி, ஆதித்யா, நீ சென்று நீராடிவிட்டு வா. உணவருந்தியபடியே நம் திட்டங்களைப் பற்றிப் பேசலாம்" என்றார்.

அறையை விட்டு வெளியே வந்த ஆதித்யனை, சிற்ப மண்டபத்தின் வாயில் வரை அழைத்து வந்த விஜ யன், "இளவரசே, வந்தது முதல் நீங்கள் தேடியவ உள்ளே இருக்கிறார். சென்று கவனித்துக் கொள்ளுங்கள் நான் பிறகு வருகிறேன்" என்று இலேசாக நகைத்து விட்டு அகன்றான்.


உள்ளே நுழைந்த ஆதித்யன் சிற்பங்களின் வரிசையைக் கண்டு பிரமித்தான். அவனை இன்னும் பிரமிக்க வைக்க அவன் தேடி வந்த உயிர்ச் சித்திரம் மண்டபத் தின் கோடியில் நின்று சித்திரமொன்றைத் தீட்டிக் கொண்டிருந்தது. அவன் காலடியோசையைக் கேட்டுத் திரும்பிய பணிப் பெண்ணை விழிகளால் எச்சரித்து விட்டு அவன் கரத்திலிருந்த வண்ணக் கலவைகள் நிறைந்த பலகையை வாங்கிக் கொண்டான். சித்திரத்தில் சாம்பல் நிறப் புரவியின் மேல் அமர்ந்தவளின் முகத்தையும் ஆதித்யனையும் மாறி மாறி கவனித்த பணிப் பெண்ணுக்கு விஷயம் விளங்கி விட்டதால் சிவந்து விட்ட முகத்துடன் தலையைக் குனிந்தபடியே நடந்து மண்டபத்தை விட்டு வெளியேறினாள்.


பூங்கோதை எதையும் கவனித்ததாகத் தெரியவில்லை. அவள் மும்முரமாகத் தீட்டிக் கொண்டிருந்த சித்திரத்தில் அந்தப் புரவி மீது அமர்ந்து வாளை உயர்த்தியபடி வந்து கொண்டிருந்தான் ஒரு வினை




ர் இல்லத்து புரட்சித்தலைவியின் கருத்து.












பாக்கேஜ் செய்தது போல் தூய்மையானது.
தனியே அளந்து வாங்குவது போல் விலை குறைவானது.

	பாக்கேஜ் செய்த எண்ணெயின் விலை (1 லிட்டருக்கு)	வெண்டீ நிலையத்தில் (1 லிட்டருக்கு)	உங்கள் சேமிப்பு
சூப்பர் ரிஃபைண்ட் சூரியகாந்தி எண்ணெய்	51.00	43.00	8.00
அனுராக் சூப்பர் ரிஃபைண்ட் சூரியகாந்தி எண்ணெய்			
டபுள் ஃபில்டர்டு கடலை எண்ணெய்	48.00	42.00	6.00
டெய்லி டபுள் ஃபில்டர்டு கடலை எண்ணெய்			
சூப்பர் ரிஃபைண்ட் கடலை எண்ணெய்	54.00	46.00	8.00
அபூர்வா சூப்பர் ரிஃபைண்ட் கடலை எண்ணெய்			
ரிஃபைண்ட் வெஜிடபிள் எண்ணெய்	45.00	37.00	8.00
அனுகூல் ரிஃபைண்ட் வெஜிடபிள் எண்ணெய்			

அபூர்வா

டெய்லி

FOUNTAINHEAD-1929-96



பாடம் படிக்கும் எம்.எல்.ஏக்கள்!

●● கேரள சட்டசபைக்கு இம்முறை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற எம்.எல்.ஏக்களில் நாற்பத்திநான்கு பேர் புதுமுகங்கள்! சட்டசபை வளாகத்தையே முன்பின் பார்த்திராத இவர்களுக்கு சபை நடவடிக்கைகள் எப்படித் தெரியும்?

பார்த்தார், சபாநாயகர் விஜயகுமார். முன்னாள் சபாநாயகர்கள், அனுபவம் மிக்க மூத்த அரசியல் தலைவர்களைக் கொண்டு, எம்.எல்.ஏக்களுக்கு மூன்று நாள் பயிற்சி முகாம் ஒன்று ஏற்பாடு செய்து விட்டார்!

எப்படி கேள்விகள் கேட்பது, எப்படி எழுத்து மூலம் பதில் பெறுவது, மசோதாக்களை எப்படி தாக்கல் செய்வது, பட்ஜெட் விவாதம் என்றால் என்ன, அதில் எப்படிக் கலந்து கொள்வது, பத்திரிகைத் தொடர்பை பலப்படுத்துவது எப்படி என்பதிலிருந்து தொடங்கி, அந்த மூன்று நாள் பயிற்சி வகுப்புகளில் பாடம் சொல்லித் தர ஏற்பாடு செய்து விட்டார்!

பி.கு : சபாநாயகர் விஜயகுமாரும் புதுமுகம் தான்! சபையை நடத்திச் செல்வது எங்ஙனம் என்று அவருக்கு யாரும் பாடம் எடுத்தார்களா என்று தெரியவில்லை!

●● கே.வி. தாமஸ் என்பவர், கேரளாவிலுள்ள தேவரா சேக்ரட் ஹார்ட் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றி வந்தவர். பன்னிரண்டு வருடங்கள் முன்பு, தமது அரசியல் ஆர்வம் காரணமாக, கல்லூரிக்கு நீண்ட விடுப்பு சொல்லிவிட்டு, காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து விட்டார் தாமஸ்.

அப்போது நடந்த எம்.பி. தேர்தலில் போட்டியிட்டு, வென்று பாராளுமன்றம் சென்றவர். தம் தொகுதிக்கு நிறைய செய்து, நல்ல பெயரும் எடுத்தார். இதெல்லாம் பழைய கதை.

சமீபத்திய தேர்தலில் காங்கிரஸின் பிற பலரைப் போலவே தாமஸும் தோல்வியைத் தழுவ, அத்தோடு தம் அரசியல் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு மீண்டும் பேராசிரியர் பணிக்கு வந்து விட்டார்!

பாடம் நடத்தத் தொடங்கியதோடு மட்டுமல்லாமல் தாம் மீண்டும் தம் படிப்பைத் தொடரவிருப்பதாகவும் சொல்லி இருக்கிறார் தாமஸ்.

"எம்.ஏ. அரசியல் படிக்கப் போகிறேன். முடித்து விட்டு, பி.எச்.டி. பண்ணவும் உத்தேசம்" என்கிறார்.

"நீண்ட இடைவெளிக்குப் பின் மீண்டும் பேராசிரியராக வந்திருக்கிறீர்களே, மாணவர்களுடன் தொடர்பு கொள்வதில் (communication) சிரமமாக இல்லையா?" என்று கேட்டால், "இதிலென்ன சிரமம்? நான் அரசியலில் இருந்த காலத்திலும் என் மகளுக்கு வீட்டிலேயே பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தவனாயிற்றே?" என்கிறார்.

திருவனந்தபுரத்திலிருந்து :
எஸ். எஸ். மணி

யாட்டுப் பிள்ளை. அருகில் ரதமொன்று நின்றிருக்க, சினத்து வாலிபன் ஒருவன் அரக்கர்களைப் போல் தோன்றிய சில வீரர்களுடன் போராடிக் கொண்டிருந்தான். ரதத்தில் அழகிய மங்கை யொருத்தியும் அமர்ந்து அச்சத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள். சுற்றிலுமிருந்த பகுதி மலை களும் வனமுமாகத் தெரிந்தது. முதன் முதலில் ஆதித்யனைச் சந்தித்த அந்த நிகழ்ச்சி எத்தனை ஆழமாக அவள் உள்ளத்தில் பதிந்திருக்கிற தென்பதை நிரூபித்தது அந்தச் சித்திரம்.

தீட்டி முடித்தவன் தலையைச் சாய்த்து சித்திரத்தை அழகு பார்த்தான். திரும்பாமலே அவளிடமிருந்து, "பெண்ணே, சித்திரம் எப்படியிருக்கிறது?" என்ற கேள்வியொன்றும் உதிர்ந்தது.

"தத்ரூபமாக இருக்கிறது" என்றான் ஆதித்யன்.

அவன் குரலைக் கேட்டுச் சட்டென்று திரும்பிய பூங்கோதை, அத்தனை நேரமாக வண்ணக் கலவைகளை ஏந்தி நின்றது பணிப் பெண்ணல்ல என்பதையும், யாரை அத்தனை சிரமப்பட்டு சித்திரமாகத் தீட்டினாளோ, அவனேதான் என்பதையும் கண்டு பிரமித்தாள். அவள் இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. சந்தனத் தட்டில் கொட்டி விட்ட குங்குமமாக அவள் முகம் மாறியது. நாணமும் கோபமும் ஆற்றாமையும் போட்டியிட, அங்கிருந்து ஓடி விட முயன்றவளின் கால்கள் நகர மறுத்தன. தூரிகையை நழுவ விட்ட மலர்க் கரங்கள் முகத்தைப் பொத்திக் கொண்டன.

நாணமும் தவிப்புமாக முகத்தைப் பொத்தியபடி நின்ற பூங்கோதையைக் கண்ட ஆதித்யன், வண்ணக் கலவைகளின் பலகையைக் கீழே வைத்து விட்டு, அவள் முகத்தை மூடியிருந்த கரங்களை மெள்ள விலக்கினான். கவிழ்ந்து கிடந்த முகத்தை நிமிர்த்தி, படபடத்த அந்தக் கருவண்டுக் கண்களுடன் தன் கண்களைக் கலக்க விட்டான்.

ஆசையும் நாணமும் பொங்கிய கருவிழிகளின் மீது படபடத்த இமைகளும், நெற்றியில் துளிர்த்த குறுவியர்வையும், செவிகளின் நுனி சிவந்து கன்னத்துடன் போட்டியிட, துறவியார் அவளுக்கு அளித்திருந்த சிவந்த கற்கள் பதித்த

காதணிகள் தங்கள் பளபளப்பை இழந்து வெட்க, சங்கடத்தில் அவள் கால்களை மாற்றி அசைத்த போது ஒலிந்த மெல்லிடை ஆதித்ய னின் உயிரைப் பறிக்க, "அழகெலாம் ஒருங்கே கண்டால் யாவரே ஆற்றவல்லார்?" - என்று கோலங்காண் படலத்தில் கம்பன் வர்ணித்த நிலையை எட்டியிருந்தான் ஆதித்யன்.

"பூங்கோதை" என்று அழைத்த அவன் குரல் கரகரத்து நெகிழ்ந்து கிடந்தது.

குழலும் யாழும் உள்ளத்தை வருடி அளிக் கும் இன்பத்தை விட, மந்தரஸ்ருதியில் கர கரத்து தன் பெயரை உச்சரித்த ஆண்மகனின் குரல் அதிக இன்பத்தை அளிக்க இயலும் என் பதை உணர்ந்தாள் பூங்கோதை.

மீண்டும் அழைத்தான் அவன். "பூங் கோதை!"

"ம்" என்ற ஒற்றை ஒலியே பதிலாக வந்தது.

"வந்தது முதல் உன்னைக் காணத் துடித்துக் கொண்டிருந்தேன்."

"நானும்தான்."

"அப்படியொன்றும் தெரியவில்லையே?" அவன் குரலில் பொய்க் கோபம் தெரிந்தது.

அவள் புருவங்கள் நாணேற்றிய வில்லாக உயர்ந்தன.

"நான்தான் உன்னைக் காண மாளிகை முழுவதும் சுற்றி வந்தேன். நீ இருந்த இடத்தை விட்டு நகர்ந்ததாகத் தெரியவில்லையே?"

தான் சித்திரமாகத் தீட்டி அவளை ரசித்துக் கொண்டிருந்ததைத்தான் குறிப்பிடுகிறான் என்பதைப் புரிந்து கொண்டாள் பூங்கோதை. அவள் சிவந்த இதழ்கள் விரிந்து முத்துக்களைக் காட்டின.

கைவசமிருந்தால், அந்த முறுவலுக்குக் கொற்கையிலிருந்து காஞ்சி வரை பரிசாக அளித்து விடலாம் என்று தீர்மானித்தான் ஆதித்யன். "ஏன் பதிலில்லை பூங்கோதை?" என்றும் கேட்டான் அவன்.

"பேச்சில் மயக்குவதற்கு இந்த மதுரைக் காரர்களுக்கு கற்றுத் தரவா வேண்டும்?" என் றாள் அவள்.

"கொங்கு நாட்டுப் பெண்கள் வெகு அழுத் தக்காரிகள். மயக்குவது கடினம்" என்றான் அவன் மீண்டும்.

வெள்ளித் தட்டில் முத்துக்களை இரைத்தது போல நகைத்தாள் அவள்.

அர்த்தமற்ற பேச்சும், சிரிப்பும் நிரம்பிய மாயா உலகத்தில் சஞ்சரித்தனர் இருவரும். மாயை என்பது புரிந்தாலும் அதிலிருந்து விடு பட மனித மனம் விரும்புவதில்லையே!

ஆதித்யனைத் தேடியபடி வந்த துறவி யார், சிற்ப மண்டபத்தில் நுழைந்தார். உலகை மறந்து பேசிக் கொண்டிருந்த இருவரையும் கண்டவர் முகத்தில் முறுவலொன்று படர்ந் தது. பூர்வாசிரம நினைவு வந்ததாலோ என் னவோ தலையை ஒருமுறை உலுக்கிக் கொண் டவர் அந்த உலகத்தில் குறுக்கிட விரும்பாமல் திரும்பி நடந்தார்.

வெளியே வந்ததும் சற்று நிதானித்தவருக் குக் காடவ மன்னனின் நினைவு எழவே அவனை அடைத்து வைத்திருந்த சிறையை நோக்கி நடந்தார். சிறைச்சாலையின் உள் ளிருந்தபடி சாளரத்தின் வழியே துறவியார் வரு வதைக் கவனித்த காடவ மன்னன் கோப் பெருஞ்சிங்கனின் முகத்தில் விவரிக்க இயலாத உணர்ச்சிகள் தோன்றி மறைந்தன. அவன் கரத் தில் எங்கிருந்தோ ஒரு குத்து வாளும் தோன்றி யது. துறவியார் உள்ளே நுழையக் காத்திருந் தான் "வாள் நிலை கண்ட பெருமாள்" காடவ மன்னன் கோப்பெருஞ்சிங்கன்.

(தொடரும்)



"சொற்களில் அடங்காத சந்தோஷம்!"

எல். சண்முகசுந்தரி!

இருபத்தாறு வார 'சுருக்-நறுக்' ரேஸில் ஜெயித்த ராமநாதபுரத்துக்காரர். அங்கே ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியாவில் பணிபுரிபவரைப் பார்த்து, தங்க கைக்கடிகாரங்கள் இரண்டினைப் பரிசாகத் தரப் போன போது, "என் சந்தோஷத்தை வார்த்தைகளில் சுருக்கி விட முடியாது. நன்றி, நன்றி, நன்றி" என்று குதூகலித்துப் போய் விட்டார்!

சண்முகசுந்தரிக்குக் கிடைக்கிற முதல் பத்திரிகைப் பரிசு இதுதானாம். "எல்லா பத்திரிகைகளையும் படித்து விடுவேன். போட்டிகளில் பங்கேற்கும் ஆர்வத்தைத் தூண்டியவர் என் மாமாதான் (அக்காவின் கணவர்)!" என்றார்.

கல்கியில் 'சுருக்-நறுக்' போட்டி அறிவித்தவுடனேயே, "நீ நிச்சயம் கலந்து கொள். வெற்றி பெறுவாய்!" என்று உற்சாகமூட்டி, இவரை ஈடுபட வைத்திருக்கிறார் இவரது மாமா!

சண்முகசுந்தரி வேலை பார்க்கும் வங்கிக்கே சென்று நாம் பரிசை அளித்த போது, நம்மோடு சேர்ந்து அவரை வாழ்த்திய வங்கி மேலாளர், "இரண்டு கடிகாரங்கள் வந்து விட்டன... கட்டிக் கொள்ள இன்னொரு கை கூடிய சீக்கிரம் தேடி விட வேண்டியதுதான்!" என்று ஜோக் அடிக்க, "சரிதான். ஆபீசர் எக்ஸாம் எழுதி, உங்கள் சீட்டில் நான் அமர்ந்த பின்தான் திருமணம்" என்று மேனேஜர் எதிரிலேயே தன் லட்சியத்தைச் சொல்லி, வியக்க வைத்தார் சண்முகசுந்தரி!

- நமது நிருபர்

சுஜாதா பக்கம்



"நான் உன்னைப் பார்க்க விரும்புகிறேன், பேசு" என்றார் பென் ஜான்சன். நாம் பயன்படுத்தும் வார்த்தைகள் நம் நிஜ அடையாளத்தைக் காட்டிக் கொடுக்கின்றன. "ஏண்டா அம்பி நோக்கு ஆம்படையா வந்துட்டாளா?" என்று யாராவது பேசினால் உடனே அது தமிழ் சினிமா ப்ராமணன் என்று குட்டிக் குழந்தை கூடச் சொல்லிவிடும். தமிழ் மொழி பாரபட்சமானதா என்று தீவிரமாக யோசிக்கலாம். அப்படித்தான் தோன்றுகிறது. இடது கைக்காரர்களையே எடுத்துக் கொள்வோம். உலகின் ஐந்து சதவிகித இடதுகைக்காரர்களுக்கு மொழி நியாயம் தருவதில்லை என்று சொல்வதில் உண்மை இருக்கிறது. ஆங்கிலத்தில் 'டெக்ஸ்ட்ரஸ்' என்கிற வலதுகை வார்த்தை திறமை, சாமர்த்தியத்துக்கும் 'சினிஸ்டர்' என்னும் இடது கை வார்த்தை சதி பண்ணுபவர்களுக்கும் பயன்படுகிறது! தமிழில் வலது கைக்காரர்களை அவ்வளவு சிலாகிக்காவிட்டாலும் இடது கைக்காரர்களை நொட்டாங்கை, பீச்சாங்கை என்று கேலி செய்கிறோம். வலது காலை எடுத்து வைத்து உள்ளே வா என்று புது மணப் பெண்ணை வற்புறுத்துகிறோம். இதெல்லாம் பாரபட்சம்தான்!


கறுப்பு வண்ணமும் பல மொழிகளில் பாரபட்சமாகத்தான் பயன்படுத்தப்படுகிறது. கரிய எண்ணங்கள், கரும்புள்ளி போன்ற வார்த்தைகள் உதாரணம். ஆனால் ஆங்கிலத்தில்போல் தமிழில் பாரபட்சம் அதிகமில்லாததற்குக் காரணம் நாமே கறுப்பு. நம் கடவுள்களிலும் பலர் கறுப்பு. 'மழை வண்ணத்து அண்ணலே' என்றும் 'மையோ மரகதமோ' என்றும் கம்பரும் 'காயமலர் நிறவா கருமுகில்போல் உருவா' என்று ஆழ்வாரும் நம் நாட்டுப்புற தாலாட்டுக் கவிஞர்களும் கரிய நிறத்துக்கு மதிப்புக் கொடுத்து விட்டார்கள். ஆனால் பெண் சம உரிமை நம் மொழியில் அதிகம் இல்லை என்பதற்குப் பல உதாரணங்கள் கிடைக்கின்றன.

புலவர் இருக்கிறார். புலவி இல்லை. (வேறு அர்த்தம்). கவிஞன் இருக்க கவிதாயினி இந்த நூற்றாண்டின் கடைசி வருஷங்கள் வரை காத்திருக்க வேண்டியிருந்தது. முனைவர் உள்ளார்; முனைவி இல்லை. எழுத்தாளருக்கு எழுத்தாணி இருக்கிறது, எழுத்தாளி இல்லை. 'அர்' விகுதி ஆண்களுக்கு மட்டும் தானா என்று கேட்கத் தோன்றுகிறது. (ஆசிரியர்-ஆசிரியை). திரு என்று ஒருவரை குறிப்பிடும்போது அவருக்கு கல்யாணம் ஆகியிருக்கத் தேவையில்லை. ஆனால் திருமதி கட்டாயம் மணமானவள். பெண்களை பேதை, பெதும்பை மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என்று நுட்பமாக வயசுப்படி வகைப்படுத்துவது ஆண்களுக்கு உள்ளதோ? விதவை- கைம் பெண் இருக்கும்போது விதவன், கைம்மாண் ஏன் இல்லை? கற்பு பெண்களுக்கு மட்டும்தானா? ஆண்கள் கற்பழிக்கப் படுவதில்லையே ஏன்? பரத்தை உள்ளது; பரத்தன் இல்லை? நம் மொழியில் இந்த பாரபட்சங்களை முதலில் நீக்க வேண்டும். 'பெட்டை' என்பது 'பொட்டை' என்று மாறி பெண்களைத் திட்டும் வார்த்தையாகப் பயன்படுத்துவது ஒழிய வேண்டும்.

மேலும் சில நவீன காரியங்களுக்கும் சாதனங்களுக்கும் புதிய வார்த்தைகள் வேண்டும். ஜிப், வெல்க்ரோ, கிரிக்கெட் மற்றும் தொலைபேசுவதன் முன் டயல் செய்வதற்கு அல்லது பட்டன் ஒத்துவதற்கு வார்த்தைகள் வேண்டும். நான், நீ, அவர்கள், இவர்கள் எல்லாம் இருபாலருக்கும் பொதுவாக இருக்கும் போது ஏன் இவன் அவன் இவள் அவள் என்று முன்னிலை ஒரு மெய்க்கு மட்டும் வித்தியாசம் என்று தெரியவில்லை. இவ, அவ இரண்டு மட்டும் போதுமே? தன்னலம் சுயநலம் போன்ற வார்த்தைகள், கெட்ட குணமாகத்தான் பயன்படுகின்றன. தன்னைச் சரியாக கவனித்துக் கொள்வதற்கு ஒரு யோக்கியமான வார்த்தை தேவை (தற்காத்தல்). தன்னம்பிக்கை, தன்மானம் இவைகளுடன் தன்னேசத்தையும் சேர்க்க வேண்டும். கோபத்துக்கு ஒரே ஒரு வார்த்தைதான் உள்ளது. இலேசான கோபம், கடுங்கோம், பொய்க்கோபம் போன்றவற்றிற்கு ஒற்றை வார்த்தைகள் கிடைத்தால் உத்தமம். காதலிப்பது என்னும் வினை வடிவம் போல அன்பு செலுத்துவதற்கும் பாசம் காட்டுவதற்கும் தேவைப்படுகிறது. அசட்டுச் சிரிப்பு, சாகசச் சிரிப்பு போன்றவற்றுக்கெல்லாம் வார்த்தைகள் வேண்டும். நண்பனுக்கு பெண்பால், நண்பி பரவாயில்லை. வேறு வார்த்தை உண்டா கேர்ள் ப்ரெண்டுக்கு? கல்யாணமாகாமல் உடன் வாழும் தம்பதிகளுக்கு ஒரு வார்த்தை வேண்டும் (உடன் படுக்கை?) கணிப்பொறி இயலிலும் தொலைக்காட்சி தொடர்பாகவும் பல தொழில் வார்த்தைகள் தேவையாக உள்ளன. சமூக அநியாயங்களை பிரதிபலிக்கும் வார்த்தைகளைத் திருத்த வேண்டியதும் முக்கியம். பரத்தை என்ற வார்த்தை வழக்கொழிந்தது இந்த ப்ரக்ஞையால்தான். மேலும், ஏறிட்டாள் போன்ற வார்த்தைப் பிரயோகங்களும் விபரீத அர்த்தங்கள் தருவதால் எச்சரிக்கை தேவை. அதுபோல் இந்திய மொழிகளில் மொழி பெயர்க்கும்போதும் எச்சரிக்கை தேவை. ஒரு மொழியில் நல்லவார்த்தை மற்றதில் கெட்டவார்த்தையாகி விடும் அபாயங்களை அறிய வேண்டும். கன்னடத்தில் 'பஜாரி' என்றால் சாமர்த்தியக்காரி. 'தாளி' என்றால் கொஞ்சம் இருங்கள் என்று அர்த்தம். ஒரே ஒரு வார்த்தை சரியாக மொழிபெயர்க்காததால் பல் லாயிரக்கணக்கானவர்கள் செத்துப் போயிருக்கிறார்கள். அதை மற்றொரு சந்தர்ப்பத்தில் சொல்கிறேன்.

(மீண்டும் அடுத்த வாரம்)


ஆஹா..ஓஹோ...




"உங்க திட்டம் பிரமாதம்! எதுக்கும் காங்கிரஸ், சி.பி.ஐ., சி.பி.ஐ. (எம்), ஜனதா தளம், தி.மு.க., தெலுங்கு தேசம், த.மா.கா., ஏ.ஜி.பி... இந்தக் கட்சிக்காரங்களையெல்லாம் கேட்டுட்டு மேற்கொண்டு உங்களோட பேசறேன்...."



"இடைவிடாத சண்டை சச்சரவு, அர்த்தமில்லாத வாக்குவாதம், முட்டாள்தனமான ஆணைகளையெல்லாம் சகிக்க முடியாதுன்னா... இந்தக் கட்சியில் உனக்கென்ன வேலை...!"



"மத்தியில் ஒண்ணு மாநிலங்களுக்கு ஒண்ணுன்னு இரண்டு விதமான கொள்கைத் திட்டம் நாம வகுத்தாகணும்."



"பாருங்க, அயல்நாட்டு முதலீட்டாளர்கள் தொடர்பான எங்க கொள்கை முடிவாயிடுச்சு..."

- இந்தியன் ஃபீச்சர்ஸ் ஸிண்டிகேட்

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

மனநிம்மதியான முதலீடு – பரிபூரண பாதுகாப்பு (TM)

உங்கள் டெபாசிட்டுகள் T. நகரில் உள்ள பிரதான அசையா சொத்தால் (டோர் நம்பர். 27 G, பிளாக் 5488/1, ராமேஸ்வரம் ரோடு) பாதுகாக்கப்படுகிறது.

படித்த அனுபவம் மிக்க நிபுணர்களின் சீரிய நிர்வாகம்	கௌரவமான வருமானம்	மரியாதையான சேவை

பென்ஷனர்/பொதுஜன பாதுகாப்புத் திட்டம் (TM)

1 வருடம் : 24% + 4% இன்சென்டிவ் P.A.
2 வருடம் : 24% + 6% இன்சென்டிவ் P.A.
3 வருடம் : 30% + 2% இன்சென்டிவ் P.A.
5 வருடம் : 36% P.A

வாடிக்கையாளர் வசதித் திட்டம் (TM)

எப்போது வேண்டுமானாலும்	30 தினம் 18%
பணம் எடுத்துக் கொள்ளலாம்	45 தினம் 19%
புதுப்பிப்பதற்காக வர	60 தினம் 20%
வேண்டிய அவசியம் இல்லை	90 தினம் 21%

முன்கூட்டிய வருவாய்த் திட்டம்: (TM) முழு வட்டியும் டெபாசிட் செய்யும் தேதியன்றே தரப்படும். 1 வருடம்: 20%, 3 வருடம் : 55%.

மாதப் பென்ஷன் திட்டம்: (TM) டெபாசிட் ரூ. 10,000. காலம்: 5வருடம்; மாத வட்டி ரூ. 320

சுமங்கலி கல்யாணத் திட்டம் (TM) மேக்சிமம் இன்கம் ஸ்கீம் (TM)

டெபாசிட்	காலம்	முதிர்வுத் தொகை
ரூ. 5,000	3 வருடம்	ரூ. 12,000
ரூ. 10,000	3 வருடம்	ரூ. 24,000
ரூ. 20,000	3 வருடம்	ரூ. 48,000

குழந்தைகள் எதிர்காலப் பாதுகாப்புத் திட்டம் (TM)

டெபாசிட்	காலம்	முதிர்வுத் தொகை
ரூ. 1,000	15 வருடம்	ரூ. 37,000
ரூ. 5,000	15 வருடம்	ரூ. 1,85,000
ரூ. 10,000	15 வருடம்	ரூ. 3,70,000

பெஸ்ட் பாண்ட் ஸ்கீம் (TM)

டெபாசிட்	காலம்	முதிர்வுத் தொகை
ரூ. 1,000	10 வருடம்	ரூ. 12,000
ரூ. 5,000	10 வருடம்	ரூ. 60,000
ரூ. 10,000	10 வருடம்	ரூ. 1,20,000

தாத்தாவின் பரிசுத் திட்டம் (TM)

டெபாசிட்	காலம்	முதிர்வுத் தொகை
ரூ. 1,000	15 வருடம்	ரூ. 37,000
ரூ. 5,000	15 வருடம்	ரூ. 1,85,000
ரூ. 10,000	15 வருடம்	ரூ. 3,70,000

பெஸ்ட் பெனிபிட் அண்டு கேரண்டி பண்ட் டிரஸ்ட் (Regd) (நிறுவியது : 1979)
பெஸ்ட் பெனிபிட் பண்ட் லிமிடெட்

தலைமை காரியாலயம் : 3வது மாடி, சாந்தி காம்ப்ளெக்ஸ், 26, ரங்கநாதன் தெரு, மாம்பலம் ரயிலடி சமீபம். T. நகர், சென்னை - 17.

கிளை : 7, முதல் மாடி, ஸ்டேஷன் ரோடு, தாம்பரம் சானடோரியம், சென்னை - 47.

கிளை : 5, 2வது மெயின் ரோடு, நியூ காலனி, குரோம்பேட்டை, சென்னை - 44.

கிளை : 13, காலேஜ் ரோடு, நங்கநல்லூர், சென்னை - 114.

சொத்து பாதுகாப்பு,
மாத வட்டிக்கும், அசலுக்கும்
முன்கூட்டியே செக்.

உங்கள் வீட்டிற்கும் வந்து சேவை செய்கிறோம். போன் : 4348560, 4347025.

BBGFT - பாதுகாப்பின் சின்னம்

Prof. V. விவேகானந்த்
B.Com., (Distn), DOA (Distn), M.B.A (Distn), CAIIB
(All India First), EKSAMD (West Germany)
(Distn), IAS (Topper)
Managing Director

Dr. பரமேஸ்வரி, M.B.B.S.
Chairman

(TM) :Trade Mark

சேமிப்பு கணக்கு 14%

எல்லா காரியாலயங்களும் ஞாயிறும் திறந்திருக்கும்